தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௪	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௰ சருவதாரி—தை, மாசி, பங்குனி 1949—சனவரி, பிப்ரவரி, மார்ச்சு	மலர் ௰, ௰௧, ௰௨

பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

தமிழ்ப் பொழில்

திருவருட் பெருக்கால் இப் பங்குனி மலருடன் நம் பொழிலின் இருபத்து நான்காம் துணர் நிறைகின்றது. சென்ற ஓராண்டின் மேலாக நம் பொழில் மலர்கள் ஒவ்வொரு திங்களும் முறையாக வெளிவரத் தடை நேர்ந்தது. தாள் கிடையாமை முதலிய பல பொருட்டுக்கள் பொழி லன்பர் சலிப்பிற்கு இலக்காயின. இருந்தாலும் அன்பர்கள் இவற்றை யெல்லாம் மனதிற் கொள்ளாது. பொழிலைப் புரந்து மகிழ்ந்துவந்தமைக்கு யாம் பெரிதும் நன்றி பாராட்டுகின்றோம்.

சித்திரை முதல் இருபத்தைந்தாவது துணர் தொடங்கும். திங்கள் தோறும் தவக்க மின்றி மலர்வதற்கு திருவருள் துணை நிற்பதாக.

அன்பர்கள் தம் வழக்கமான ஆதரவு தந்து பொழில் வளர்த்து மகிழ்வார்க ளென்று நம்புகிறோம்.

தமிழ்த் தொண்டு.

இந்த ஆண்டில் தமிழ்த்தாயின் பணியில் ஈடுபட்டு நம் மொழி வளர்ச்சிக்காகத் தமிழ்ப்பெரு மக்கள் தனித்தும், குழுமியும் தொண்டாற்ற ஆர்வம் கொண்டு எழுந்தது பெரிதும் போற்றிப் பாராட்டத் தகுந்த தாகும். இத் துறையில் பல்லாண்டு முன்னரே வழி காட்டியவர்கள்

திருப்பனந்தாள் மடத்துத் தலைவராவார்கள். தருமபுர நிலையத் தலைவர் அவர்களும் பேர் ஆர்வங் கொண்டு பெருந் தொண்டு பூண்டு சிறிதும் பெரிதுமான பலப்பல நூல்களும் திங்கள் இதழும் வெளியிட்டு மகிழ்கிறார்கள். திருவாவடுதுறைத் தலைவர் அவர்களும் இத் துறையில் முனைந்து முற்பட்டு பழந் தொண்டு புதுக்கி யுள்ளார்கள். தமிழ் வெளியீட்டு நிலையங்களும், எழுத்தாளர்களும், பேச்சாளர்களும், ஆசிரியர்களும் தத்தமக் குரிய செயலளவில் உண்மைத் தமிழ்ப் பணி யாற்ற முன் வந்துள்ளார்கள். சென்னைக் கல்வி மந்திரியார், மேன்மை மிக்க திருவாளர். தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களது அருந்துணை கொண்டு சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் மேற் கொண்டுள்ள கலைக் களஞ்சியத் தொகுப்பு முயற்சி இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத் தகுவ தாகும்.

சிறியனவும், பெரியனவுமாகிய பல அரிய நூல்கள் வெளி வந்துள. சிறந்த பல கிழமைத் தாள்களும், திங்கட் டாள்களும் தோன்றுவன வாயின. தோன்றிய நூல்களையும், தாள்களையும் ஆதரித்துத் தக்க விலை கொடுத்து வாங்கிப் படிக்கத் தமிழ் மக்கள் ஆர்வங் கொண்டுள்ளனர், படித்து மகிழ்கின்றனர். தமிழ் மொழி மேம்பாட்டில் தமிழ் மக்கள் எல்லாருமே கொள்கை வேற்றுமை யின்றி ஒரே கருத்தாகப் பணியாற்ற முன் வந்துள்ளார்கள் 'என்று சொல்லலாம். இது நம் அருமைத் தமிழ்த் தாய்ப் பணி நாளும் நாளும் சிறந்து வளர்வதற்கு ஆன நற் குறியும் நற் காலமும் ஆகும்.

இந்த நற் பொழுதில் சிலர் தமிழ் மொழி மேம்பாட்டிற்கு மாறாக இயற்றி வரும் சிறு இடையூறுகளையும் சூழ்ச்சிகளையும் பெருந் தன்மையும் சிறந்த மனப் பான்மையும் இயற்கையில் அமையப்பெற்ற தமிழ்ப் பெருங்குடி மக்கள் சிறிதும் விரும்பவில்லை. அத் தகைய சிலர் தாமும், அத் தகைய சிறு நெறியைத் தவிர்வார்களாக.

ஒரு குறிப்பு.

பொழிலன்பர்களிற் சிலர், இதில் வரும் கட்டுரைகளிற் சில, மிகக் கடுமையான நடையினையும் மிக மயக்கமுடைய பொருளினையும் கொண்டுள்ளன எனக் கருதுவது உணர்கின்றேம்.

பொழிலின்நோக்கம், அரியபொருள்களையும் எளிதின் உணர்த்திப் பயன்படச் செய்தலே யாகலின், அதற்காகும் முறையில் பொழில் வெளிவரச் செய்வதில் மிக்க கருத்துடையேம். எனினும் பின் வருங் குறிப்புக்களை அன்பர்கள் கருதுதலும் பொருந்துவதாகும்.

நமது தமிழ் நாட்டில் பற்பல வகையான நாள் இதழ்கள், கிழமை இதழ்கள், திங்கள் இதழ்கள், (நாள், வாரம், மாதப் பத்திரிகைகள்) வெளி வருகின்றன. இளஞ் சிறுர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், சட்டம், மருத்துவம் முதலாய கலைக் கல்லூரி மாணவர்கள், தொழிற் றுறையாளர், அரசியலார், அரசியற் கொள்கை வேறுபாட்டினர், சமய நெறியினர், மொழி வளர்ச்சியாளர் என்னும் இன்ன பற்பல வகையினர்க்கும், அவரவர் தகுதிகட்கும், மனப் போக்கிற்கும் ஏற்றவாறு, அவ்வவர் இதழாக வெளிவரும் ஒவ்வொரு இதழும், சொல் நடை, பொருணிலைகளால் பல்வகை வேறுபாடு கொண்டு நிகழுவது இயற்கையே யாகும். எந்த ஒரு தாளும், ஏனைய எல்லாரது மகிழ்ச்சிக்கும், ஒப்பத்திற்கும் உரிய சொன்னடை, பொருள் நிலைகளைக் கொண்டுளதாக இருத்தல் ஏலாத தாகும். ஒரு சாரார்க்கு உரிய ஒரு தாள், அன்னவர் சிறப்பு அறிவு, மன உணர்ச்சி முதலியவைகளை நோக்கியே எழுவ தொன்ருகும். பிற சில இதழ்களின் நடைகளில், புலவர்கள் புகுந்து, பத்து வகைக் குற்றங்களையும் ஆய்ந்து கொண்டிருத்தலும், வேற்று மொழிக் கலப்புக்களை எடுத்துக் காட்டிக் கொண்டிருத்தலும் போல்வன பயனிலவன்ருே! அங்ஙனமே, நமது பொழில் போன்ற மொழி வளர்ச்சி கருதி வரும் செந்தமிழ்த் தாள்களில், மொழிப் புலமை ஆக்கம் தேடும் நோக்கம் இல்லாத பொது அறிவினர்

இவ்விடம் மிக மிடுக்கான நடை, இவ்விடம் மிக எளிதிற் புலனுகாத நுணுக்கப் பொருள் கொண்ட மயக்கமான பகுதி என்றெல்லாம் கூறி யொழிவதிலும் பயன் இல்லை.

சமய வளர்ச்சி, மொழி வளர்ச்சி கருதி வரும் வெளியீடுகள், அவ்வச் சமய நூல்கள், மொழி இலக்கண இலக்கியங்கள் இவற்றின் நுண் பொருள்களை, பொது அறிவுடன் அவ்வத் துறை அறிவும் வேண்டினுர்க்கு, எடுத்துரைக்க வரும் வெளியீடு களாகும். அந்தந்தத் துறையில் புலமை ஆக்கம் கருதும் பொது அறிவினர்க்கே அவை சிறப்பாக பயன் தருவன ஆகும். இளை ஞர்கட்கென வெளி வரும் பொதுவகை இதழ்களாய், நகைச் சுவை முதலியனவே நுதலும் பொருள்களாகக் கொண்டு, சொற் குற்றம் சொற்ருெடர்க் குற்றம் முதலியன கருதுதற்கு உரியன ஆகாவாய், வெளிவரும் சிலவற்றைப் போல், இத்தகைய வெளி யீடுகளும் வெளிவரற்குரியன ஆகுமா ?

இவற்றிற் குறிக்கப் பெறும் நுண்ணிய பொருள்கட் கேற்ப, உரை நடையும் சிறப்புடையனவாக விருத்தல் வேண்டு மன்றே! மேலாகப் பார்க்குமிடத்தே உட் கருத்தெல்லாம் புலனுகுமா றில்லையே என்ருெழியாது, அமைதியுடன் ஆராய்ந்து உணரப் புகும் பொதுஅறிவினர்க்குப் புலனுகாத இடனும் ஒன்றுண் டோ! இல்லையன்ருே! மேனேக்காகக் கண்டு நெகிழ்ந்து அகல் வார்க்கு அமைதி யளிக்கும் இடம் இத்தகைய இதழ்களில் காண் பது அருமையே!

எனவே, நம் பொழிற் கட்டுரைகளை மேனேக்கமாகக்கண்டு குறை கூறுவார், அருள் கூர்ந்து, பொறுமையுடன் ஆழ்ந்து ஆய்ந்து உணர்ந்து, மகிழ வேண்டுகின்ருேம்.

இனி, கட்டுரை எழுதும் புலவர்களும், தமிழ்ப் புலவர் கட்கே யன்றி, பொது அறிவு வல்லார் எவர்க்கும் புலனுகி, தமிழ்ப்புலம் விளைத்து மகிழ் வுறுத்தலே, தம் முயற்சியின் பயனுதலை உணர்ந்து, அத் தகையோர்க்கும் இனிது விளங்கத் தம் செந்தமிழ் நடைகளைக் கூடுமளவில் எளிதாக்கியும், மிக நுண்ணிய பொருண் முடிபுகளை எளிதாக முடித்தும் எழுதி யருளுமாறு அன்னவரை வேண்டுகின்ருேம்.

இந்து மத அற நிலையங்கள்.

இந்து மத அற நிலயங்கள் ஒழுங்காக நடைபெற வேண்டியதற்கான சட்டமொன்று சென்னைச் சட்டக்குழுவின் ஆராய்சிக்கு வந்திருக்கிறது. இந்து மதச் சார்பாகவோ அரசியலார் சார்பாகவோ இந்தச் சட்டம் குறித்து ஆராயும் தொடர்பு நமக்கு இல்லை,

இந்த அற நிலயங்களில் பல நம் தமிழ் மொழி குறித்த தொடர்பு கொண்டுள்ளமையின் இந்த அளவில் எம் கருத்தைக் கூறக் கடமைப்பட்டுள்ளோம். இந்த அற நிலயங்களின் ஆட்சியாளர்கள் ஒரோரு கால் தம் பொறுப்பை மறத்தலும் கூடும். அவ் வப்பொழுது, அந்த நிலயங்ஃளின் அடியார்கள், அப்பொறுப்பை ஆட்சியாளர்க்கு நினை வூட்டுதல் வேண்டும். அங்ஙனம் நினை வூட்டுதல் அடியார்கள் கடமையே அன்றி அரசியலாரோ சட்டங்களோ குறுக்கிட வேண்டும் என்பதில்லை. அங்ஙனம் குறுக்கிடுதல் அந் நிலையங்களுக்கும், அந் நிலயங்களை ஒழுங்கு பெற நடத்தும் பொறுப்பினைப் பெற்றுள்ள பிற பற்றற்ற துறவிகளுக்கும் இழிவாகும். இத் தகைய இழிவைத் தேடுதல் அடியார்களுக்கு முறையாகாது.

அன்றியும், அற நிலயங்களுக்குத் தலைவராகவுள்ள நன்மக்களுக்கு மேலாகவோ துணையாகவோ பிற செயலாளலர்களைச் சேர்த்து வைப்பது பெரும்பாலும் அவர்களுக்குள் மாறுபாடு விளைப்பதற்கும் கொண்ட கருத்து முற்றுப்பெறாது போவதற்கும் பொருட்டாக முடிகின்றது.

இருவரும் ஒத்து வினையாற்றி நிலையங்கள் சிறப்புறச் செய்வது எங்கோ ஒன்றிரண்டு நிலையங்களில் காணப்படுவ தன்றி பெரும்பாலும் குறைபாடுடையதாகவே முடிகின்றது.

அன்றியும், நிலையத் தலைவர்களிடம் குறை கண்டபோது அவ்வப்போது எடுத்துக்காட்டித் தெருட்டிச் சீர்ப்படுத்துவது முறையாகுமேயன்றி அந்தப் பெருமானுக்கு மேல் பெத்த பெருமானை இருத்திவைப்பது சீர்கேடாகுமே ஒழிய சீராக்க மாகாது.

இவற்றையெல்லாம் விட நாம் இதுபோது கருதத் தக்கது பொதுமக்கள் கருத்துணர்ந்தும் அடியார்கள் நோக்கம் உணர்ந்தும் அறநிலையத் தலைவர்களெல்லாம் தம் குறைபாடுகளிலிருந்து விலகி நன்னெறி யொழுகித் தம் பணி களைச் செவ்வனே ஆற்றி வருகிறார்கள் என்பதாம். மொழி வளர்த்தும், கலைபெருக்கியும் தம் திருத்தொண்டு மிகுத்தும் கடனாற்றி வருகிறார்கள்.

இந்த நிலையில் அந்த அற நிலையங்களின் நடைபேற்றினை மாற்றவும், அதற்கெனச் சட்டம் ஒன்றாக்கவும் இன்றியமை யாமை ஏதும் இல்லை என்று கருதுகின்றோம்.

நன்றியுரை

நம் சங்கம் இப்பொழுது பொருள் முட்டுப்பாடு உற்றிருப்பதும், அதனால் இன்றியமையாது ஆற்றவேண்டிய பணிகள் பல தடையுற்றிருப்பதும் அன்பர்கள் அறிவர். பொருள் வருவாய் வழிகளுள், திக்கற்ற மாணவர் இல்லப் பிள்ளைகளுக்கும், புலவர் கல்லூரியில் வித்துவான் தேர்வுக்குப் பயிலும் பிள்ளைகளுக்கும் உணவுக்காக வேண்டி, வேளாண் மக்கள் பலர் உதவி வந்த நெல் ஒன்றாகும். அரிசிப் பங்கீடு வந்ததால், சென்ற பல ஆண்டுகளாக இந்த வருவாய் நின்றிருந்தது. அரிசிப் பங்கீடு எடுபட்ட வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு நம் சங்கத் தலைவர் நம் வேளாண் மக்கள் பலருக்கும் 5—2—48இல், அடியிற் காணுமாறு, வேண்டுகோள் செய்து கொண்டார்கள்.

> 'நம் சங்கத்தில் ஒரு திக்கற்ற மாணவர் இல்லம் இருப்பதும், அதில் நாற்பது பிள்ளைகள் வரையில் இலவசமாக உண்டி, உறையுள், படிப்பு முதலியன பெற்றுவருதலும் தாங்கள் தெரிந்திருப்பீர்கள்.
>
> இன்னும், சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் தேர்வுக்குப் பயிற்றுவதற்காக ஒரு புலவர் கல்லூரியும் நடைபெற்று வருகிறது. இதில் படிக்கும் ஐம்பது பிள்ளைகள் இலவச உணவும், படிப்பும், உறையுளும் பெற்று வருகிறார்கள்.
>
> இவர்கட்கு ஏறக்குறைய ஆண்டுக்கு ஆயிரக் கல நெல் வேண்டியிருக்கிறது. அரிசிப் பங்கீடு வரு முன் தாங்களும் தங்களை யொத்த வேளாண்

பெரு மக்களும் நெல் நன்கொடை உதவி வந்தமை அறிவீர்கள். அரிசிப் பங்கீடு வந்தவுடன், இந்தக் கொடைக்கு இடையூறு நேர்ந்தது. இப்பொழுது அரிசிப் பங்கீடு நீங்கிவிட்டபடியால், முன் போலத் தங்கள் அன்புதவியைப் பெரிதும் நாடும் ஆவல் கொண்டுள்ளோம்.

தாங்கள் தங்கள் வழக்கமான அருள் வள்ளண்மையுடன் முன்னையினும் மிகுதியாக நெல்லுதவி புரிந்து, சங்கத்தைப் புரந்து, ஏழை மாணவ மக்களையும் காப்பாற்றி, ஆதரிக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன்.'

இவ் வேண்டுகோள் தக்க பயனைத் தருவதாயிற்று.

சங்கத்திற்கு நெல் உதவிவரும் தமிழன்பர்களை மிக மிக மகிழ்வுடன் நம் தமிழ்ப்பொழிலில் வெளியிட்டு நன்றி பாராட்டுகின்றேம்.

கழார்

திரு. நா. நல்லொளியன்,
மூன்றும் வகுப்புப் புலவர் மாணவர், அண்ணுமலைநகர்.

பைந்தமிழ் நாட்டின் பல ஊர்களின் உண்மைப் பெயர், வரலாறு முதலியவைகள் தெரியாத நிலையி லுள்ளன. பல நூற்றுண்டுகளுக்கு முன் வழங்கிய பெயர்கள் பல இன்று மறைந்தே விட்டன. சங்க இலக்கியங்களில் காணப்படும் சில ஊர்கள் எங்குள என்று அறிவதும் கடினமாய் விட்டது. ஆயினும், பல ஊர்கள் இப்பொழுது புலனுகி வருகின்றன. செந்தமிழ் இலக்கியங்களால் சிறப்பித்துக் கூறப்படும் கழார் என்னும் ஊரைப் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்க மாகும்.

நம் நாட்டில் ஊர்களின் பெயர்கள் பெரிதும் ஏதுக் கருதியே முன் ஞளில் இடப்பட் டிருந்தன. மூங்கில் மரங் கள் மிகுந்துள்ள ஊர்களுக்கு வேணூர் அல்லது வேணு புரம் அல்லது மூங்கில் தோட்டம் என்றும், மா மரங்கள் மிகுந்த ஊருக்கு மாங்குடி அல்லது மாந்தோப்பு என்றும், தேற்று மரங்கள் சூழ்ந்த ஊருக்குத் தேற்றுகுடி என்றும், மரை கள் மிகுந்த இடத்திற்கு மரைக்காடு* என்றும், யானைகள் மிகுந்த மலைக்கு ஆனைமலை எனவும் பெயர்கள் வழங்கி வந்துள்ளன. அதுபோலக் கழார் என்பதும் கருப் பொருளின் சிறப்பா லுற்ற பெய ராகும். கழை—மூங்கில், கரும்பு என்னும் பொருளைத் தரும் பல பொரு ளொரு சொல். ஆதலால், கழை கள் மிகுந் துள்ளமையைக் குறிக்கும் வகையில், கழை + ஆர் = கழார் என்று காரணங் கருதியே இடப்பட்ட பெயர் என்றும் அறியலாம்.

கழாரைப் பற்றி அறிதற் குரிய கருவிகள், அகநானூறு, குறுந்தொகை, சிலப்பதிகாரம், தொல்காப்பியப் பொருளதிகார

* மரைக்காடு—இன்று வேதாரணியம் என அழைக்கப்பட்டு வருகிறது.

நச்சினார்க்கினியர் உரை, தேவாரங்கள், கல்வெட்டுக்கள் முதலியன வாகும்.

காவிரி கடலிற் புகும் பூம்புகாரில், இமயத்தில் புலிக் கொடி நாட்டிய கரிகாலன் என்னும் திருமா வளவன் ஆட்சி புரிந்தான். அவன் 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி' யின் முன்றுறையில் நீர் விழவிற்கு விருப்புற்று, 'கழார் முன்றுறை' க்குத் தன் மகள் ஆதிமந்தியுடன், அவள் காதலன் சேரன் ஆட்டனத்தியும், அரசியற் குழுவினருஞ் சூழச், சிறப்பெல்லாந் திகழ வந்து நீராடினன். இதனை,

'ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த வின்னிசை
யொண்பொறிப் புனைகழல் சேவடி புரளக்
கருங்கச்சி யாத்த காண்பி னவ்வயிற்
றரும்பொலம் பாண்டின் மணியொடு தெளிர்ப்பப்
புனையங் தாடு மத்தியணி நயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு'[1]

என்றும்,

'கழார்ப் பெருந்துறை விழவி னாடும்'[2]

என்றும் அகப்பாட்டுக்கள் கூறுதலால் அறியலாம். ஆகவே, கழார் என்னும் நகரம் காவிரி யாற்றின் அருகில் உள்ள தென்பதும், அங்கே காவிரியில் ஒரு முன்றுறை யுண் டென்பதும் பெறப்பட்டது. இத் தகைய இடம் காவிரியில் யாங் குளது என ஆராய்வோம்.

ஆறுகள் ஒன்றோ டொன்று கலக்கும் இடத்திற்கும், மக்கள் மிகுதியாக நீராடற் குரிய நீர்ச் சிறப்புப் பொருந்திய துறைக்கும், அரசன் நீராடும் சிறப்புப் பொருந்திய துறைக்கும் முன்றுறை என்று பெயர் வழங்கிய தென்பதைச் சங்க இலக்கியங்களால் அறிகின்றோம்.

---

1. அகநானூறு, 376. 2. அகநானூறு, 222.

இப்பொழு துள்ள காவிரியின் முன்றுறைகளிலும் அதன் கிளை நதிகளின் முன்றுறைகளிலும் ஆராய்ந்து காணும் போழ்து, கரிகாலன் சென்று தங்கியதற்குச் சான்று பகர்வன ஏதும் கிடைத்தில. ஆனல், மாயூரம் கூற்றத்தில் (தாலுக்காவில்) பழவாறு என்னும் யாற்றுடன் மண்ணியாறு கலக்கும் முன்றுறையில் 'காவளமேடு' என்ற ஓரூர் உள்ளது. இவற்றின் ஆற்றிடைக் குறையில் பாக்கம் என்னும் சிற்றூர் இருக்கிறது.

'கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்' காவிரியின் கழார் முன்றுறைக்கு வந்து தங்கி விழவு நீராடற்கு என்று முன்றுறையின் கரையில் ஒரு சிறந்த இடம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அரசன் தங்குதற் குரிய இட மாதலால், எல்லா வளமும் சிறந்திருக்குமாறு செய்யப்பட்டது ஆதலாலும், கரிகாலனின் பொருட்டாகவே ஏற்படுத்திய இட மாதலாலும், அதற்குக் 'கரிகால் வளவன் மேடு' எனப் பெயரிட்டனர் போலும். அது காலப் போக்கில் மக்களால் கால்வளவன் மேடு, காவளவன்மேடு, காவளமேடு எனக் கூறப்பட்டு, இன்றும் காவளமேடு என வழங்கி வருகின்றது.

பழவாற்றின் முன்றுறை காவிரியின் முன்றுறை யாகுமா என்பதையும் சற்று ஆராய்வோம். ஈழத்திலிருந்து வினைஞர்களைக் கொண்டு வந்து, கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டினன் என்று பண்டை இலக்கியங்களும் வரலாறும் விளம்புகின்றன. ஒருபே ராறுகவந்ததைப் பல கால்களாய்ப் பிரிந்தோடச்செய்து, 'காடு கெடுத்து நாடாக்கி,' வளம் பெருக்கிய பெருவளத்தான், காவிரியின் சில பகுதிகளை வெட்டிக், குணக் கொழுகச் செய்தான். ஆதலால், புதிதாக வெட்டப்பட்ட பகுதியி லுள்ள ஆற்றிற்குக் காவிரி யாறு எனவும், பழமையாக ஓடிய ஆற்றிற்குப் பழைய காவிரி யாறு எனவும் பெயர். இப் பெயர் பல ஆண்டுகள் நாட்டில் நிலவி வந்துள்ளது என்பது, 'ஆளுடைய அரசு' எனச் சிறப்பிக்கப்படும் திருநாவுக்கரசு நாயனர் தல யாத்திரை செய்து, தலங்கள்தோறும் பதிகங்கள் பாடி, இறையை வழிபட்டு வருகையில், ஒரு பொழுது, பழவாற்றின் வட கரையி

லமைந்துள்ள திருக்குரக்குக்கா என்னும் தலத்திற்கு வந்து பாடிய திருப்பதிகத்தில்.

மரக்கொக் காமென வாய்விட் டலறிநீர்
சரக்குக் காவித் திரிந்தய ராதுகால்
பரக்குங் காவிரி நீரலைக் குங்கரைக்
குரக்குக் காவடை யக்கெடுங் குற்றமே.

மிக்க னைத்துத் திசையும் அருவிகள்
புக்குக் காவிரிப் போந்த புனற்கரை
சொக்கி னம்பயில் சோலைக் குரக்குக்கா

எனக் கூறியுள்ளார். இவற்றில், 'காவிரி நீரலைக்கும்' என்றமையால், குரக்குக்கா என்னும் தலம் காவிரிக் கரையி லிருந்த தென்பதும், 'காவிரிப் போந்த புனற்கரை' என்றமையால், அப் பொழுது பழவாறு பழங் காவிரி என வழங்கப்பட்டமையும். காவிரி இதனின் வேருக ஓடிய தென்பதும், பழைய காவிரி என்பதை இன் றுள்ள பழவாறே பெற்றிருந்தது என்பதும் தெளிவாம். இவ்வாறே கொள்ளிடமும் சில இடங்களில் வெட்டி நேராக ஓடுமாறு செய்யப்பட்டிருக்கிறது. அதன் பழைய பகுதி கொள்ளிடத்திற்கு ஒரு கல் தொலைவில் வடக்கே யுள்ளது. அதை இன்றும் மக்கள் பழங் கொள்ளிடம் என்றே வழங்குகின்றனர். ஆதலால் பழவாறே காவிரி யாகும் என்ப தும், இதன் முன்றுறையிலேயே கரிகாலன் நீர் விழவாடினுன் என்பதும் தெளிவாம்.

காவிரியின் முன்றுறை இருந்த ஊர் கழார் என்று கூறுவ தால், அது யாண்டுளது என்று காண்பாம். இம் முன்றுறைக்கு வடக்கே ஒரு கல் தொலைவில் இப்பொழுது கிழாய் என வழங் கும் ஊர் ஒன்று உளது. ஏனைய ஊர்கள் வேறு பெயர்கள் உடையன வாகும். ஆனல், சங்க நூற்கள் கூறும் கழாரும் இப் பொழுது வழங்கி வரும் கிழாயும் ஒன்ரு? வேரு? என்பதையும் ஆராய்வாம்.

நாட்டில் பல பெயர்கள் மக்களின் சொற் போக்கினுல் சிறிது மருவி வழங்கப்படுவது இயல்பு. கழார் என்ற பெயரும் நாளடைவில் பல நூற்ருண்டுகட்குப் பின் கிழார் என

மருவி யிருக்கலாம். சங்க காலத்திற்குப் பின் இந் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தை இடைக்காலம் என்று கூறுவது மரபு. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் நம் நாட்டை ஆண்டு வந்தவர்கள் பிற்காலச் சோழர்கள் எனப்படுவர். அவர் தம் ஆட்சி பதின்மூன்றும் நூற்றாண்டு வரை நின்று நிலவியது. அப்பொழுது மன்னர்கள் பல கற்றளிகளை எடுத்து, அவற்றில் அரிய செயல்களை யெல்லாம் கல்லெழுத்தில் பொறித்துள்ளார்கள்.

சோழர் தம் நாட்டை மண்டிலம், வளநாடு, கூற்றம் அல்லது நாடு என்று பல பிரிவுகளாகப் பிரித்திருந்தனர். அந் நாடுகளுள் நித்த விநோத வளநா[1]டென்று ஒன்று உண்டு. அதில் 'கிழார்க் கூற்றம்' ஒன்று உளது என்று கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. எப்பொழுதும் ஒரு கூற்றத்தின் பெயர் அக் கூற்றத்தின் தலை நகரின் பெயரா யிருத்தலைக் காணலாம். இக் கிழார்க் கூற்றத்தின் தலைமை யூர் கிழார் என இருத்தல் வேண்டும். அவ் வூரைப் பற்றி இப்பொழுது புலப்படவில்லை. அக் கூற்றத்தின் ஏனைய மிலட்டூர், சூலமங்கலம், திருச்சோற்றுத்துறை முதலான ஊர்களை நோக்குங்கால், அது தஞ்சை மாவட்டத்தி லுள்ள பாபநாசப் (தாலுக்கா) கூற்றத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது வெளியாகின்றது. ஆகவே, இந்தக் கிழாரும் அகநானூற்றில் குறிக்கப்பட்ட கழாரும் வெவ்வேறு ஊர்களாதல் வேண்டும். சங்க காலக் கழார் என்ற கிழாரோ விருதராஜ பயங்கர வளநாட்டி[2] லுள்ள குறுக்கை நாட்டில் குறுக்கைக்கு அண்மையி லுள்ளது. இது மாயூரம் தாலுக்காவைச் சார்ந்தது. ஆகவே, கல்வெட்டுக்களில் காணப்படும் கிழாரும் கழாரும் வேறு என்பது நனி விளங்கும்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவ ராகிய நச்சினார்க்கினியர் என்பவர் கிழாரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். தொல்காப்பியப் பொரு ளதிகாரத்து

---

1. காவிரியின் தென் கரையி லுள்ளது.
2. காவிரியின் வட கரையிலிருந்து கொள்ளிடம் தென் கரை வரை பரவி யுள்ளது.

அகத்திணை இயலின், 'மன்னர் பாங்கிற் பின்னோர்'[1] என்னும் சூத்திர விரிவுரையில், 'உழுவித்துண்போர் மண்டில மாக்களுந் தண்டத் தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் மாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ்சிக்கலும் வல்லமுங் கிழாரும் முதலிய பதியிற் றோன்றி, வேள் எனவும் அரசெனவும் உரிமை யெய்தினோர்.' என்று உழுவித்து உண்ணும் வேளாளர்கள் மிக்க செல்வத்துடன் வாழ்ந்த ஊர்களைக் குறித்துள்ளார். இவைகள் யாவும் சோழ நாட்டில் சீர்காழி, மாயூரம், நன்னிலம் முதலிய தாலுக்காக்களில் ஒன்றற் கொன்று அண்மையில் இன்றும் உள்ளன. அவற்றில் கிழா ரென வேறு ஊர் காணப்படாமையானும், வல்லமுங் கிழாரும் எனக் கூறியதனும், வல்லத்திற்கு வடமேற்கே அண்மையி லுண்மையானும், கிழாயே கிழார் என வழங்கப்பட்டது என்றும் தெளியலாம். இதன் பின்னர் கிழார் எனபது மக்களால் 'கிழா' என வழங்கப் பட்டது.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய பின் ஊர்ப் பட்டியல் தொடுத்த போழ்து கிழா என வழங்கியது 'கிழாய்' என வரையப்பட்டது. இன்றும் அவ்வாறே வழங்கி வருகின்றது.

இதுகாறும் கூறிய வாற்றல், காவிரியின் முன்றுறையில் கழார் இருந்தது என்பதும், காவிரியின் முன்றுறை பழவாற்றின் முன்றுறையே என்பதும், கல்வெட்டுகளில் காணப்படும் கிழாரும் கழார் திரிந்த கிழார்ரும் வெவ்வேறு என்பதும், அக் கிழாரும் இன்று கிழாய் என வழங்கி வருகின்றதென்பதும் தெளிய விளங்கும்.

---

1. தொல்., பொருள்., நச்சினுக்கினியம், அகத்திணை. சூ. 30.

கணக்கியல் அறிஞரின் கவின் உலகம்.

திரு. கு. இராமணன், B. A., சென்னை.

'உவகை! உவகை! உலகத் தாயின் கூத்து உவகை!'

என உவகை மீதூர்ந்த உள்ளத்துப் பொங்கும் இசையினைப் பொழிகின்றார், கவிஞர் பாரதிதாசன் அவர்கள். இவ் வுலகை எல்லோரும் புரிந்து கொள்ளல் எளி தன்று. எனினும், கவிஞரும், அறிவியற் கலைவாணரும் ஓரளவில் தம் அறிவாராய்ச்சிக்கு ஏற்ப, உலகத்தைப் பற்றிய கருத்துக்களை யுடையவர்களாக இருக்கின்றார்கள். கவிஞன் காணும் உலகமும், அறிவியலான் காணும் உலகமும், பாமரன் காணும் உலகமும் ஒன்றே யெனினும், காணும் வகையும், அதனால் ஏற்படும் கருத்துக்களும் வேறுபடுகின்றன. ஒரே பொருளை வெவ்வேறு நிறக் கண்ணாடி கொண்டு கண்டு தீர்ப்புக் கூறுவது போலவே, உலகக் காட்சியும் வெவ்வேறாகத் தோன்றுவதாகக் கருதி வேறுபாடு வளர்க்கப் படுகிறது.

கணக்கியல் பெருங் கடலினும் பெரிது; முடி வற்ற ஆராய்ச்சியினை உள்ளடக்கியது; பற்பலத் துறைகளை உடையது; ஒவ்வொரு துறையும் பல்கிப் பெருகி விரிந்து கொண்டே போகும் தன்மையது. வான நூலும், எண்ணியலும் பண்டைத் தமிழருக்குப் பெரும் பயன் அளித்துப், பேராராய்ச்சிக் கிடனாய் விளங்கின. நம் கண்களைக் கொண்டு காணும் உலகத்தைப்போற் பற்பல மடங்கு பரந்து நிறைந்துள்ளது இயற்கை. இடமும், காலமும், அளவுக்கும், கணக்குக்கும் அடங்காத அளவு, மிக மிகப் பெரியன. இவற்றை அளவிலி அல்லது எண்ணிலி என அறிவியலார் கூறுவர். (Space and time are infinite). இவை என்றும் நின் றியங்கும் ஆற்றல் வாய்ந்தன. எனினும், பொருட்களின் குண மாண்புகள் மாறலாம். 'சடப் பொருளைத் தோற்றுவிக்கவும், அழிக்கவும் ஆகாது.' (Matter can neither be created nor destroyed), எனும் அறிவியற் றுவக்கச் சூத்திரம் நமக்குக் கற்பிக்கும் பாடம் நம்மால் மறக்கும் திறத்தது அன்று. ஆகவே, என்றும் அழியாப் பெற்றிமைத் தான இப் பேரியற்கைப் பெருங் காட்சியினையே, இங்கு உலகம் என யான் குறிப்பிடுகின்றேன்.

இங்கே நாம் கூர்ந்து கவனித்தற் குரிய மற்று மோர் அறிவியற் செய்தி, உள்ளது சிறத்தல் அல்லது கூர்தல் (Evolution) எனும் கொள்கை யாகும். இக் கொள்கைப்படி, உயி ரற்ற சடப் பொருள்களிலிருந்து (lifeless matter) உயி ருள்ள பொருள்கள் (living organisms) தோன்றின. ஏற்கனவே உள்ளவையே

கூர்ந்து சிறந்திடுகின்றன. உயிர் பெற்றவை சிறந்துகொண்டே போகின்றன. காலத்திற்கும், சூழ் நிலைக்கும் (Time and environment) ஏற்ப மாற்றம் பெறுகின்றன. இங்ஙனமாகச் சிறந்த எதுவும் ஒரு முடிவை அடையாமலிருப்பதில்லை. இக் கூர்தல் முழுமை யெய்திப், பிறகு மீண்டும் மேற் கூறிய காரணத்தால் உள்ளது அழிதல் அல்லது இழிதல் (Devolution) துவங்குகிறது. இயற்கைக் குண மாண்புகளால் வடிவம் முதலியவற்றில் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்பச் சிறந்தும் இழிந்தும் போகும். இக் கருத்துக்களைக் கணக்கியலறிஞர் எளிதில் விளக்குமாறு ஒன்றுளது.

பூச்சியம் (0) என்பது எண்ணியலில் மதிப் பற்றது. (எண்ணியல் கணக்கியலில் ஒரு பகுதி. வானநூ லியலிலும் கணக்கன் காணும் வியத்தகு உலகின் காட்சியினைக் காட்டல் இயலும்; எனினும், அக் காட்சியினைக் கண்டார் பல்லோர் இருப்பர். ஆதலின், புதிய ஒரு கருத்தினை மட்டும் கூறுகின்றேன்.) இன்மையைக் குறிக்கும் '0'ஐச் சீரோ (Zero) என்றும், சைபர் (Cipher) என்றும், பூச்சியம் என்றும் கூறுவர். பூச்சியம் என்பது பூசிக்கத் தக்கது எனும் பொருள் கொண்ட வட சொல். வணங்கத் தக்க அவ்வளவு பெருமையுடையது, இவ் வெண் என்பது மிகைப் படுத்திய கூற்றன்று. நாம் காணும் உலகும், இவ் வடி வுடைத்து. இதனு லன்றோ, பண்டைக் கணிதப் பேரறிஞர் நிறைந்து விளங்கிய எகிப்தில் இதையே கடவுளெனவும் போற்றி வந்தனர்! இவ் வெண்ணின் பெருமையினைப் பேசும் நூல்கள் பல ஆங்கிலத்திலுண்டு. இவ் வெண் உடன்பாட்டு, எதிர்மறை (Positive and Negative) எண்களுக்கு இடை நிலையினைத் தாங்குவதோடு, இரண்டு மின்றி, நடு நின்று முறை வழங்கும் நடுவர் (Judge) போன் றிருக்கின்றது.

பொதுவாக இவ் வெண்ணுக்கு, யாரும் மதிப்பு இல்லையெனவே கொள்வர். எனினும், உண்மையில் மதிப் பில்லை என்பதும் சரி இல்லை. காரணம் என்னவெனில், ஒரு முழு எண்ணை, இவ் வின்மை யெண்ணால் வகுக்கும் பொழுது, யாம் பெறுவது பெரு மதிப்புடைய எண்ணிலி (∞). எண்ணிலியால் (Infinity) அன்றிப் பிற எவ் வெண்ணும், இவ் வின்மை பெருக்கப்படின், பெருக்குத் தொகையும் இன்மை யாகும். எண்ணிலி யாகிய மிகப் பெரிய அளவையால், இவ் வின்மையைப் பெருக்கும் பொழுது, மதிப்புள்ள ஒரு முழு எண் பெறப் படும் எனின், எண்ணிலியின் பெருமையும், இவ் வெண்ணின் சிறுமையும் நனி விளங்கும்! ஆதலின், இவ் வின்மைக்கும்

மிக மிகச் சிறியதொரு மதிப் புண்டென்பதும் கூர்ந்து நோக்குவார்க்கு எளிதிற் புலனும்.

மதிப்பு இன்மையும், உண்மையு முடைய இவ் வெண்ணி னின்றும், மதிப்புக்கள் பெருகிக் கொண்டேபோய், 1, 2, 3, ... என விரிந்து, எண்ணிலி ஆகின்றது. உயி ரற்ற அணுவையே இவ் வின்மை யெனக் கொண்டு, உயி ருண்மையை மதிப்பு எனக் கொண்டு இவ் வுலகை நோக்குக.

1, 2, 3,......போன்ற எண்கள் முறையே இயற்கையிற் காணும் பல்வகைப் பொருட்கள். இவை யனைத்தும் சேர்ந்ததே Infinity எனும் எண்ணிலி யாகிய இயற்கையும். மிக மிகச் சிறிய மதிப்பினை யுடைய பலப்பல '∝' மடங் குள்ள 'o'க்களின் சேர்க்கையே ஒன்று ஆகப் பரிணமித்திருக்கும் ஒன்றைப்போல் ஒரு மடங்கும், மற்றும் ஒரு மடங்கும் சேர்ந்ததே இரண்டு. இப்படியே, மூன்று, நான்கு, ஐந்து, என எண்களின் மதிப்புப் பெருகுகின்றது. முதல் முழு எண் ணகிய மிகச் சிறிய எண் ஒன்றே யாகும் இதையே உயிர்க்கு ஒப்புக் கூறுதல் சரி யெனத் தோன்றுகிறது. இங்ஙனம் பெருகிப் போகும் எண்களிடையே ஏதோ ஒரு ஆற்றலே நின் றியக்கிப் பெருக்குதல் வேண்டும். எண்கள் ∝ ஐ அடைந்த பிறகு, மீண்டும் சுறுங்கி 'o' ஆகக் குறைதற்கும், அவ் வாற்றலே பயன்படுகிறது. 'தோன்றிய பொருள்கள் ஒடுங்கும்; ஒடுங்கியன தோன்றும், இக் காரியங்கட்கு அவைகளே காரண கர்த்தா.' மாய் + ஆ = மாயா எனும் தத்துவ விளக்கக் கருத்துக்களும் ஒத்திருத்தல் காண்க. உயிர்கள் தோன்று தலும், ஒடுங்குதலும், சிறத்தலும் எண்களின் தோற்ற, ஒடுக்கக் கூர்தலுக்கு ஒத்திருத்தல் நோக்கற்பாலது.

ஆகவே, எண்ணியல் 'o' ஐயும், '∝' ஐயும் தத்துவ மொழியில் ஆதியந்தம், இறை என்றும், 1, 2, 3, ...முதலிய வற்றை உயிர்கள் எனவும், இவ் வெண்களின் வளர்ச்சிக் குறைப்புகளுக்குக் காரணமா யுள்ளதை மாயா எனவும் பொருத்திப் பார்த்தால் உண்மை விளங்கும். 'o'உம் '∝'யும் இறைக்கு ஒப்புக் கூறினேம். இறைக்குப் புராணிகரும், பிற தத்துவ நூலாரும் கூறும் முத் தொழில்கள், முறையே, படைத்தல், காத்தல், அழித்தல் என்பனவாம். இம் முத் தொழிலும் இவ் விரு எண்களுக்கும் உண்டு.

எண்கள், எங்ஙனம் 'o' னின்றும், எண்ணிலி (∝) யினின்றும், தோன்றி மதிப்புப் பெறுகின்றன (Evolution)

என்பதை முன்னரே விளக்கியுள்ளோம். ஆதலால், இவ் வெண்களின் படைத்தற் றொழில் நிறுவப்பட்டது.

காத்தல்தொழில் என்பது, எப்பொருளையும் அழிவினின் றும், அழியாது காத்தலாம். '∝' என்பதில் பலப்பல எண் கள் தாமே ஒன்று சேர்ந்து உள்ளன. இவ் வெண்கள் யாவும் நீங்கிப் போயின், '∝' என்னும் எண்ணிலியே இராது. ஆகவே '∝' யின், உண்மையே பிற எண்களின் உண்மை யினையும் விளக்குகின்றது. அவை அழியாது என்று மிருத் தலால்'∝' யின் காத்தலை அறிகிறோம். இதே கருத்தும் '0'க்கும் பொருந்தும்.

'0'க்கு மிக மிகச் சிறிய மதிப் புண்டு. இம் மதிப்பு கள் சேர்ந்தே எண்கள் ஆகின்றன. இம் மதிப்புகள் பிரிந்து போய்விடின், எந்த எண்ணும் நிலைத்திராது. ஆகவே, எண்கள் நிலைத்திருப்பதினின்றும் '0'வின் காத்தல் தொழில் நிகழ்தலை அறிகின்றோம். மேலும், '0'வை எந்த எண்ணுடனும் கூட்டும் பொழுதும், கழிக்கும் போதும் எண் களின் மதிப்பு மாறுவ தில்லை.

இவ் விரு தொழில்களையும் நிகழ்த்தும், இவ் வெண்கள் அழித்தலையும் செய்கின்றன. யாங்ஙன மெனின், எந்த எண்ணையேனும் இவற்றால் பெருக்கியோ, வகுத்தோ விடு வோமாயின், அவ் வெண் தன்னிலை யழிந்து, தன் மீது செயற் படும் எண்ணாகவோ, அன்றி, அதன் மாற்று எண்ணாகவோ (Reciprocal) மாறிவிடுகிறது. தன் மதிப் பெலா மிழந்து விடு கிறது. இதையே, நாம் அழித்தல் வேலை எனக் கூறுகிறோம்.

இம் முக் கூறு பட்ட செயல்களையும் செய்யும் இவ் விரு எண்களும், எண்ணியலில் மிகச் சிறிய, மிகப் பெரிய எண்களே யன்றி, அவைகளினின்றும் பிரிந்த வேறல்ல. அங்ஙனமே, இறை என்று கூறப்படுவதும், இயற்கையின் முதல் முடிவே. முதல் முடிவு என்பதில், முதலி லிருந்து முடிவு வரை எங்ங னம் யாவும் அடங்கி யுள்ளனவோ, அதேபோல், இயற்கை யிலும் எல்லா உலகப் பொருள்களும் நிறைந்துள்ளன. ஆனால், மக்கள் முதலையும், முடிவையும் மட்டும் முக்கிய மெனக் கருதி, இறை யென அவற்றை வழங்கி வருவாராயினர். உண்மையில் இவை யாவும் பல்வேறு இயற்கையின் கூறுபாடுகளே. இந்தத் தத்துவத்தை நன் குணர்ந்த மக்களே, உலகிய லுணர்ந்த நன்மக்க ளாவர். வெல்க தமிழ்!

பதிற்றுப்பத்தும், பதிப்பாசிரியரும்.

வித்துவான் திரு. வி. அ. அரங்கசாமி, கரந்தைப் புலவர் கல்லூரி.

பதிற்றுப்பத்து என்பது, சங்க மருவிய பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு வகைகளுள் எட்டுத் தொகையினைச் சார்ந்து இலங்குகின்றது. இந் நூல், பத்துப் பத்துப் பாட்டுக்களால் பாடப்பட்டு, பத்து பத்துக்கள் பார்வைக் கழகாகப் பதிப்பிக்கப்பட்டுளது. பத்துப் பத்து என்பதே பதிற்றுப்பத்து என ஆயது. இந் நாலுள், முதற் பத்தும், இறுதிப் பத்தும் நீங்கலாக ஏனைய எட்டுப் பத்துக்களும் எழில் பெற அமைந்துள. முதலும், இறுதியும் கிடைக்க வில்லை. இங்ஙன மமைந்த இந் நூலுள், ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு சேர அரசரைப் பற்றிச் செப்புகின்றது; ஒவ்வொரு. சேர அரசரின் பண் பாடுகளைக் கூறுவதோடு, ஒவ்வொரு பத்தி னிறுதியிலும் பதிகம் என வொன்று பதிந்து, தன்னுள் பல வகைப் பொருள்களையும் பொதிந்து, நோக்கினர்க்கு நுண் ணுணர்வு நுவன்று, ஆக்கினர் புகழுக் கணி யென அமைந் துளது. சிலப்பதிகாரம் போன்ற செந்தமிழ்க் காப்பியங் களில், பதிகம் என்பது நூலுக்கு முன்னிற்க, இந் நூற்கண் இறுதியி னின்றுளது. நூற்க ணுரைக்கும் நுண் கருத்துக் களை எண் பொருளவாக எளிமையிற் றெரிக்க இருக்கவும், இதன்கண் ஏற்றந் தரும் மாற்றங்கள் இயைந்து காணப் படுகின்றன. இன்னும், இந் நூற்கண் ஒவ்வொரு பாவிற் கும், அதனு ளமைந்துள்ள விழுமிய தொடர் கொண்டு பெயர் அமைத்துள்ளனர். பாட்டின் கீழ்த் துறையும், தூக்கும், வண்ணமும் நண்ணி, முறையுற மொழியும் முதுமை சான்றது.

இன்ன இயல் பமை இரண்டாம் பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியுள்ளனர்.

இப் பத்து பழைய வுரை ஒன்றும், பதிப்பாசிரியர் குறிப்புரை ஒன்றும் பண்புறப் பெற்று, கால நிலையின் கருத்தினைத் தந்து, ஏலா உரையினைச் சால நிறுத்தி, இன்னோரன்ன இயல்பெலா மிறுத்து, அறிவினை அளிக்கும் ஆக்கமும் பெற் றிலங்குகின்றது. ஆயின் பத்தின் பாக்களோ நாவலர் தமது நலஞ் செந் நாவின் நயத்தினை நவின்று, உள்ள நிலையினைத் தெள்ளிதின் தெரித்து, புலவர் பாடும் புரவலரின் புகழுறு பண்பும், புரப்பும், போற்றும் செல்வமும், புகழுறு வென்றியும், நாட்டு நலனும், நல்லவை நிலையும், ஆற்றலும், கொடையும், அமைந்த இன்பும், நாட்டி நிற்கும் நலம் பல பெற்றுள. மேலும், பண்டைக் கால அரசியற் கொள்கையும், மக்களின் மாசறு நிலையும், தருதற் கேற்ற தகைமை சான்றுள. அங்ஙனம் அமைந் துறூஉம் அமைவினைக் காண்டலே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

நன்னடை நல்கும் வேந்தற்கு நடையாம் நல்லொழுக்கம் நன்கணம் அமைந்து நாட்டு மக்களை நயப்பிக்கும் நிலை வேண்டுவ தொன்றாகலின், அம் முறையே நம் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், பல்வகைப் பண்புகளால் பாடும் பரிசுற்றுப், பாங்குற அமைந்துளான். அரசியல் அடைவாற் கூறும் முதற்கண்ணுள்ள போற்றார்ப் பொறுக்கும் பொறை யுடைமை, பெரிய தப்புந ராயினும், பகைவர் பணிந்து திறை புகக் கொள்ளும் பொறை நம் சேரலாதன்பால் அமைந்து கிடத்தலின், புரைவதாம் பொருள் இன்றி முடிந்தது. இப் போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சிய தகலமும், வலியும், அளியும் ஆய இப் பண்புகளை,

'நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரி யையே த.'

என்ற அடிகள் விளக்குகின்றன. இக் கருத்து,

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்

வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீருமென் றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போல.

என்ற புறப்பாட் டடிகளோடு ஒப்புமை கொண்டு இலங்கு கின்றது. ஆயின், புறம் பகர்ந்த தெறற் பண்பிற் குரிய தீயினை ஈண்டு விளக்கத்திற் குரித்தாக விளம்பியுள்ளார். விளக்கமும், பகைவ ரழிவினை னுறுவதே. விளக்கத்திற்கு வேற் றரசின் விளிவே வினை வாவ தல்லது வேறன்று. இதனை லன்றோ, 'புறக்கொடுத் திறத்தி' என்ற புறப் பாட்டிற்குச் சுடர் போல விளங்கிப் பிறர் தோற்றோடக் காயு மிவ னென வேறுபட வந்த உவமத் தோற்றத்தாற் பொருள் கொண்டனர், பேராசிரியர். சான்றோர் மெய்ம் மறையாம் ஆற்றல், கூற்று வெகுண்டு வரினும் ஆற்றும் ஏற்ற முடையா னென்பதனை எடுத்தியம்புகின்ற தன்றோ! வலிய ரென், வழிமொழியா வண்ணம் வாய்ந்தும், மெலிய ரென மிகக் கூற லறியா மேன்மையு முடையன். இன்னும், இமயவரம்பன், அக்குர னனைய கைவண்மையனாய், நண்ணார் தேஎத்தும் பொய்ப்பறி யலனாய், புலவர் போற் றும் புகழுடையோனாய், கோடா நெஞ்சினனாய், வயிறு பசி கூர ஈயாதவனாய், வகைபெற வாழ்ந்த வாய்மை யாறன். இன்ன இய லமை இமயவரம்பன் பாராளும் பண்போ, காடு கடவுள் மேவ, மள்ளர் புறவிற் பொருந்த, கூலம் பகர்வார் குடிபுரந்து, குடி புறந்தருவரின் பார மோம்பி, பசியும் பகையு மின்றி வசியும் வளனும் சுரக்க வாய்ந் திலங்கியது. நாடு காக்கும் நன் னெறியால் விழ வொழியா முழ விமிழ் மூதூர்க்கண், பாணர் வாழ்த்த, கூத்தர் ஏத்த பொருநற் போற்ற, பரிசிலர் வெறுக்கை யாப் பசைந்து நின்றனன். அரசர்க்கு அமைச்சராய் அடைந்த பெற்றியோர் மேவ லமைந்த சுற்றமாய் மேவின், கோடி யாத்து நாடு பெரிதும் நலனுறும். இன்றேல், நூறு செறு வாயினும், களிறு தமித்துப் புக் குணின் வாய் புகுவ தனினும் கால் பெரிது கெடுக்குமது போல, அரசனும்

தானும் உண்ணுன், உலகமும் கெடும்; எனவே, அக் கருத்திற் கியைய இமயவரம்பனும் மேவில் சுற்றமொடு உலகு புறந்தந்து வாழ்ந்து வந்தனன். இங்ஙனம் புறந் தரூஉம் புரைமையால் பொலனணி எருத்தமேல் கொண்டு பொலிந்த பலர் புகழ் செல்வத்தை யினிது கண்டனன்.

இத்தகைய செல்வத்தின் பயன் ஈதலே; துய்ப்பே மெனினே தப்புன பல வாதலின் சேரலாதனின் செல்வச் செருக்கு எங்ஙனம் பய னுறுகின்ற தெனப் பார்ப்பாம். கன்று புணர் பிடிய குன்று பல நீந்தி வந்துற்ற இரவலர் இன்மையை இரித்தற்கு முன் அழி பசி தீர்க்கும் அன்பினைக் கொண்டு, புழுக்கலைத் தேறலொடு தந்து, நீருறு பருந்தின் இருஞ் சிற கொத்த நிலந் தின்ற சிதாரினை நீக்கி நோக்கு நுழைகல்லா நுண் பூங் கலிங்கமாம் நூலாக் கலிங்கம் ஏல உடுத்தி இன்புறுத்தினுன். இரவலர் புரக்கும் புரவலனும் இமயவரம்பன், இன்ன சிறப்பமை திரு வோலக்கத்தே ஏற்றம் பெற ஆட்சி ஆற்றி நின்றனன். இதற் குறு காரணம் இயைய இசைப்பின் ஊன்றிய கொள்கையால் ஆன்ற வென்றி யாகும். சான்ருேர் மெய்ம் மறையாம். இமயவரம்பன், நிரைய வெள்ள மெனும் பேரெண் கொண்ட படை கொண்டு. கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை அறைந்து பகைவர் நிறந் திறந்த எஃகினுல் எறிபட்ட புண் ணுமிழ் குருதி, மணி நிறம் பெற்ற மாபெருங் கழியினை மனுலக் கலவைபோ லாக்கி, பகைவர் நாடு மீண்டும் வாழ முடியாத வள னறு பைதிர மாக்கி, மாதிரம் பனிக்கும் மறம் வீங்கு பல் புகழ் கொண்டனன். இங்ஙனம் மறப் புகழ் கொண்ட மைந்தி னன், ஆரியர் அலறத் தாக்கினன். இன்றும் அன்னுன் பகைப் புலத்து வைகிய நாடு இற்றைப் போரி லுற்ற ஊறுபாட்டால் ஊர் பல ஊன் உறக்க மின்றி யிருந்தது போல அன்றும் அடைந்திருந்தது. நெடு நகரும் அரசும் துயி லின்றித் துன் புற்றமை அன்றும் இன்றும் அமைந்துள

பெற்றியைக் காணின் போவீ ருறு காலத்தின் புன்கணே எண் பெறு ஏற்றஞ் சான்றது என அறியப்படுகின்றது.

இன்றும் நாடு கவ னழிய, நாமந் தோற்றி, அழல் கவர, தொல் கவி னழிந்து, வெண் பூ வேளையொடு பைஞ் சுரை கலித்து நிலங்கள் வாட, நாஞ்சில் கடிந்து, காணுநர் கைபுடைத்து இரங்க, கவி னழிய, பாழ்படச் செய்த இமய வரம்பன் வென்றிச் செயல் இனிது இலங்குகின்றது.

இன்ன வென்றி பெறும் விருப்பினுல் பாடியில் சற்று நீடி நிற்கப், பாணன் வந்து ஆணம் கூறும் அமைதி, ஆன்ற அழ குடைத்தாகக் காண்கின்றது. இமயவரம்பன் இல்லா ளின் இசை பெறு பண்புகள் ஏற்ற முடையன. ஆறிய கற்பினை யுடையாள் ; அடங்கிய சாயல் கொண்டவள் ; ஊடினும் இனிய கூறும் நகையினள். இன்ன பெற்றியள் பாயல் உய்தல் ஒல்லுமோ யென அகப் பண்புகளைப் புலப்படுத்தும் திறன், புலவர் போற்றும் பொற் புடையன. மேலும், இமயவரம்பன் அகலத்தையே துயிலின் பாயலாகக் கொள்ளுபவள். இன்ன இயல் பமைந்து இன்புறுத்தும் இல்லாள் மாட்டும், பகைப் புல மேற்செல்லும் வினை யுள் வழி அகலந் தராது வினைமேற் செல்லலும், வினை யில்வழி அகலந் தந்து இன்பம் ஏற்றலும் வல்லவன் இமயவரம்பன்; கல மறிந்து நடக்கும் வல்லாளனு மாவன். இதனுல் அவன் இன்பச் சிறப்போடு வென்றிச் சிறப்பும் அறியப் படுகின்றது.

மாரி பொய்க்குவ தாயினும் பொய்யல னுய சேரலாதன் கொடைச் சிறப்பு கூறின், நடைச் சிறப்பு தெள்ளிதின் தேற்ற முறும். விருந்து புரக்கும் தொல் சிறப்புறு தமிழ் நாடதனில் வரும் இரவலரை விருந் தெனக் கொண்டு அருத்தும் அன்பினர் அருந் தமிழ் நம் நாட்டா ராவார். சேரனிடத்து வரிசை பெற வந்த நடைபெறு விறலியர் தம்மை வழங்குக அடுப் பெனக் கூறி மடையடப் பாணர்

மாற்றந் தருவரேல், அவனது அன்பும் ஆர்வமும், அதர்ப் பட வழங்கும் கொடையும் என்னே! எனவே, வருநர்க்கு வரையாது வழங்க, அதற்கு ஏற்பத் தடை யுருது மடை பெற முன்னுள்ளாரோடு வரிசை பெறு கூந்தல் விறலியரை யும் மடைத் தொழிலியற்ற வேண்டின ரென்னில், அன் னுன் மாண்புறு செயல்தா னென்னே! காண்மின்.

இங்ஙனமாக இவ் விரண்டாம் பத்து, புண் ணுமிழ் குருதி, மறம் வீங்கு பல் புகழ், பூத்த நெய்தல், சான்ருேர் மெய்ம் மறை, நிரைய வெள்ளம், துயிலின் பாயல், வலம்படு வியன் பணை, கூந்தல் விறலியர், வளனறு பைதிரம், அட்டு மலர் மார்பன் என்ற தொடர்களைப் பெயர்களாகப் பெற் றிலங்குவதோடு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய பண்பு, ஆற்றல், நாடு காத்தல், செல்வச் சிறப்பு, ஓலக்கச் சிறப்பு, வென்றிச் சிறப்பு, இன்பச் சிறப்பு, கொடைச் சிறப்புகளையும் உரைத் துணர்த்தி நிற்கின்றது.

இனி, இப்பத்திற் கண்ட உரைச் சிறப்பும், பிழை படும் உரை, பதிப் பாசிரியரின் பண்பி லுரை இவற்றை இசைய ஆய்வாம்.

இரண்டாம் பத்திற்கு இயைந்த பழைய வுரை பாங்குறப் பல் லிடங்களும் பாடுற்று, ஈடின்றி இலங்கு கின்றது. பாக்களுக்கு அமைந்த தொடர்ப் பெயர்களுக்கு உரை யுரைக்குங்கால், பலவும் பண்புற் றமையவும், சில செம்மை யின்றி வெம்மை தருவனவாய், வேட்கை நீங்கு வனவாய் அமைந்துள. அவற்றிற்கு அமைவு கூறும் அறிஞர் முக் குண வயத்தான் முறை பிறழ்ந் துரைப்பார் உரையாளர் என்பர். அங்ஙனம் கூறுவார் கூறுக. நடு நிலையில் நாட்ட முடையோர் நய வுரை, நலி வுரைகளை நன் கறிந்து நவில முன்வருவர். ஆதலின், விருப்பு வெறுப் புற்ற முறையிற் காணுங்கால், பழைய வுரை விழைய நிற்கின்றது. 'நீர் மிழி பாக்கம்' என்ற தொடர்க்கு

வெள்ளத்தா னழிவுபடி னல்லது, பகைவரான் அழியாத பாக்கம் எனப் பகர்கின்றார். 'உள்ளலும் உரியள்' என்ற தொடருக்கு யான் குறித்த நாளளவும் ஆற்றியிருக்க வென்ற நின் னேவல் பூண்டு நின்னை உள்ளா திருத்தலே யன்றி, நீ குறித்த நாளுக்கு மேல் நீட்டித்தா யாகலின் நின்னை நினைத்து வருந்துதலும் உரியள் என்ற வுரை, ஊக்கம் தரும் ஆக்கம் சான்றது. இன்னும், 'பாலும் கொளாலும் வல்லோய்' என்ற தொடருக்கு அகலப் பாயலை வேற்றுப் புலத்து வினை யில்வழி நின் மகளிர்க்கு நுகரக் கொடுத்தற்கு நின்னிடத்தினின்றும் பகுத்தலையும், வினை யுள்வழி அம் மகளிர்பால் நின்றும் வாங்கிக் கோடலையும் வல்லோய் என்ற வுரை அரசியல் அறிவிக்கும் ஆறல் சான்ற அறிவுரை யாகும். இறை, இல்லாளோடு இன்ப மேற்றலை இனிதே ஏற்பின், ஏலா அரசுடன் கோடாக் கோலின்றிக், கொள்ளார் குறிக்கும் புலமாய்க் கொடுங் கோல் நாடா யிலங்கும், இன்ன நிலையினை யுணர்ந்தே அங் ஙனம் உரை யெழுதிச் சென்றனர். இங்ஙனம் அமைந்த அழகுறு வுரைகள் பல. விரி வஞ்சி விடுத்து மேற் செல் வாம்.

இனி, இப் பழைய உரையின்கண் ணுள்ள ஊனங் களை உரைப்பாம். ஏனெனில், குணம் குற்றம் இரண்டினை யும் இசைப்பதே கொண்ட அறிவின் கொள்கையு மாகும். அப்பரும், குணங்கள் பேசியும் குற்றங்கள் கூறியும் வணங்கி வாழ்த்துவர் அன்புடையா ரென அருளியுள்ளார். அதனால் இஃது அன்பிலா நெறியிற் கூறிய தெனலு மாகாது. இஃது அன்ப ரல்ல ரெனக் கூறுவார்க்குக் கூறிய தென்க. கவிர்ததை சிலம்பிற் றுஞ்சு மென்றது ஆண் டுறையும் ஆரிய ராணையானே முருக்கென்னும் முள் ளுடை மரமும்' மயிர் நீப்பின் வாழாக் கவரிமா என்று சிறப்பிக்கப்பட்ட தன் மயிர்க்கும் வருத்தம் செய்யாமல் அக் கவிர் செறிந்த சிலம்பின்கண்ணே இனி தாக உறங்கு

மென்றவாறு எனவும், அருவியொடு நரந்தங் கனவு மென்றது அவ் வாரிய ராணேயானே பிற விலங்கானும் மக்களானும் வருத்த மின்றிப் பகற் காலத்துத் தான் நுகர்ந்த அருவியையும் நரந்தத்தையும் காணு மென்ற வாறு எனவும் உரை உரைக்கப்பட்டுளது. கவரிமா உறங்குவதற்கும் கனவு காண்பதற்கும் ஆரிய ராணே முத லாகாது. மேலும், ஆரியர் அலறத் தாக்கி எனப் பதிகத்துக் காணப் படுதலானும், அவர்களுக்கு ஆணே யிருப்பின், அக் காலத் துள்ள விலங்குகளன்றி ஏனே யோரையும் உறங்குவித்தும், கனவு காண்பித்தும் நன வுறுத்தி நன்மை பெற்றிருக்கலாம். அங்ஙனமு மின்று. எப் பொருளும் நனவில் நாட்டங் கொளின் கனவிற் காணப் பெறும் அதுவே காட்சிக்கு மாட்சியும் கருத் திற்கு விருத்த மின்மையு மாகும். அங்ஙனமே இக் கவரிமா வும், செறிந்த முட் புத ருடைய சிலம்பில் வாழ்தலும், வருத்துவா ரின்மையாலும் இனிதே உறங்கு மியல் பெற்றது. மேலும், அச் சிலம்பும் அங்ஙனம் ஆற்ற லுற அமைந் திருந்தது. அதனேடு அச் சிலம்பி லலம்பிச் செல் லும் அருவியையும், அவ் வருவியால் வளம் பெற வளர்ந்த நரந்தம் புல்லினேயும், காட்சி யளவையில் கண்டவற்றைக் கருத் தளவையிற் கனவிற் கண் ணுற உறையும் அச் சிலம்பு முத லாயிற்று, ஆதலின், ஆரிய ராணே ஏது வாகாமை திண்ணிதின் எண்ண முறுக. இனிக், குடி. புறந்தருநர் என்ருர்க்குக் கீழ்க் குடிகளாய வரிசையாளரைப் புறந்தரும் மேற் குடிக ளாய காணியாளரை என உரைத் திருப்பதும் பொருத்த மின்று.கீழ்க் குடி, மேற் குடி எனும் பாகுபாடு அத் தொடராற் பெறப்படாமை காண்டும். 'வீழ் குடி உழவர்' என்றும், 'உழு துண்டு வாழ்வார்', 'உழுவார் உலகத் தார்க் காணி' என்றும் வருவன கொண்டும் இப் பாகுபா டின்மை உணரப்படும். உயர்வு தாழ்வு கற்பிக்கும் உண்மை யைப் புலப்படுத்துவ தன்றி, வேறின்று. மேலும், நிரைய வெள்ளம் எனச் சிறப்புப் பெயர் பெற்ற பாட்டின்

தொடர்க்கு நரக பாலரைப் போலும் படை வெள்ளம் என்ற பழ வுரையும் பகுத்தறிவுக்கு ஏலாது. ஐ, அம், பல் என்ற விகுதிகளை ஈற்றிலே யுடைய தாமரை, வெள்ளம், ஆம்பல் என்ற சொற்கள் பேரெண் குறிக்கும் பெயர்களாம். அங்ஙனமாக, நிரைய வெள்ளம் என்பது மிகுந்த எண் பெற்ற வெள்ளம் என்ற எண்ணினும் மிக்கது எனவே உணர்த்தும். இன்னும், 'புரைவயின் புரைவயிற் பெரிய நல்கி' என்ற தொடர்க்கு உயர்ந்த தேவாலயங்கள் உள்ள விடங்களிலே உயர்ந்த ஆபரணம் உள்ளிட்டவற்றைக் கொடுத்து எனப் பகரும் உரையும் செப்ப மின்று. புரை உயர் பாகும் என்பது நூற்பா. ஆதலின், உயர்ச்சி என்ற பொருளே சால நன்று. ஈத்துக் கை தண்டாக் கை கடுந்துப்பின் என்றும், ஏம மாகிய சீர் கெழு விழவின் என்றும் முன்னர் வருதலானும், உயர்ந்த பெரிய பொருள்களைத் தருதலே ஈகையின் ஏற்ற மாதலானும், 'வரிசை யறிதலோ அரிதே' என்று பிருண்டும் கூறுதலானும் தேவாலயம் என்று பொருள் கூறல் பொருந்தாமையானும், உயர்ந்த பெரிய சிறந்த பொருள்கள் எனக் கொள்ளலே சாலும் என்க. இன்னணம், இயைந்த பழு துறு பழைய வுரைகள் மலிந்து நலிவு தந்துள. அவற்றை நீக்கிக் கொள் ளல் அறிவுடையார் கண்ணதாம். எனவே, இதுகாறும் கூறிய வாற்றல் இயைபில் உரைகளும் ஏற்ற உரைகளும் இசைவுற இயைந்தன.

இனி, இப் பத்தின்கண் மதிப்புறு பதிப்பாசிரியரின் மயக்க வுரைகளால் மாண்புறுவோரையும், மாண்பிழப் போரையும் மாணக் காட்டி, அறிவுடைமையால் ஆன்ற சான்று தந்து அழகழிக்கும் ஆற்றலையும் அறிவுறுத்தி, ஆன்றோர் போற்ற, அமைவுரை ஆற்றித் தருவாம். முதற் கண், 'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்' என்ற விடத்து, ஆரியர் என்றது முனிவரை எனக் குறித்த கூற்று கூற்றே யாகும். பதிகத்து, ஆரியர் அலறத் தாக்கி என்றும், ஆரியர்

வணக்கி என்றும் வருதலானும், யாண்டும் ஆரியர் என்பது முனிவர் என்ற பொருள்படாமையானும், ஆரியர் உயர்ச்சிக்கு அமைதி ஆற்றுத லின்றி வேறின்மையானும், அப்பொருள் பொருந்தாமை காண்க. மேலும், 'நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்' என்ற தொடர்க்கு, மேற்கோள் கொள்ளும் பதிப்பாசிரியர், கட்கொண்டிக் குடிப்பாக்கத்து என்ற மதுரைக் காஞ்சி யடியைக் காட்டி, அதற்கு, இழிந்த குடி என உரை வகுத்தனர் நச்சினார்க்கினியர், என்றுரைத்திருப்பதும் தவறு. நச்சர் அவ்வாறு கொள்ளினும், தவ றுடையதே. அதனை அமைத்துக் காட்டும் அமைவில் கூற்றும் தவ றுடையதே. இன்னும், உள்ளம் அழிய என்ற தொடர்க்கு உள்வம் அழியச் செய்தே என்று பழையவுரை உளது. ஆயின், அதற்குப் பதிப்பாசிரியர், அழியச் செய்தே என்பது அழியச்சே என வழங்கும் எனக் குறிப்புரை எழுதியுள்ளார். இஃது என்னே! இஃது பழந் தமிழாகுமா? அன்றித், தமிழ் மரபு எனத் தகுமா? ஆயின், ஒன்றுரைக்கலாம். ஆனந்த விகடனின் அஃபுத் தமிழ் என அறையலாம். இதனை மொழிவதற்கு இவர் நா என்னே துணிந்தது! இச் செயல் அருந் தமிழ் அமிழ்தில் ஆன்ற நச்சுரை பெய்த அமைவு போலாம். இதனைக் கடிவது அறிவுடைமை யாகாதா? தூற்றுவதென்று மாற்றந் தருவது தான் என்னே! இன்னும் நிரைய வெள்ளம் என்ற விடத்து, ரத, கஜ துரக, பதாதி எனக் குறிப்பு வரைந்துள்ளனர். இஃதும் மேலதனோடு ஒக்கும். இவற்றை ஆய்ந்து அறிஞர்கள் உளங் கொள்வார்களாக.

'புலவவில் லுழுவிற் புல்லாள் வழங்கும்
புல்லிலை வைப்பிற் புலஞ்சிதை அரம்பின்'

இவ்வடிகட்குப், புலால் நாற்ற முடைய விற் ருெழிலாகிய உழவினை யுடைய வழிப்பறி செய்வோர், வழங்கும்

புல்லிய இலைகளால் வேயப்பட்ட இடத்தினை யுடைய புலஞ் சிதைந்த பாலை நிலத்தூர் என்பதே பொருள். இத்தொடருள், பகைவர் எனப் பின்வருதலின், பாலை நிலத் தூராகிய அரம்பின்கண்ணுள்ள பகைவர் எனக் கூட்டிப் பொருள் காணும் பெற்றி யுற்றன. இங்ஙனமாக, அரம்பு என்பதற்குக் குறும்பு எனப் பழைய வுரையும் பண்புற வமைந்தது. ஆயின், இதற்குக் குறிப்புரை கூறும் பதிப்பாசிரியர், அரம்பு என்பதற்குச் சேஷ்டை எனக் கூறியது, அவர் மொழிப்பட மொழியின், அச் சேஷ்டைதான் என்னே என வியந்து இரங்குவ தன்றி, வேறின்மை காண்க. சேஷ்டை எனும் பொரு ளுடைச் சொல்லா அஃது? அங்ஙன மாயின், அச் சொல் லாண்டுப் பொருந்துமா? வழிதான் என்னை? வாய்ப்புறுதற்கு நாப்புலவர் செய்யுள் நயமுற எடுத்துக் காட்டி நாட்டப்படாத நன்மை என்னே? இன்னும், 'எறிகதிற்றி ஏற்றுமின் புழுக்கே' என்ற தொடரில், புழுக்கெனற்குப் புழுக்குதற் குரிய பருப்பு வகை எனக் குறிப்புரை தந்துள்ளனர் பதிப்பாசிரியர். இவ்வுரை யாது மோரியை யின்றி எழுதப்பட்டுளது. இஃது, 'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்' என்ற குறுந்தொகைச் செய்யுள், பார்ப்பினி தலைவியாகக் கொண்டு வந்துளது என்றது போலாம். எங்ஙனம் அப் பார்ப்பினி தலைவியாக வந்தமைக்குச் சான்று சிறிது மின்றே, அங்ஙனமே இஃது மெனக் கொள்க.

எனவே, இதுகாறுங் கூறியவாற்றால் இரண்டாம் பத்துக் கூறிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய பண்புகளும், நாடு காத்தற் சிறப்பும், செல்வச் சிறப்பும், ஓலக்கச் சிறப்பும், வென்றிச் சிறப்பும், கொடைச் சிறப்பும், இன்பச் சிறப்பும், உரையின் திட்ப நுட்ப ஒட்பங்களும், நடுநயமிலா பயமி லுரைகளும், இதனை ஓர்ந்துணர்ந்து, நடுநிலை கொண்டு ஏற்றங் கண்டு செய்ய உரைதனை ஆய்ந்

தோய்ந்து கூறுதற்கும், தமிழினை, தகவுறத் தருதற்கும், தக்கோர் தமிழரே யாவர். ஏனையோர் கூறின், ஏலா உரையால் சாலாக் கருத்துக்கள் சாலப் பகர்ந்து வழக்குரை சாற்றுவர். ஆதலின், தமிழர் தம் நூலுக்குத் தகு முரை தருவோர் பார்ப்பனப் போலிப் பதவி வேட்போர், பாழுறுத்துவோர், பாடில்லாதோர், பயந்தோர், பழிச் சுவோர் அன்றி, தமிழ் நலங் காக்கும் தகவோராம் தமிழரே யாவர் என அறிக.

கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு
காணும் பிறமொழிகளோ வெறும் வேம்பு
நமையெலாம் வடமொழி தூக்கிடுந் தாம்பு
நம் முரிமைதனைக் கடித்ததப் பாம்பு
வஞ்சகர் வந்தவர் தமிழாற் செழித்தார்
வாழ்வினி லுயர்ந்தபின் தமிழையே பழித்தார்
நம் செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்
நாமுணர்ந்தோ மிந்நாள் அவாஞ்சி விழித்தார்

கலைக் களஞ்சியம்.

திரு. கோ. தியாகராசப் பிள்ளை, G. M. V. C.
தெற்கலங்கம், தஞ்சாவூர்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரால் வெளியிட விருக்கும் கலைக் களஞ்சியத்தி லுள்ள சில பகுதிகளைத் தொகுத்த ஒரு சிறு மாதிரிச் சுவடி வெளி வந்துள்ளது. இதைக் குறித்த என் கருத்துக்களை இதில் குறிக்கின்றேன்.

நூல் அட்டை.

இது கண் கவரும் தன்மை யுள்ளது. இதில் 'கலைக் களஞ் சியம்' எனப் பெரிய பொன் னிற எழுத்துக்களில் பொறிக்கப் பட்டுத், தமிழ் நாட்டுக் கோபுரப் படம் அமைக்கப்பட் டுள்ளது. இதைச் சுற்றி முகில் படர்ந்திருக்கிறது. இப் படத்திற்குக் கீழே வெள்ளிய கொட்டை எழுத்தில் 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என அச்சிடப்பட்டிருக்கிறது.

நூற் பெயர்ப் பக்கம் (Title page)

இதில், பெயரைத் தவிர, 'கற்றனைத்து ஊறும் அறிவு' என்னும் மேற்கோள் இந் நூலின் பயனை வலியுறுத்துகிறது.

தாள்.

வழுவழுப்பும், வெண்மையும், தகுந்த தடிப்பும் உடை யது.

பதிப்பு.

தெளிவும், நடுத் தரமு மானது. சிறு பொழுதில் கண்கள் சோராமல் படிக்கலாம்.

உட்பொருள்.

உட்பொருள் விளக்கத்திற்கு உதவியாய்ப் படங்கள் நிறைய இருக்கின்றன. சில படங்களின் பகுதிகட்கு அம்புக்கோடு களோ (Arrow marks) எண்களோ கொடுத்து, அப் பகுதிகளின் விளக்கமும், பெயர்களும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

இதிலுள்ள விளக்கங்கள் அந்தந்தப் பொருளைப் பற்றி யவை முற்றும் உள்ளனவோ, சில பகுதிகள் அளவில் உள்ளனவோ தெரியவில்லை. ஆகையால், அவ் விளக்கத்தி லுள்ள குணம் குறைகளை எடுத்துக் காட்ட முடியவில்லை. எனினும், நான் பார்த்த அளவில் சில குறைகளை எடுத்துக் காட்டுகிறேன்.

பக்கம் 14. வீணை.

இப் படத்திற்கும் மேலே குறித்ததுபோல, அம்புக் கோடுகள்போட்டு விளக்கமும் பெயர்களும் காட்டலாம். இதில் 'லங்கர்' எந்தப் பகுதியைக் குறிப்ப தென்பது புலப்படவில்லை, 'லங்கர்' என்னும் சொல். சொல் விளக்கத்திலும் (Dictionary) காணப்படவில்லை.

பக்கம் 6. இந்தியா உருப் பெற்ற வரலாறு.

'காண்டுவானுக் கண்டம்' என்னும் நிலப் பரப்பு பல கோடி ஆண்டுகட்கு முன் னிருந்த பொழுது தென் அமெரிக்கா வும் இதில் உட்பட்டிருந்ததாக நான் பார்த்த மேற்கோள்களில் (Reference) குறிக்கப்படவில்லை.

பக்கம் 8. மடு.

மடு என்னும் சொல் udder எனப் பொருள் படாது. 'மடி' என்பதே தக்க சொல்.

பக்கம் 18. காடுகள்.

மலைகளில் உள்ள காடுகள் கார்களைத் தடுத்து மழை பெய்யச் செய்யு மென்பது இப் பகுதியில் குறிக்கப்படவில்லை.

சொற்கள்.

அ. விநாடி—Raman effect என்னும் பொருள் விளக்கத் தில் 'விநாடி' என்னும் சொல் 'Second' என்னும் சொல்லிற்கு ஏற்றதாகக் குறிக்கப் பட்டிருக்கிறது. இது பிழை. ஒரு நாழிகை=24 மினிட்டுகள். எனவே, ஒரு விநாடி 24 செகண்டு கள் ஆகும். ஒளி ஒரு Second இல் எவ்வளவு தொலை செல்லும்

என்பதை விளக்க 'ஒரு வினாடி' என்றால், 24 Second இல் எவ்வளவு தொலை செல்லும் என்பதாகப் பொருள்படும். ஆகையால், Second என்பதற்கு ஈடாக ஒரு நொடி என்பது ஏற்ற சொல். தொங்கல் (Pendulum) உள்ள ஒரு பெரிய நாழிகை வட்டிலின் முன் நின்று நொடித்துப் பார்த்தால், நொடி என்பது Second ஐ விடக் கொஞ்சம் சிறிய கால அளவு என்பது விளங்கும். (One of the methods of coining new words is to give a twist to the meaning of the current words. Thus 'ஈடு' is the best equivalent in place of பதிலாக)

ஆ. பல ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் அமைக்கப்பட்டிருப்பது போற்றத்தக்கது.

இ. 'செந்தமிழும் நாப் பழக்கம்' என்பதை மறந்து நம் மக்கள் (தமிழ்ப் புலவருங் கூட) தமிழ் மொழிச் சொற்களிருக்க, வேறு மொழிச் சொற்களைப் பயன்படுத்துவதுபோல, இந் நூலிலும் பயன்படுத்தப்படுகிறது. இதுதான் நாவிலிருந்து ஓடிய தமிழ்ச் சொற்களை ஏட்டிலிருந்தும் ஓட்டுவதற்கு வழியாகும். "தமிழ் வளர்ச்சிக் கழகம்" இம் முறையைத் தழுவுவது விரும்பத் தக்க தன்று.

எ-கா.

இதிலுள்ள பிறமொழிச் சொற்கள்	ஏற்ற தமிழ்ச் சொற்கள்.
1. விஷயங்கள்	பொருள்கள்
சேவை	பணி
லட்சியம்	குறிக்கோள்
ஜீவன்	உயிர்
உபாயம்	சூழ்ச்சி
ஆகாயம்	விண்
விவசாயம்	வேளாண்மை
அனுபவங்கள்	நுகர்ச்சிகள்.

(இன்னும் எத்தனையோ சொற்கள் உள்ளன. முழு நூலிலும் எத்தனை பல்லாயிரக் கணக்கான சொற்களிருக்குமோ?)

Stamen	வராகி
Pollen	பராகம்
Bacteria	நுண்மங்கள் அல்லது நுண்ணம்.

Degree = $\frac{1}{360}$ of a circle = பாகை.

இச் சொல்லை வெப்பத்தின் அளவைக் குறிக்கும் போதும் பயன்படுத்துவது சிறக்கும்.

Evolution = வேறுபாடு அல்லது திரிதல்.

1924 ஆம் ஆண்டில பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப் பட்ட Tamil Lexicon என்னும் நூல் ' Tamil Lexicon ' எனப் பெயர் தாங்கி Sanskrit Lexicon ஆக மாறியது. இந் நூலில் பிற மொழிச் சொற்களையும் தமிழும் பிற மொழியும் கலந்த சொற்களையும் விண்மீன் குறிகளால், ஊகார முடியக் காட்டப் பட்டுள்ளது. Tamil Lexicon Sanskrit Lexicon ஆக மாறி விட் டது வெளிப்படுமென ஊகாரத்திற்குப் பின் பிற மொழிகளை விண்மீன் குறிகளால் காட்டும் முறை கைவிடப்பட்டது (எ-கா) அகர வரிசைச் சொற்களின் மொத்தம் 5,735. இதில் வட மொழிச் சொற்கள் 3,295. இதுபோலத் தமிழ்க் களஞ்சி யத்தைப் பிற மொழிச் சொற் களஞ்சியமாக இயற்றுதபட்டி, தமிழ் வளர்ச்சிக் கழகத்தைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளு கிறேன். இந்தக் கருத்துரையைப் படிக்கும் ஒவ்வொரு தமிழரும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரைக் கேட்டுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தமிழ் எழுத்துக்கள்

புலவர் சி. சுப்பிரமணியன், தலைமைத் தமிழாசிரியர்,
யூனியன் உயர்நிலைப் பள்ளி, கோயமுத்தூர்.

தமிழ் எழுத்துக்கள் என்பன முப்பதே யென்பது தொல்காப்பிய எழுத்ததிகாரம் முதல் நூற்பாவா லறியக் கிடக்கின்றது. அஃதாவது,

"எழுத் தெனப் படுப
அகர முத னகர விறுவாய்
முப்பஃ தென்ப............" என்பது.

எனவே, பலரும் தத் தமக்குத் தோன்றிய வரம்பைப் பலவாக விரித்துச் செல்வர். ஆயின், ஆய்தம், குற்றிய லுகரம், குற்றிய லிகரம், உயிர் மெய் முதலியனவற்றையும் பிறவற்றையும் சிலர் எழுத் தெனவுங் குறிப்பிட்டுச் செல்வர். இன்னோ ரன்ன சார்பெழுத்துக்கள் எனப் பெயர் பெற்றன எழுத் தன்மை நுண்மையால் பெறப்படும். அவைகள் மொழியின் கண் அதனைச் சார்ந்தே குறிப்பிட்ட சில விடங்களிலேயே யன்றி எங்கணும் வரப் பெறா வென் றறிக. எனவே, எழுத்தாயின் இங்குத் தான் வரும் தகுதி யுடைத் தெனுங் கட்டுப்பா டமையா தென்க. அன்றியும், முன்னைய மூன்றும் பிற மொழிச் சொற்களைத் தமிழில் எளிதில் இசைக்க அமைத்துக் கொள்ளப் பட்டனவே யென்பது திரு. மாணிக்க நாயக்க ரவர்கள் ஆராய்ச்சி யுரையானு மறிக. அன்றியும் உயிர் மெய்யுள் ஙா—ஙி இம் முறையன தமிழ்ச் சொற்களுள் ளேயே இடம் பெறா வென் றறிக. எனவே சொற்களுக்கு முதற் காரணமாகாமைய வாகிய இன்னோ ரன்ன பிற எங்ஙனம் எழுத்தாதற் குரிய போதிய நிலைமையினை யுடைத்தாம் எனக் கூறி மறுக்க, குடம், நெய்க் குடம் போல மெய் உயிர் மெய் என அடை யடுத்து வந்த தென்க.

ஏனைய பிற மொழிகள் போல் தனக் கெனத் தனித்த எழுத்துக்கள் இல்லாமையை யுடையதல்ல தமிழ். ஒலிக்க மெல்லிய இயல்பினை யுடையது. அன்றியும் அதன் சிறப்

பெழுத்துக்களாகிய ற, ன, ழ, எ, ஒ இவை மிகுதியும் வேறு மொழிகளில் இல்லாமையே இதன் பழைமையையும், பெருமையையும் காட்டும். அதன் முறை வைப்பே முதன்மையைக் கொடுத்த தன்றி இனிமையையும் கொடா நிற்கும். ஒவ்வோர் எழுத்தும் தனித்த ஓசையை யுடையது. ஒலி முயற்சிக்கே குறி யீட்டை யுடைய தன்றி, ஒலிக்கே யுடைய தல்ல. குறியீட்டின் இயல்பும், ஒற்றுமையும், ஒலியின் மென்மையும் எம்மொழியினும் இதனை எளிதில் கற்க அமைதி யுடையனவாய்க் காணப்படுகின்றன. அன்றியும் சொல்லமைவுகளும் இந்நிலைக்குப் பெரிதுந் துணை புரிகின்றன.

காட்டாகக், கந்தன் வந்தான்; வந்தான் கந்தன், என எழுவாய் பயனிலைகளை மாற்றி யமைப்பினும் பெரிதும் பொருள் திரியாதாய்க் காணப்படுகின்றது.

இனி, எழுத்துக்களின் வடிவங்களைச் சிறிது கூர்ந்து நோக்கின் அவற்றின் இனிய இயல்பு தெள்ளிதில் புலனாகா நிற்கும்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ. இவை யனைத்தும் ஓரோசை யாகவே வரும் என்க.

எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, இவை ஓரோசை யன்றி ஈ ரெழுத் தோசையா னியைந்த தென ஒருநிலைத் தெரிநிலைப் படுத்தும். இவ் வெழுத்துக்களை அ, இ, உ எனும் மூவெழுத் தோசையாலேயே கூட்டி விடலாம். எனவே, இவ்வாறன வற்றுள் அ, இ, உ இவ் விரண்டெழுத் தோசை இயைந் திருப்பது காணலாம். பன்னீ ரெழுத்திலும் அகர வோசை ஒரு சார் முன் பின் கலத்தல் காணலாம் எனவே முன்னைய மூன்றனவற் றுலியைக் தனவே பின்னைய ஆறன வாகையால் அவற்றினைப் பின்னே வைத்தார். நிற்க,

ஐ, ஔ இவையிற்றிற்கு இன மாகிய தமக்கே யுரிய குற் றெழுத்துக்கள் கிடையா. எனவேயும் பண்டையில் ஏட்டில் எழுத்தாணியால் எழுதுவது இயல்பாகையால், எ, ஏ, ஒ, ஓ இவைகளின் வேற்றுமையை வரி வடிவில் காணல் அரிதாகை யால், எகர ஒகரங்களுக்குத் தனித்தும், மெய் யொடு சேர்ந்த

வழியும் வேற்றுமை யறியப் புள்ளி யிடுதல் இயல்பு போலும். அன்றியும் குற்றியல் இகர உகரங்கள் ஏனைய இகர உகரம் போ லல்ல என்பதனை ஓசை பயிலாதார்க்குக் காட்டல் வேண்டி, அவற்றிற்கும் புள்ளி யிட்டு வந்தனர் போலும்.

எ—ஏ, ஒ—ஓ, கெ—கே, கொ—கோ, என வேறறித லரிது, வட்டெழுத் தாகையால்; ஓலையும் ஆணியும், இதழும் கோலு மாகையால். ஆயின் இக் காலத்து வடிவம் மாறியது. தாளும் அச்சும் தாண்டவ மாடுகின்றன. திருந்த எழுதக் கற்றனர். எனவே புள்ளி வேண்டாமை யாயிற்று போலும்.

இனி, உயிர் மெய்யினைச் சிறிது நோக்குவாம். எல்லாம் கூற வியலா வாகையால் ஒன்றனையே கூற விழைகின்றேன் அதாவது,

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ.
க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ.

இவற்றுள் அ, க இரண்டும் பெரிதும் ஒத்திருத்தலை நுனித் தறிக. (அ—க)

எனவே,

ஆ-க (கா) அ-வின் வலது பக்கம் . இவ் வடிவம் க-வின் வலது பக்கத்தில் ா இவ் வடிவ மாயது.

இ—கி=அ—க என அ-வும், க-வும் ஒன்றாகக் காணப் படலால், அ-வின் மேலிடப்படும் (⌒) என்னும் வடிவம் க-வின் மேலும் (⌒) இவ் வடிவ மாகவே இடப்பட்டது.

ஈ – கி (ஈ) என்றுள்ள இயல்பால் முன்போல் (க)+(ீ) என்றிடப்பட்டது.

உ-கு=அ என வரவேண்டியது உ என அமைந்ததால் க என வரவேண்டியதனோடும் (ு) கு இவ்வா றமைந்தது.

ஊ – கூ = கூ என்பது உ போன் றமைதலால்.

எ – கெ = எ – கெ – இவை ஒன்றுபோ லிருத்தலால்.

ஏ – கே = ஏ – கே – என ஒன்றுபோ லமைதலால்.

ஐ – கை = ஐ – கை – என ஒன்றுபோ லமைதலால்.

ஒ – கோ = ஓ – ெகௌ என வமைதலால்.

ஒ – கோ = ஓ – ெகௌ – என வமைதலாலும், முன் ஏ காரத்திற்கு ெ இங்ஙனம் வந்த ஒற்றுமை யாலுமாம்.

ஔ – கௌ = ஔ – ெகள என வமைதலால் ஆம் போலும்.

எல்லா வுயிரோடும் அகர ஒலி வரும் எனவே, அதனோடு ஏனைய உயிர்கள் பல வடிவம் கூடுதல்பெறும். அதுபோல ககரம், அகரம் போன்ற தாகையால் ஏனைய உயிர் மெய்யாகக் க, புள்ளியுங், கோடும், விலங்கும் பெறும்.

இனி, கெ, கே, கை, கொ, கோ, கௌ, இவை, க, கா, கி, கீ, கு, கூ போல, வலப்பக்கம் மட்டில் புள்ளியும், கோடும், விலங்கும் (கா—போல் நோ—விற்கு கு இங்ஙனம்) பெறாத தென்னை யெனின், ஏனைய உயிர் போலல்லாது எ, ஒ, புள்ளி பெறு மாகை யாலும், அவற்றின் நெடிலும் அவைபோன் றெழுதல் வேண்டு மாகையானும், ஐ, ஔ இவைக்குக் குறி யில்லை யாகையானுமாம் போலும்.

இனி, ணை, னை, லை, ளை, ஏனைய போல் (கை போல்) வராத தென்னையெனின், ஏட்டுக் கால மாகலானும், வடிவ மயக்கம் ஏற்படு மாகலானும் ஆம். எவ்வா றெனின்,

ணை (பெண்ணை) என்றெழுதின்,
னை (தென்னை) என்றெழுதின்,
லை (அல்லை) என்றெழுதின்,
ளை (வெள்ளை) என்றெழுதின்,

ஐகாரக் குறியும் ணகாம் முதலியனவும் ஒன்று போலிருத்தலி னென்க.

ணை—இங்ஙனம் வரவேண்டியதனை,
ணை—இவ்வா றிட்டா ரென்க.
ணை — ணை — ணை—
ணை — ணை — ணை
இவ்வாறே ஏனையவு மாயின வென்க,

கலைக் களஞ்சியம்

(தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு—மாதிரிப்படி)

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, B. A., L. T., திருவாரூர்.

மதிப்புரை.

(முற்றொடர்ச்சி துணர் 24, மலர் 9, பக்கம் 280.)

"செஞ்சிக் கோட்டை" யில் நாம் பார்த்து மகிழக் கூடிய காட்சிகளும் இயற்கை அரண் அமைப்பும் விளக்கப் படுகின்றன.

'தென்னிந்தியக் கால் நடைகள்,' 'பறவைகளின் வாழ்க்கை,' 'தாவரங்களின் உறுப்பு மாறுபாடு' நம்மைச் சூழ்ந்துள்ள உயிரினங்களின் வகைகள், அவை வாழும் முறை, செய்யும் வேலை இருப்பிடம் இவற்றிற் கேற்ற உறுப்பு அமைப்பு முதலியவற்றைப் பாகுபடுத்தி விளக்கியிருப்பது அவற்றை அறிவியல் முறையில் கூர்ந்து நோக்கி மகிழச் செய்கின்றது. 'பரிணமம்' அவ் வுயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி, மாறுபாடுகளை ஊடுருவிச் செல்லும் உண்மையை உருப்படுத்திக் காட்டுகிறது. 'மகரந்தச் சேர்க்கை' மர வகைகளின் இனப் பெருக்க முறையை விரித்துரைத்து இயற்கை கையாளும் எளிய அறிவுடை வழிகளைத் தெரிவிக்கிறது. 'பாக்டீரியா' வும் ஓர் மர வகையே என்பதும், அதனால் விளையும் நன்மை தீமைகளும் விளக்கப்படுகிறது. 'துருவன்' நம்மைச் சூழ்ந்து விண்ணில் விளங்கும் தொகுதிகளை நம் முன்னோரும், இக் காலத்து ஆராய்ச்சியாளரும் அறிந்து அளந்து வரும் முறைகளை வெளிப்படுத்துகிறது.

'குடல் வால் அழற்சி' யைப் பற்றிய எச்சரிக்கை பல உயிர்களைக் காப்பாற்ற வல்லதாகும் 'கால் நடைகளைப் பற்றிய க்ஷயரோகம்' பலருக்கு இந் நோயணுகா வழி கோலும் என்பதற்கு ஐயமில்லை. 'ஆல்கலாயிடு' பற்றிய புதுக் கண்டு பிடிப்புகள் பல மருத்துவர்களுக்குப் பயன்படுவதுடன் நோயாளிகளும் அறிந்து நன்மை யடைவதற்கு ஏற்றதாகின்றது.

'குழந்தைப் பள்ளி' பற்றிய செய்திகள் பல சிறுவர்களின் களங்கமற்ற இன்ப வாழ்க்கையைக் குலைக்கும் குருட்டுக் கல்வி முறையை மாற்றி இன்ப ஒளி வீசச் செய வல்லதாகும்.

'மீன் செல்வம்,' 'நாட்டின் செல்வமும் காட்டின் அவசியமும்' நம் நாட்டின் உணவு, பொருள் அடிப் படைகளைப் பல வகைகளில் வலுப்படுத்தி வளர்க்கக் கூடிய வழி காட்டுவனவாகும். 'அணைக் கட்டி'ல் அவற்றின் பயன்களும் அவை எவ்வெவ்விடங்களில் சிறப்புடன் விளங்குகின்றன என்பதும், குறிப்பிடப் படுகின்றன. 'ஞநலான்' எனும் செய் பொருள் இயற்கைப் பட்டின் சிறப்பியல்புகளை எவ்வெவ் வகையில் விஞ்சுகிறது என்பதைக் காணும்போது இத்தகைச் செய் பொருள்கள் எத்துணையோ நாம் கண்டுபிடித்து நன்மை அடையக் கூடும் என்பதை அறிகிறோம்.

'விவசாயப் பொருளாதார நூல்' ஏழை எளியவர்களுக்கு ஏற்றம் தரத்தக்க புது வழிகளைச் சிந்திக்கச் செய்கிறது. 'புள்ளி நூலை'ப் பயன் படுத்தி ஆங்காங்குள்ள நிலைமைகளைத் தெளி படங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ளக் கூடிய முறைமைகள் தெளிவிக்கப்படுகின்றன. 'கேம்' என்னும் வியத்தகு பொறிப்பகுதி வேலை செய்யும் விதமும் அதனைப் பயன் படுத்தி எவ்வகையான வேலையையும் இயந்திரங்களின் வாயிலாகச் செய்து கொள்ளக் கூடிய எளிமையும் எடுத்துரைக்கப் படுகின்றன.

இவ்வாறு பல அருமை வாய்ந்த அறிவுரைப் பகுதிகள் இந் நூலகத்தே மிளிரினும் இதனை இன்னும் முன்னேற்றம் அடைவிக்கக் கூடிய வழிகள் உற்று நோக்குவோருக்குத் தோன்றாமலிரா. தொடக்க நிலையிலுள்ள இந் நூலுக்கு அவை பெரும் பயனளிக்க வல்லன எனவும், இந் நூலை இயற்றுவோர் அவற்றை ஏற்கும் சிறந்த உள்ளம்படைத்தவர் எனவும் கருதி அவை ஈண்டு குறிப்பிடப்படுகின்றன.

முதலில் இந் நூலில் சிறு பிழைகள் இல்லாமல் இல்லை. 'மடுவை' மடுவில், (8-ம் பக்கம்), 'எஸ்க்ரே' (12) 'Molicule' (14), 'வெங்கடராம' (17) என்பன 'மடியை', மடியில், 'எக்ஸ்ரே' 'Molecule', 'வேங்கடராம' என்றிருக்க வேண்டிய எழுத்துப் பிழைகளாம். 'முத்துச் சிப்பியை உடையாமலே' (12) என்பது 'உடைக்காமலே' எனவும், 'மூலக் கூறு அமைப்பை' (14) என்பது 'மூலக் கூற்று

அமைப்பை' அல்லது 'மூலக்கூற்றின் அமைப்பை' என்றிருக்க வேண்டிய இலக்கணப் பிழைகளாம். இத்தகைய பிழைகள் ஒன்றுமில்லாமலே இருக்கும்படி பார்க்க வேண்டியது இன்றியமையாததாகும். யாவருள்ளத்தையும் கவருவதற்கென வெளியிடப்பட்டுள்ள மாதிரிப்படியிலேயே இவ்வாறிருக்குமாயின் நூலகத்து அவை மிகுதியாக மலிந்து கிடக்கக் கூடுமன்றோ? ஆதலின் தமிழறிவு சான்ற தகைமையாளர்களைப் பயன்படுத்தி இவை நீக்கப்பட வேண்டும். அச்சுத் திருத்தம் யாவரையும் ஏய்க்க வல்ல பேய் போன்றதாகும். ஆதலின் ஒரு பிழையைக் கண்டு பிடிப்போருக்கு ஒரு ரூபாய் வீதம் கொடுத்து விலக்கும் மேல்நாட்டு முறை பின்பற்றத் தக்கதாகும்.

2. படங்களே பொதுமக்களுக்குப் பெரும் பயன் அளிக்க வல்லன ஆகலின் அவை செம்மையுற்றிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை பெரிதேயாகும். அதிலுள்ள சிறு பிழையும் யாவர் இகழ்வையும் எளிதில் பெற வல்லதாகும். 20-வது பக்கத்திலுள்ள 'துருவ மண்டலம்', 'துருவனைக் காணும் வழி' ஆகிய இரு படங்களிலும் துருவன் விலகியிருப்பது பெருங்குறையாகும். மேற்படத்தில் பிரசாபதியிலுள்ள தெற்கு வடக்கான மூன்று நட்சத்திரங்களைச் சேர்த்து நீட்டும் கோடும், கீழ்ப் படத்தில் புலகன், கிரதுவைச் சேர்த்து நீட்டும் கோடும் துருவனைச் சந்திக்காதது கருவியின்றிக் கண்ணாலேயே பெரும் போக்காகவும் காணக் கூடியதாகும். அவ்வாறே மேற்படத்திலும் புலகன், கிரதுவைச் சேர்க்கும் கோடும் துருவனை விட்டு விலகிச் செல்கிறது. இவ்வொரு பிழை மற்ற பகுதிகளின் ஒழுங்கில் ஐயப்படச் செய்யக் கூடியதாயிருக்கிறது.

பத்தாம் பக்கத்திலுள்ள 'பறவைகளின் அலகு'ப் படங்களுள் இறுதி நான்கைப் பற்றிய விளக்கங்கள் தாமுள. முதல் மூன்று அலகுப் படங்கள் எதற்காகச் சேர்க்கப் பட்டுள என்பது விளக்கப்படவில்லை. கழுகின் அலகு பேசப் படினும் படமில்லை! அவ்வாறே 'பறவைகளின் கால்'களுள் முதல் மூன்றிற்கு விளக்கமில்லை. யாண்டோ உள படத்தை எடுத்துப் போட்டு விட்டுத் தெரிந்த விளக்க மட்டும் கூறப் பட்டது போலத் தோன்றுகின்றது. விளக்கங்களும் இயன்ற வரை படங்களின் எண் வரிசைக்கேற்ப அமையின் பார்த்துப் புரிந்து கொளல் எளிதாகும். படங்கள் ஒரு வரிசையிலும்

விளக்கம் வேறு வரிசையிலும் இருப்பதால் கண்டு பிடிக்க வீண் நேரமாகிறது. இதை நீக்கல் பெரும் பயனளிக்க வல்ல தாகும்.

பதினேந்தாம் பக்கப் படத்திலுள்ள மீன்கள் யாவும் பலர் கண்டும் கேட்டுமிராதவைகளே யாகும். வாளை, வரால், கெண்டை முதலியன இலக்கியங்களிலும் ஏறியிருப்பதாலும், அவை புலாலுண்ணுதாரால் பார்க்கப்பட்டிரா வாதலாலும் விடப்பட்டிருப்பது பெருங் குறையே யாகும். தென்னிந்தியப் பறவைகளின் வண்ணப்படம் (10-ம் பக்கம்) இதற்கு மாருக இருப்பது யாவரும் போற்றத் தக்கதாகும்.

பதினேழாம் பக்கத்திலுள்ள தஞ்சைப் பெரிய கோவில் சுவரோவியம் போட வேண்டிய அழகு முறையில் அமைய வில்லை. அதன் மேல் பூசப்பட்டிருந்த அன்னப் படலத்தைச் சுரண்டிய கிரல்களை யெல்லாம் விளங்கக் காட்டி, முற் படத்தின் பகுதியாகிய குதிரைக் காலையும் சேர்த்துப் போட்டிருப்பது கலைக் களஞ்சியத்திற்கு ஏற்றதல்ல. ஆனல் பதிவுக் கூடத்திற்கு (ரிக்கார்டு ஆபீசுக்கு) ஏற்றதாகும். சில ஆண்டுகளுக்கு முன் தஞ்சைப் பெரிய கோவில் சுவரோவியங் களையே அடிப்படையாகக் கொண்டு கல்கி தீபாவளி மலரில் வெளி வந்த படங்களைப் பார்க்கப் பார்க்கப் பசி தீருவதா யிருந்தன. கலைக் களஞ்சியத்தில் பொறுக்கப்பட்டுள்ள தொரு ஒன்றேகால் படமும் மேற் கண்ட சுவரோவியங்களுள் சிறந்தது எனக் கூற இயலாது. பொறுக்குவதிலும் மேம்பா டுடையதைப் பொறுக்கினல் ஒன்றுங் கெட்டுவிடாது. கலையைப் பற்றி நினைக்கும் பொழுது 'ஒன்றே செய்யவும் வேண்டும். ஒன்றும் நன்றே செய்யவும் வேண்டும்' என்பதை மறக்கலாகாது.

முன்னட்டைப் படத்திலுள்ள தென்னிந்திய கோபுரத்தை ஒட்டி இடப புறத்தில் ஓர் புகைப் படலத்தையும் அதன் கீழ் ஆலை (பாக்டரி) போன்ற கட்டிடங்களையும் அமைத் திருப்பது தெய்வீகத்தையும், உலகாயதத்தையும் ஒன்று படுத்தி யிருப்பது போலத் தோன்றுகிறது. வாழ்க்கையில் அவை அடுத்தடுத்து விளங்கலாம். ஆனல் கலைஞர் உள்ளத்தில் அவை ஒரு சேரத் தோன்ற முடியாது.

(தொடரும்).

தமிழ்க் காந்தியாரின் தனிப்பெருந் தகைமைகள்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, B. A., L. T., திருவாரூர்.

திரு. தூ. பொ. கை. அழகர்சாமி பிள்ளை யவர்கள் உழைப்பிலும், ஊக்கத்திலும், அருமையிலும், எளிமையிலும், பண்பிலும் பணிவிலும் (மகாத்துமா) காந்தியடிகளுக்கு ஒப்பானவர் என்பதில் ஐயமில்லை. ஏறக்குறைய உடன் பிறந்து உடன் உயிர் நீத்து (தமிழ்க் காந்தியார் சிறிது முன் தோன்றிப் பின் மறைந்தவராவர்) "ஒல்லும் வாயெல்லாம் அறவினை ஓவாதே செல்லும்வா யெல்லாம் செயல்" புரிந்த பெருந்தகைமை இருவர்க்கும் கிட்டத்தட்ட ஒப்ப உரித்தானதே யாகும். இருவரும் உண்மை கடைப் பிடித்து, ஒழுக்கத்தில் தலை நின்று, வலுவந்த முறையை வெறுத் தொதுக்கியோராவர். ஒருவர் தாய் நாட்டுப் பணியைத் தலைமேற் கொண்டு குன்றிலிட்ட விளக்கென விளங்கினர்; மற்றவர் தம் மூரார் வேண்டிய பணிகளை யெல்லாம் விருப்புடன் புரிந்து குடத்திலிட்ட விளக்கெனத் துலங்கினர்; ஒருவர் தாழ்த்தப்பட்ட மக்களுக் கெனத் தம் உடல் பொருள் ஆவியை யெல்லாம் அன்புடன் அளித்தார்; மற்றவர் தாழ்த்தப்பட்டவராலும் தாழ்த்தப்பட்டு நலிவுறுகின்ற விலங்கினங்களின் துன்ப நீக்கத்திற்காகத் தம் நலம், செல்வத்தை யெல்லாம் ஈந்து உவந்தார். ஆதலின் தமிழ்க் காந்தியார் எனும் அரிய பட்டத்திற்கு உரிமை வாய்ந்த ஒருவர் உளரெனின் அவர் 'தஞ்சைத் தாத்தா' எனப் பலரால் அன்புடன் அழைக்கப் பட்ட உயர்திரு. அழகர்சாமி பிள்ளை யன்றி வேறிலர் எனக் கூறக் கூடும்.

2. தமிழ்க் காந்தியார் தமது 55-வது அகவை வரை ஊதியத்திற்கு உழைத்தாரேனும் தம் கீழ், மேல் இருந்த அலுவலாளர் பணிகளை யெல்லாம் முட்டின்றி முடித்துக் கொடுத்து, இரவு பகலாக உழைத்து உழைத்து, உடல் நலிந்தவ

ராவர். பின்னர் பெயரளவில் ஓய்வு பெற்றுச் செயலளவில் ஓய்வின்றி 28 ஆண்டுகளுக்கு மேல் இறக்கும் நாளன்றும் பொதுத் தொண்டில் ஈடு பட்டுப் பல பொது நிலையங்களைப் பெருமையுறச் செய்தனர்.* பிறர் மேல் பழிபோட்டு எச் செயலையும் விட்டுக் கொடுக்காது, உண்மை உழைப்பால் உயர் வுற்று, செயலால் ஒன்றிப்புடன் (கர்ம யோகியாய்) அவரைப் போல் விளங்கியவர் மிகச் சிலரே யாகும்.

3. அவர் எத் தொண்டில் ஈடு படினும் அதன் பயனைப் பிறருக்கே அளித்து வந்த பேராளர் ஆவர். நாட்டுச் செட்டுச் சீட்டு (Natinal Savings Certificate) விற்று அவரடைந்த தொகை 13,000 ரூபாவுக்கு மேலான தென்பதைச் சிலரே அறியக் கூடும். இப் பெருந் தொகையை யெல்லாம் வீடு தேடிச் சென்று வீதித்துக் கொடுத்தன ரெனின் அவரைப் போன்ற தியாகி காண்பதரிதாகும். அவர் வருந்தி யுழைத்துச் சேமித்த தொகை அதிற் பாதி கூட இருக்கா தென்பதும் அவர் ஊதியங் கருதி உழைத்திருந்தால் பன் மடங்கு சேமித் திருக்கக் கூடு மென்பதையும் நாம் மறக்க முடியாது. தம் உற்றார் உறவினர் நல இழப்பங்களுக் கெல்லாம் விடாது சென்று பெருமைப் படுத்தி, ஆறுதலளித்து வருங் காலங்களி லெல்லாம் தம் சொந்தச் செலவில் சென்று இயன்ற பொதுத் தொண்டாற்றி வருவதே அவர் வழக்கம் ஆகும். பொதுச் செலவில் சென்று சொந்த வேலை பார்த்து வரும் உல கியல்பிற்கு எத்துணை மாறுபாடு! அவர் தம் அரிய செல்வாக்கால் தாமும் தம்மைச் சார்ந்தோரும் எத்துணையோ ஊதியம் பெறக் கூடிய நிலை இருந்ததேனும் அவர் ஒன்றையும் பயன் படுத்திக் கொள்ள வில்லை என்பது யாவரும் அறிந்த தாகும். இவ்வாறு பல வகைகளில் அவர் ஓர் பற்றற்ற பாட்டாளி (நிட்காமிய கர்மி) யாக விளங்கியதால் அவர் பொன்னடிகள் போற்றத் தக்கன என்பது மிகையாகாது.

---

*பேசு படம், வட்டாட்டம் (சர்க்கஸ்), நாடகம் எதையும் ஒரு முறையும் பார்த்து மகிழ்ந் தறியா மாண்புடையவ ராவர்.

4. அவர் எவ் வேலையாக எங்குச் செல்லினும், எவ்வளவு தொலைவையும், மழை வெயிலையும், தளர்வையும் பொருட் படுத்தாது நடந்தே செல்லும் எளிமையில் காந்தி யடிகளையும் விஞ்சியவர் என்னலாம். யார் வேண்டினும் கேளாது, எப் பொது நிலையம் வழிச் செலவைக் கொடுப்பினும் கொள்ளாது, பொதுப் பணிக் கென அவர் திருவடி நடந்ததற் கொப்ப வேறெவரடியும் பயன் பட்டதாகத் தெரியவில்லை. எளிய உடை, உணவுடன் வாழ்ந்த தன்றி இறுதி வரைத் தம் (கதைத்) தாமே துலக்கிய தனிப் பெருமை யுடையவராவர். அறுபதிற் கறுபதாம் திருமணஞ் செய்து கொள மறுத்த தன்றி நீண்ட தம் வாழ்வில் ஒரு முறையாவது பிறந்த நாள் கொண்டாடியதே யில்லை. அவர் தம் 65 ஆண்டிற்கு மேல் ஒரு முறை எளியேன் ஓர் ஊர்தியில் சென்று கொண்டிருந்த பொழுது பின்னால் தொலைவில் வந்து கொண்டிருந்தவர் என் நன்மைக்காக ஓர் செய்தி தெரிவிக்கும் பொருட்டுத் தம் மிதியடியைக் கையிலேந்தி ஓடோடியும் வந்த எளி வந்த வான் கருணையை நினைக்கும் பொழுதெல்லாம் அவரை வாழ்த்தி வணங்கி வருந்தாதிருக்க முடியவில்லை. இதற்கு ஏற்றதொரு கைம்மாறு செய்தே தீர வேண்டுமென எண்ணி ஏங்கியும் அவர் இடங் கொடாதிருந்தமை என்றென்றும் பறை சாற்றற் பாலதாகும்.

5. அவர் தக்கார் யாவரையும் பெருமைப் படுத்தி மகிழும் வகை மிக மேலானதாகும். அவர் பதவியிலிருந்த போது அவர் தம் நீதி மன்றங்களில் வழக்குரைத்து வந்த வீரத்திரு. ஆ. தா. பன்னீர்ச்செல்வம், திரு. த. வே. உமாம கேச்சுரம் பிள்ளை முதலியோர் அவரை வெளியே காணின் பெருமையுடன் எழுந்து வணங்குவர். ஆனால் அவர்களை அமரச்செய்து, தாம் நின்று வணங்கி, அவர்களைத் தம் மேற் பதவியாளராகக் கருதுவதாகக் கூறி மகிழ்வர். அவர்களிரு வரும் முறையே மாநாட்டாண்மைக் கழக (சில்லா போர்டு) நாட்டாண்மைக் கழகத் (தாலுக்கா போர்டு) தலைமை வகித்த தால் அவர்களுக்கு முன் அப்பதவிகளில் சில்லாத் தண்டல்

தலைவரும் (கலெக்டர்) உதவித்தண்டல் தலைவரு (டெபுடிம் கலெக்டர்) பணியாற்றியதால் அவர்களை அவ்வப் பதவியாள ராகிய மேலோராகத் தாம் கருதுவதாக விளக்குவர். எளி யேன் அவரது அண்டை வீட்டுக் காரனுயிருந்ததால் பலதலை முறையாகக் கொண்டாடி வந்த முறைபற்றி அவரை "அண்ணு" .வென அழைத்து வந்தும் தம்பி எனவோ, பெயர் குறித்தோ அழையாது "அண்ணு" வெனவே புன் சிரிப்புடன் திருப்பி அழைத்து வந்தமை அவர்களை அப்பாடி களுடன் ஒப்ப எண்ணச் செய்ததாகும்.

6. அவரைப்போல் தம் முன்னேரைப் பேணிப் போற்றி யவர் வேறில்லை யெனலாம். அவர் பெயரின் முன்னடையாக வுள்ள "த. பொ. கை."யிலுள்ள 'கை' அவரது முன்னவர் கைலாயம் பிள்ளையைக் குறிப்பதாகும். இவ்வாறு எத்துணை பேர் தம் தந்தை பெயருடன் மற்ற முன்னவர் பெயரையும் குறித்து வருகின்றனரெனக் கருதின் வேறில்லை யெனவே கூறலாம். அத்துடன், அமையாது அவர் தம் மக்களுக்கும் அப் பெயரையே 'கைலகுரு,' 'கைலாயம்' எனச் சூட்டி மகிழ்ந்தார்: இன்னும் அவர் மூத்த மகன் பெயரிலுள்ள 'குரு' வென்பது 'குருசாமி பிள்ளை' எனும் அவர் அண்ண னின் பெயரைக் குறிப்பதாகும். அவர் மக்கள் சூட்டப் பெற்றுள்ள 'அ. சு.' எனும் முன்னடைகள் அவர்களது தந்தைக் கடுத்தாக சுப்பையா பிள்ளை எனும் அவரது வேருெரு உடன் பிறந்தார் பெயரைப் பெருமைப் படுத்தற் கெழுந்ததாகும். இவ்வாறு தாமன்றித் தம் மக்களும் தம் முன்னேர் ஒருவரையும் விடாது போற்றும்படிச் செய்த பெருமை அவரையே சார்ந்ததாகும். இன்னும் இவ்வகையில் அவர் ஆசைக்கு அளவு தானும் இல்லை என்பதை விளக்க வல்ல வேடிக்கை நிகழ்ச்சி யொன்றுண்டு. 40 ஆண்டுகட்கு முன் அவர் மூத்த மகன் பிறந்த பொழுது என் தந்தையார் அவரைப் பார்த்து வாழ்த்தியதும் அம மகனுக்கு 'பொன் கயில குரு சுப்பையா' எனத் தன் முன்னேர் நால்வர் பெயரையும் சேர்த்துச் சூட்ட விருப்பதாகக் கூறி மகிழ்ந் தனர். எந்தையார் அம்மகனின் தந்தைப் பெயரை விட்டு விடுதல் தகாதாதலின் 'அழகிய' என்னும் அடையையும் சேர்த்துத்தான் ஆகவேண்டு மென வலியுறுத்திக் கூறி விளம்பரப் படுத்தியதை யானறிவேன். நல்ல வேளையாக அடுத்தடுத்து இரு மக்கள் பிறந்து 'கைலாயம்,' 'சுப்பிர

மணியம்' எனப் பெயர் தாங்கி மூத்த மகனின் பெயரைக் குறுக்கினர்; இன்றேல் அவர் பெயரை நாம் எளிதில் கூற முடியாதிருந் திருக்கும்!

7. அவர் தமிழன்புமிக்கவர். திருக்குறளை ஓயாது படித்துத் தம் போன்றோர் எளிதில் புரிந்து கொள்ளத் தக்க தொரு சிற்றுரை, ஆங்கில மொழி பெயர்ப்புச் செய்து காட்டுவது வழக்கம். திருக்குறள் எளிய விலைப் பதிப்புக்களை வாங்கி வழங்குவதில் அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. எளியேன் இயற்றியுள்ள "திருக்குறள் சொல்லடைவு" என்னும் நூலை வெளியிடத்தக்க செல்வரைக் குறிக்கொண்டு, சமயம் நேர்ந்துழி, பயன்படுத்த இருந்தவர்! என்னே காலப்போக்கு!: அவர் தாயுமானார் பாடல்களைப் பாடும் உணர்ச்சியும் பெரு மிதமும் கேட்டு மகிழத் தக்கனவாகும். தத்துவ ஆராய்ச்சி, சமரச சன்மார்க்கம், கவின் கலைகளில் ஈடுபாடுடையவர். அவற்றிற்கென அவர் செலவழித்த அளவு அவர் நிலையினர் வேறு யாவரும் செலவு செய்ய முன்வாரார்.

8. அவரால் மேன்மையுற்றோர் பலப் பலர் ஆவர். எளியேனது வேலை யுயர்விற்கு அவர் தலை சிறந்த ஏதுவா யிருந்தா ரென்பதை நன்றியுடன் என்றென்றும் போற்றக் கடமைப் பட்டுள்ளேன். அவரால் நன்மையடைந்த, நிதி நிலையங்களும், கூட்டுறவு நிலையங்களும் பலப்பலவாகும். சிறப் பாய்க் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும், அதற்கு மேலாகக் கரந்தைக் கூட்டுறவுப் பதிப்பகத்திற்கும் அவர் செய்த பணி மிகப்பல வாகும். யாவற்றிற்கு மேலாக விலங்கு வாதனை விலக்குச் சங்கம் இருந்தவிடந் தெரியாது ஏழ்மை யுற்றிருந் ததை, இச்சில்லா முழுவதிலும் பரப்பி 33,000 ரூபாய்க்கு மேல் முதலுடன் விளங்கச் செய்ததே அவர் தொண்டு களுக்குத் தக்க கட்டளைக் கல்லாகும். இவ்வாறு மாண்புற்ற மக்களும், மாநிலையங்களும் அவருக்கு நன்றி செலுத்த என் றென்றும் கடமைப் பட்டுள. அவர் அரும் பெயர் விளங்க அவர் ஆற்றிய அறங்களை வளர்ப்பதற்கு யாவரும், யாவும் நன்கொடை வழங்கி அவர் தொண்டுகளை நிலை நிறுத்த முன் வருவார்களாக! "நன்றி மறப்பது நன்றன்று" என்பதை உளமார உணர்வார்களாக!! அவர் தம் ஆருயிர் அமைதி யுறுவதாக!!!

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

சங்க உறுப்பினரும் அணுக்கத் தொண்டருமாகிய
திருவாளர் த. பொ. கை. அழகர்சாமி பிள்ளை
அவர்கள் பிரிவாற்றுது
கூறிய இரங்கற் பாக்கள்.

இருவர்பினை வின்றெழுந்திங் கெமையுருக்கும்; அன்னவராம்
இணையில் லோரில்
ஒருவரெம துயிர்த்துணைவர் உயர் அழகர் சாமியெனும் உரவோர்அம்மா!
மருவுமிவர் இப்பிறப்பில் மலிவாழ்க்கைப் பயனெல்லாம் மருவி நின்றுர்!
உரியபொழு துயர்உலகம் உற்றனர்யாம் ஒருதுயரும் உறுதற் கில்லேம்.

தன்னலமொன் றில்லாதார் தாமிவரென் றுலகுரைக்கும்
தன்மை என்னே!
மன்விலங்கு தன்னலமும் மாவேழை தன்னலமும் மாநி லத்தில்
முன்னியபல் சங்கங்கள் முயல்தொண்டின் தன்னலமும் முதல வாய
பன்னெறிசேர் பொதுத்தொண்டின் பலநலமும் தன்னலமாப்
படைத்தா ரன்றே!

உள்ளொன்று புறமொன்றிங் குருதொளிர்நற் சீலரென உரைப்ப
துண்டு!
கள்ளமிலாக் கருத்தொன்று! கடுகடுத்த மொழியொன்றுட்
கருணை யொன்று!
பள்ளமுறு கடுநீரிற் பதைத்தெழுமோர் செயலொன்றுட் பணிவு
மொன்றே!
எள்ளவிலார் உளத்திருக்க எங்குற்றுர் எனக்கவலார் எவரே அம்மா!

30—1—49. கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை.

இசைத் தமிழ்

திரு. சங்கீதம்: ப. சுந்தரேசன்,
தேவார இசை யாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

4. இசை நரம்பும் குறியீட்டெழுத்தும்.

பழந் தமிழ் நாட்டுப் பெருமக்கள் பேரியாழெனுங் கருவியிற்றான், முதன் முதலில் ஏழிசை யோசைக்கேற்ப நரப்புகளைக் கட்டினர், அவைகள் மூன்று நிரலாகக் கட்டப்பட்டன. முதலேழு நரம்புகள் இயற்கையில் எத்தகையளவுடன் அமைந்துளதோ, அவற்றின் பாதியளவே—இரண்டாம நிரல் நரம்புகளாகவும், இந்நரம்புகளின் பாதியளவே, மூன்றும் நிரல் நரம்புகளாகவும் அமைந்து நிற்பன. அளவிற் பாதியை செம்பால் எனவும், அளவில் நான்கிலொரு கூற்றை வாரம் எனவும் பின்னர் முறையே வாரச் செம்பால் செம்பால் வாரம் போன்று கூறப்படுவனவெலாம் பழந்தமிழர்கள் கொண்ட கணித முறைகளேயாம். இவ்வாறு அளவறிந்து பேரியாழிற் கட்டிய மூன்று நிரல் நரம்புகள் (21) இருபத்தொரு நரம்புகளாகும், இந் நரம்புகளை மக்கள் முதன் முதலில் ஒன்று, இரண்டு மூன்றெனவே குறித்து வழங்கி வந்தனரெனக் கூறலாம்.

பின்னர் அந் நரம்போசைகளை நன்கு காணக் காண தனது குரலையும் அவ்வோசை போன்று இயக்கக்கருதி, இன்றியமையாது அந் நரம்புகளைப் பெயரிட்டுக்கூற வேண்டியதாயிற்று, அம் முறையில் இயற்கையிலமைந்த நரம்புகளின் இட வமைதியையும் அத னோசையமைதியையுமே குறிப்பாகக்கொண்டு பெயரமைத்தனரென நன்கு அறியக்கிடக்கின்றது. இனி நரம்பின் பெயர் வகை யாவையும் பல அரிய பெரிய ஆராய்ச்சியாளர்களின் முடிவைக்கொண்டே எமது சிற்றறிவிற் கெட்டியாவாறு கூறுகின்றும், அறிஞர்கள் ஆராய்ந்தறிந் துணர்ந்து, கொளத்தகுமவற்றைக் கொள்வாராக.

பழங்கால மக்கள் எவ்விடத்திலேனும் முதன்மையாக வைக்கப்பட்டதோர் பொருளை தலையாய பொருளெனக் கூறுவான் வேண்டி, தாரம் எனக்கூறினர், இவ்வழக்குபற்றியே பேரியாழின் முதல் நரம்பை தார நரமபெனப்பட்டது. பெருங்காப்பிய உரைகாரர்கள் இசைத் தமிழ் மேற்கோள் காட்டுமிடத்து <u>தலையின தாரஞ் செயுந் தாரம்</u> எனுஞ் சொல்வழக்கைக்காட்டியுள்ளனர், இரண்டாம நரம்பினோசை இயற்கையில் மகளிர் குரல் போன்றொலித்ததால் அதனை மகளிர் குரலொத்தது எனும

பொருள்பட குரல் நரம்பெனப்பட்டது, இனி பண்டையோர் சில பொருள்களை ஓரிடத்தே நிரலாக (வரிசையாக) வைக்குமிடத்து முதற்பொருளை தாரமெனக் கூறியது போன்றே மூன்றாவது பொருளை மூன்றாமிடத்தது எனும் பொருள் பட துத்தம எனுஞ் சொல்லை வழங்கினரெனக் கொள்ளலாம், அம்முறையில் மூன்றாம் நரம்பை துத்த நரம்பெனப்பட்டது; நான்காம் நரம்பினோசை முதல் நரம்பாகிய தார நரமபோசையிற் பிறந்த தன்மையாதலானும் அந் நரம்பிற்கு இடத்தே கிளைமுறையில் அமைந்த தன்மையாதலானும் இடத்தது எனும் பொருள்பட உழையெனுஞ் சொல்லாற் குறித்து உழை நரம்பெனப்பட்டது, பின்னர் ஐந்தாம் நரம்பை, அந் நரம்பு தார முதலாக வமைந்த நிரலில் கடையாக நின்றதானும் இந் நரம்பினோசையிலிருந்தும் மேற்றான ஏனைய யிசைகள் பிறக்குந் தன்மையாதலானும், அடிமணை பட்டடை இளி யெனுஞ் சொற்களில் இளி யெனுஞ் சொற்கொண்டே இளி நரமபெனப்பட்டது.

ஆகவே இயற்கை யிலமைந்த ஐந்து நரம்புகளும் தாரம், குரல், துத்தம், உழை, இளி யெனப் பெயரெய்தி நினறன; பின்னர் இவ்வைந்து நரம்புகளின், இடைவெளி யளவினுற் பிறந்த ஈரிசை நரம்புகள், கைக்கிளையும், விளரியுமாகும். இவற்றின் பெயர்க் காரணங்கள் புரட்டாசி, ஐப்பசித் திங்கள் தமிழ்ப் பொழிலின் கண் அன்பர்கள் படித்தறிந்து இருக்கலாம். ஏழிசைகளின் மூன்று நிரல்களும், || தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி விளரி || தாரம், குரல், துத்தம, கைக்கிளை, உழை, இளி, விளரி || தாரம, குரல், துத்தம, கைக்கிளை, உழை, இளி, விளரி || யென வமைந்து நின்றன.

இவ்வகையான ஏழு நரம்போசைகள் ஒவ்வொன்றினோடும் தங்களது குரலோசையைச் சேர்த்தியக்கிப் பாடிப் பழகிய பழந் தமிழர், இயற்கையில் உயிரெழுத்துக்களையே முதன முதலாகப் பயன் படுத்தினர், இக்கருத்தையே நமக்கு நிகண்டு நூலகளும் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ வென்றேழும் ஏழிசைக் கெய்து மக்கரங்கள் எனவும், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ வெனும் இவ் வேழெழுத்தும் ஏழிசைக் குரிய எனவும், ஆங்குள ஆ, ஈ, ஊ ஏ, ஐ, ஓ, ஔ வென்னு மேழும் திங்கிலா அக்கரங்கள் செப்பு மேழிசைக்குந் தானே எனவும் கூறுகின்றன.

இனி இசை நிரல்கள் எந்த இசையை முதலாகக்கொண்டு நின்றாலும் ஒவ்வொரு நிரலுக்கும், இவ் வேழு எழுத்துக்களையே கொள்ளவேண்டுமென்பது வெளிப்படை, அவ்வாறே அட்டவணைப்படுத்தி காணுவோமாகில் அவற்றினிடையே அமைவுறும் மாறுபாடுகளை நன்கு காணலாம்.

ஏழு நிரல்களுக்குரிய அட்டவணை.

முதல் நிரல்	இசைகள்	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி
	எழுத்து	ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
இரண்டாம் நிரல்	இசைகள்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
	எழுத்து	ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
மூன்றும் நிரல்	இசைகள்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்
	எழுத்து	ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
நான்காம் நிரல்	இசைகள்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்
	எழுத்து	ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
ஐந்தாம் நிரல்	இசைகள்	உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை
	எழுத்து	ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
ஆறும் நிரல்	இசைகள்	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை
	எழுத்து	ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
ஏழாம் நிரல்	இசைகள்	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி
	எழுத்து	ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ

மேற்குறித்த அட்டவணையை உற்று நோக்குங்கால் இசைகள் எத்தகைய நிரலாகவமைந்து நின்ற போழ்தினும், உயிரெழுத்துக்களின் வகைகள் மாறுபாடடையாது நிற்பதே முறையாகுமென்பதை நன்கறியக்கூடும்.

ஏழிசைகளும் ஒவ்வொரு நிரலிலும் முதலிசையாக நிற்குங்கால் அம்முதலிசைக்கு, ஆ-எனும் எழுத்தே உரியதாக நிற்கின்றது. இம்முறையே மற்றைய ஆறெழுத்துக்களும் நிற்கின்றன, இம்முறை குரலிற் பாடுவதற்கு இன்றியமையாது அமைவுற்றதால் மிகச் சிறப்புற்றதாகும்; மேலும் நாளடைவில் ஒரே எழுத்து ஏழிசைக்கும் பொதுவாக வருவதினும் ஒவ்வோ ரிசைக்கும் மாறுபடாத அவ்விசைக்கே உரிய குறியீட்டெழுத்தை அமைக்கக்கருதிய பழந் தமிழ் நாட்டிசைவலார் உயிர் மெய்யெழுத்துக்களில் மூவகை யினத்திலும் சிறப்பெழுத்துக்கள் சிலவற்றைப் பயன் படுத்தினர். இம்முறை இன்றளவும் வழக்கிலுள்ளது, பழந்தமிழர் கொண்ட குறியீட்டெழுத்து முறைகள் ஏழினுள் ஆறுவது முறையே இற்றைய ச, ரி, க, ம, ப, த, நி யாகும் இதனையும் கணித்தறிவாம்.

உயிர்மெய் யெழுத்துக்களில் வல்லினமாகிய க, ச, ட, த, ப, ற எனும் ஆறெழுத்துக்களில், மூன்றுமெழுத்தாகிய ட வையும், ஆறு மெழுத்தாகிய ற வையும் நீக்கி எஞ்சிய, க, ச, த, ப எனும் நான்கெழுத்துக்களையும் மெல்லினமாகிய ங, ஞ, ண, ந, ம, ன எனும் ஆறெழுத்துக்களில், சிறப்பு பற்றி நான்காமெழுத்தாகிய நவ்வையும், ஐந்தாமெழுத்தாகிய மவ்வையுமாக இரண்டெழுத்துக்களையும், இடையினமாகிய ய, ர, ல, வ, ழ, ள எனு மாறெழுத்துக்களில் இரண்டாமெழுத்தாகிய ரவ்வெனு மோரெழுத்தையுமே ஏழிசைக்கு என்றும் நிலைபெறுமாறு குறியீட்டெழுத்துக்களாக கொள்ள நேரிட்டது. மேலும் இவ்

வெழுத்துக்களைத் தேர்ந்து எடுத்த சிறப்பு வல்லினத்தில் நான் கெழுத்துக்களும், மெல்லினத்தில் இரண்டெழுத்துக்களும் இடையினத்தில் ஒரெழுத்தும் கொண்டது மிகவும் அறிந் துணரற் பாலதேயாம். ஏழிசைக்கும் இவ்வெழுத்துக்கள் பொருத்தப்பட்ட முறையைச் சிறிது காணுவாம்.

முதல் நரம்பிற்கு (தாரம்) உயிர் மெய்யெழுத்துக்களில் நரம்பிற்கு முதலெழுத்தாகிய க, என்ற வெழுத்தையும், இரண் டாம் நரம்புக்கு (குரல்) மகளிர் குரலொத்ததால், ம, என்ற வெழுத்தையும், மூன்றும் நரம்பிற்கு (துத்தம்) பகை நரம்பாத லால் ப, வெனுமெழுத்தையும் சிறிய கிளையாகிய நான்காம் நரம் பிற்கு (கைக்கிளை) த, வெனுமெழுத்தையும், ஐந்தாம் நரம்பிற்கு (உழை) ந, வெனுமெழுத்தையும், ஆறும் நரம்பிற்கு (இளி) ச, வெனும் எழுத்தையும், ஏழாம் நரம்பிற்கு (விளரி) ர, வெனு மெழுத்தையுங் கொள்ளப்பட்டதென நன்கு உணரலாம். இவ் வெழுத்துக்களையும் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனு முறைப்படி பயன் படுத்துவதும் பழங்கால வழக்கேயாம். இது பற்றியே பழந்தமிழ் நாட்டுப் பாணர் பெருமக்கள் பாடல்களியற்றிப் பாடுங்கால் அப்பாடலில் அமைந்து வரும் எழுத்துக்கள் அத னதற்குரிய இசை நரம்போசையோடு இசைத்துப்பாடி வந்தனர். இதன் கருத்து சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் மருதப் பண் வகை நான்கிற்கும் எடுத்துக்காட்டாக இதன் பாட்டு எனப் பாடல்களைத் தந்தும் நரம் பணியும்படி எனவும் கூறியுள்ள மையால் நன்கு விளங்கும். இதைப்பற்றிய ஆராய்ச்சி முடிபுகள் ஏற்றபெற்றி மேல் வரும் கட்டுரைகளிற் காணலாம். இனி இசை நரம்பின் பெயர்களையும் அதன் குறியீட்டெழுத்தையும் முறையாக ஒவ்வோரிசையை முதலாகக் கொண்டே யெழுது வாம்.

		க	உ	ங	ச	ரு	சா	எ
முதல் நிரல்	இசைகளின்	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி
	குறியீட்டெழுத்துக்கள்.	க	ம	ப	த	நி	ச	ரி
இரண்டாம் நிரல்	இ.	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
	கு.	ம	ப	த	நி	ச	ரி	க
மூன்றும் நிரல்	இ.	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்
	கு.	ப	த	நி	ச	ரி	க	ம
நான்காம் நிரல்	இ.	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்
	கு.	த	நி	ச	ரி	க	ம	ப
ஐந்தாம் நிரல்	இ.	உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை
	கு.	நி	ச	ரி	க	ம	ப	த
ஆறும் நிரல்	இ.	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை
	கு.	ச	ரி	க	ம	ப	த	நி
ஏழாம் நிரல்	இ,	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி
	கு.	ரி	க	ம	ப	த	நி	ச

மேற்காட்டிய நிரல்களையும், குறியீட்டெழுத்துக்களையும் அவற்றிற்கமைந்த பழங்கால தற்கால பண், பெயர்களையும் எழுதிக்காணுவாம்.

க	பழங்காலப் பெயர்கள்.	தற்காலப் பெயர்கள்.	தற்கால மேள எண்கள்.
தார முதல் விளரி யீருக க, ம, ப, த, நி, ச, ரி	மேற் செம்பாலை	மேசகல்யாணி	65
உ குரல் முதல் தார மீருக ம, ப, த, நி, ச, ரி, க	செம்பாலை	அரிகாம்போதி	28
ந துத்தமுதல் குரலீருக ப, த, நி, ச, ரி, க, ம	படுமலைப்பாலை	நடபைரவி	20
ச கைக்கிளை முதல் துத்த மீருக த, நி, ச, ரி, க, ம, ப	செவ்வழிப்பாலை	சுத்ததோடி	72 மேளத்திலடங்காதது வழக்கிலில்லை.
ரு உழை முதல் கைக்கிளை யீருக நி, ச, ரி, க, ம, ப, த	அரும்பாலை	தீரசங்கராபரணம்	29
சா இளிமுதல் உழை யீருக ச, ரி, க, ம, ப, த, நி	கோடிப்பாலை	கரகரப்பிரியா	22
எ விளரி முதல் இளி யீருக ரி, க, ம, ப, த, நி, ச	விளரிப்பாலை	அனுமத்தோடி	8

இவ்வாறமைந்த ஏழு பெரும்பாலைகளையும் பழங்காலத்தில் தமிழ் மக்கள் யாழ்க்கருவிகளில் இசைத்து மகிழ்ந்து வந்தனர். யாழ்க்கருவிகளுக்கு முன்பிருந்த குழற்கருவி வேறு பின்னர் தோன்றிய குழற் கருவிகளில் மேற்காட்டிய பாலைகளினுள் ஆருவது பாலையாகிய கோடிப்பாலை யெனுங் கரகரப்பிரியா இராகத்தையே ஊதி வந்துள்ளனர். இவ்வுண்மையை இற்றை நாட் குழலாசிரியர் பலரும் அறிவர். இக்கோடிப் பாலைக்கு அமைந்த குறியீட்டெழுத்துக்கள் ச, ரி, க, ம, ப, த, நி என்பதே யாம். சிலப்பதிகாரம் குழலாசிரியனமைதியில் அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டாகத்தரும் பழங்கால இசைத்தமிழ்ச் செய்யுளொன்றும் இதனை வலியுறுத்தும். அச்செய்யுள் வருமாறு

ச, ரி, க, ம, ப, த, நி யென்றேழெழுத்தால் தானம்
வரி பரந்த கண்ணினுய் வைத்துத்—தெரிவரிய
ஏழிசையுந் தோன்றும் இவற்றுள்ளே பண்பிறக்குஞ்
சூழ் முதலாஞ் சுத்தத் துளை

பழந் தமிழர்கள் கொண்ட ஏழிசையின் குறியீட்டெழுத்துக்களில் ஆரும் நிரலினுள் அமைந்த கோடிப்பாலையின் ச, ரி, க, ம, ப, த, நி யெனும் எழுத்துக்களே. பிற்காலத்தாரால் பல்வேறு பண்களைப்பாடினாலும் ஒவ்வொரு பண்ணுக்குமமைந்த இசை யோசைகளைக் குறித்துப்பாட வாய்ப்பேற் பட்டுவிட்டன. எந்த ஒரு பண்ணைப் பாடினாலும் ச, ரி, க, ம, ப, த, நி எனு மெழுத்தால் பாடி வந்த பிறகு அதன் தோற்றமும் முறையும் மறந்து பல்வேறு கருத்துகள் தென்னாட்டில் தோன்றிவிட்டன.

இசைத் தமிழ்ப் பாடல்.

இசையாளர் (சங்கீதம்) ப. சுந்தரேசன், கும்பகோணம்.

3. முத்துத்தாண்டவர் இயற்றியது.

29-ஆவது
நீரசங்கராபரணத்திற் பிறந்தது.

பண், புதயமனோகரி.

தாளம்—ஆதி. (எட்டு எண்கள்).
“ நான்கெண் நடை ”

ஆ.—சரிகமகபச்ா,
அ.—ச்பமகரிச,

| தனதன தனதன தனதன தனதன |
| தனதன தனதன | தனதன தனதன ||

முதலடி

காணமல் இருந்தால் என்
கலக்கம் தெளியாதே —காணமல்

துணையடி

பூணரம் அரவு அணிந்த
பொன்னம்பல நாதனைக் —காணமல்

கடையடி

நாலுகோ புரத்தழகும் நன்மதிள்மண் டபத்தழகும்
சீலமிகுந் தெருவழகும சிவகங்கை தன்னழகும்
ஆலயத்தின் தனியழகும் ஆடுமம் பலத்தழகும்
பாலின்மொழி யுமையழகும் பரமானந் தத்தழகும் —காணமல்

முதலடி

பா; ச்ா; பா ; மககரி	சா ; சா ;	சரிகா மாகா	‖
கா; ணு; மல்; இ,ருந்	தால் ; என் ;	க , , லக்கம்	‖
பா ச்ா பா; பா ; பமகரி	சா ; ; ;	மககரி சா ;	‖
தெ ளி யா; ; ; தே , , ,	; ; ; ;	, , , , , ;	‖
பா; ச்ா; பா ; மககரி	சா ; சா ;	சரிகரி கமகா	‖
கா; ணு; மல்; இ,ருந்	த்ால் ; என் ;	க , , , லக்கம்	‖
பா ச்ா பா; ச்ாபாபமகரி	சா ; ரிகமக ;	சரிகரி கமகா	‖
தெ ளி யா; , , தே , , ,	, ; , , , , ;	, , , , , , ,	‖
பா ச்ா பா; பா; மககரி	சா ; ரிகமக	பா மக ரிகமக	‖
கா ணு , ; மல்; இ,ருந்	தால் ; என் ,,,	க லக் கம் , ,	‖
கா பா ச்ா ச்ாச்ச் பமகரி	சா ; ரிகமப	ரீ ; மககரி	‖
தெ, ளி யா , , , தே , , ,	, ; , , , ,	, ; , , , ,	‖

—காணுமல்.

துணையடி

பா ; ச்ா ; ரீ ; க்ா ; | ; ரிக்ம்ாக்ா | ம்க்க்ரி ச்ா ; ||
பூ ; ணு , , ; ரம் ; | ; அ , ர வு | அ , ணிந் , த ; ||

பா ; ச்ா ; ரீரீ க்ா ; | ; ரிக்ம்க் ரிக் | ம்க்க்ரி சா : ||
பூ ; ணு ; , , ரம் ; | ; அ , ர , வு , | அ , ணிந் , த ; ||

பா ச்ா பா ச்ா ரீரீ க்ா : | ரிக்ம்க் ரிக்ம்க் | ம்க்க்ரி சா ; ||
பூ , ணு , , , ரம் ; | அ , ர , வு , , , | அ , ணிந் த ; ||

ச்ா ; பா : பமமக ரீ ; | சரி கா மா கா | ம க ரி ச ரி க ம க ||
பொன் ; னம் ; ப , , , ல ; | நா . , , . | த , , , னே , , , ||

ச்ா பா ச்ா பா பமமகரீ ; | ச ரி கா ம க க ரி | ம க ரி ச ரி க ம ப ||
பொ ன் னம் , ப , , ,ல ; | நா , , , , , , , | த , , , னே , , , ||

—காருமல்.

கடையடி

பா பா பா ; ப மா க ரீ சா	சரீ க மா கா	ம கா க பா பா	‖
நாலுகோ ; புரத்தழகும்	நன்ம தின் மண்	டபத்த ழகும்	‖
ப ம க ரி சா சா ச ப ப ம க ரி சா	ச ரி க ம கா பா	பா பா பா பா	‖
சி . ல . மிகும் தெருவழகும்	சி , வ , கங்கை	தன்ன ழகும்	‖
கா பா பா பா ப பாப ச்ா ச்ா	ரி க் ம்ா ம் க் ரீ	ம்க்ரி ச்ா ச்ா	‖
ஆல யத்தின் தனிய ழகும்	ஆ , டும் அம்ப	லத்த , ழகும்	‖
கா பா பா பா ப ச்ா ரீ	க் ம் க்ா க் ம் க்ா	ம்க்ரி ச்ா சா	‖
ஆல யத்தின் தனியழகும்	ஆ , டும் அம்ப	லத்த , ழகும்	‖
ச்ா ச்ா பா பா ச்ச்ாச் பாபா	ச்ா பா ப ம க ரி	மகரிச ரிகமக	‖
பாலின்மொழி உமைய ழகும்	ப ர மா னந்	தத்த , ழ , கும்	‖

—காணுமல்.

குறிப்பு :—இந்தப் பண் த, நீ எனு மிசையிலாது ஏற்ற விசையில் ரி, க, ம, க, பா எனும் போக்கையும் கொண்டு தனிச்சுவையை பயக்கக்கூடியதாகும். பிற்காலக் கற்பனையாளர்களால் ஏற்படுத்தப்பட்ட இப் பண்ணில் திருவாளர் முத்தையா பாகவதர் அவர்கள் ஒரு பாடல் இயற்றியுள்ளார்கள்.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
341	8	நாம்பிற்கு	(நாம்பிற்கு) இச்சொல்லை விட்டு விடுக.
,,	19	எழுத்துக்கள்	எழுத்துக்களை
,,	20	வந்தனர்	வந்துள்ளனர்.

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,

தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

(முற்றொடர்ச்சி: துணர் 24, மலர் 8, 9, பக்கம் 239.)

உளமும் உடலும்

மனிதனின் உடல் நிலை சரியாக இருக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும். 'சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும்' என்ற பழமொழியும் இக் கருத்துப் பற்றிச் சொல்வ துண்டு. உடலில் ஏதாவது கெடுதல் (நோய்) இருந்தால், உள நிலை எவ்வளவு திற னுடையதாக இருந்தாலும், குறித்த வேலையைக் கவனிக்க மனத்திற்கு இயலாத நிலை ஏற்படுகின்றது.

ஒருவன் கட் டமைந்த அழகிய உடலைப் பெற்றிருக் கின்றான். நிறைந்த செல்வ மிகுதியால் பால், பழம் (சத்துள்ள), வலு வுள்ள உணவை உரிய நேரத்தில் உண்டு மகிழ்ச்சியோ டிருக்கின்றான். சுற்றத்தினரும் நண்பரும் சூழ்ந் திருக்கின்றனர். அச் சமயத்தில் ஏதாவ தொரு (மனதிற்குப் பிடிக்காத) காரியம் நிகழுகின்றது. உடனே அறு சுவை யான உணவை இனிதாகக் கொடுப்பினும் ஏற்றுக் கொள்ள முடிய வில்லை. சத்தான உணவு உட் சென்றாலும், உள்ள வலுவைத் தருவ தில்லை. இதனை (மன நிலையை) உணராது, மக்கள் பலரும் வைத்தியரிடம் பல வித விலை யுயர்ந்த மருந்துகளை வாங்கிக் கொடுப் பார்கள். அதுவும் பயன் படுவ தில்லை இக் கருத்துப்

பற்றிதான் பழகிய வைத்தியர் மிகவும் சிறந்தவ ரெனக் கூறுகின்றனர். உடல் நிலையோடு உள நிலையும் வைத்தியருக்குத் தெரிந்திருந்தால் மிகவும் நல மாகும்.

இன்றும் மன நிலை மகிழ்ச்சியோடு இருப்பார்க்குப் பாலும் பழமு மின்றி வெறுங் கஞ்சியே குடித்த போதிலும் (உள் நோ யின்றி இருத்தலால்) உடல் மிகவும் வலுவுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். மன வேலை அதிக மின்றி உடல் வேலை செய்பவர்க்கு நோய் மிகவும் வருத்துவதில்லை. வருத்தினும் விரைவில் குண மாகிவிடும். மனத்தை நன் முறையிலே செலுத்தி, அதன் பயனை அடைந்த மிகச் சிலரின் மேனி பொன் போல நோ யின்றி விளங்குவதும் உண்டு. மன நல ஆற்றலினால் பல் லாயிரத்தில் ஒருவர் பிறர் உடலையும் உயர்வாகச் செய்யலாம் என்பர். ஆகவே, உடலைக் கவனிப்பதைவிட உளத்தை உயர்வாகக் கவனித்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

இதுகாறும் கூறியவற்றால், உளத்திற்கும் உடலிற்கும் நெருங்கிய தொடர்பு உண் டென்றும், உடலைக் கவனிப்பதுடன், உளத்தை அதிகமாகக் கவனித்தல் அவசியம் என்பதும், மனத்தை உயர் முறையில் பழக்கினால் உயர்ந்த பல நன்மை உளத்திற்கேயன்றி, உடலுக்கும் ஏற்படும் என்பதும் உணரக் கிடக்கின்றன.

இருக்கில் இருக்கும் எண்ணிசி கோடி
யருக்கின்ற மூலத்துள் அங்கே யிருக்கும்
அருக்கனுஞ் சோமனு மாரழல் வீச
உருக்கிய ரோமம் ஒலிவிடுத்தானே.

திருக்குறள்

பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B.A. (Hons.), Ph.D.

(முற்றொடர்ச்சி: துணர் உச, மலர் அ, கூ, பக்கம் 264.)

புலான் மறுத்தல்.

6. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

(இ-ள்) யாது அருளல்லது எனின் கொல்லாமை கோறல்—அருளுடைமைச் சாதனஞ் செய்வார்க்கு யாது அருளாகாது எனின் கொல்லாமை கோறல் என்பது; அவ்வூன் தினல் பொருளல்லது—ஆகையான் அவர்க்கு அக்கொல்லாமை கோறல் செய்யும் ஊன்றினல் இறைபணியாகாது, இறைபணியாகாமை பற்றி, அன்னார் உண்ணாமை வேண்டும் புலால் எ-று.

அல்லது என்பது இரண்டிடத்தும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று; ஆகாதென்னும் பொருளது. யாது என்பது வினவிடைச் சொல்லான் வந்த ஒன்றன்பாற் பெயர். அஃது ஈண்டு அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத் தெரிந்த கிளவியாய் வந்தது. கொல்லாமை கோறல். இரண்டாம் வேற்றுமைத் தொகை; கொல்லாமையென்னுஞ் சாதனத்தைச் சிதைத்தல் என்னும் பொருளது. காரியத்தோடு காரணத்திற்குள்ள ஒற்றுமை கருதி முன்னிற்குங் கொல்லாமை கோறல் என்னுங் காரியத்தைச் சுட்டுவாராய் அதன் காரணத்தை அவ் வூன்றினல் என்றாரென்க.

'அருளுடைமைச் சாதனஞ் செய்வாராவார் பிறர் தரும் ஊனைத் தின்றாராயின், அஃது பாவம் பயந்து

அருளாட்சிக் கேடு பயக்கு மென்பது அவர் அத்தின் கையைத் தஞ் செயலாகக் கொண்டாலன்றே உண்மை யாகும். யானொருவன் துறவு பூண்டு நின்று கொல்லாமை யென்னுஞ் சாதனந் துணைகொண்டு அருளுடைமைச் சாதனஞ் செய்வேனாய் அது முடிபு போகும் வரை என் னுடலைப் பேணுதற் பொருட்டு உண்டி வேண்டி நிற்ப, அதனை யுதவுவார் ஊன்றரின் ஒரு பொருளை விழைதலும் வெறுத்தலுஞ் செய்தல் ஆகாத என் துறவிற்கு அவ் வூனை மருதுண்டல் இறைபணி யென்று கொண்டு தின்றால், அஃது அருளாட்சிக் கேடு பயவாதே' என்று ஒருவன் கூறின், அஃது இறைபணி யாகாதென்றும் அருளாட்சிக் கேடு பயக்கு மென்றும் வற்புறுத்துவார் இக் குறளைத் தந்தா ரென்க.

உயிர் வர்க்கங்கண் மேல் தனக்குச் சுரக்கும் அருளைப் பற்றி நின்று அருளுடைமைச் சாதனஞ் செய்து ஞான சாதனம் பெற்று மும் மலங்களையுங் களைந்தானாவான் மல வாசனைகள் ஒழிதற்கு உபாயந்தேடுவானாய், பெத்தத்தினும் முத்தியினும் ஆன்மாவினுடைய இச்சா ஞானக்கிரியைகள் தாந் தொழிற் படுதற்கு இறைவனுடைய இச்சா ஞானக் கிரியைகளை இன்றியமையா வென்ப தறிந்து, அவ் வியைபு பற்றித் தன்மாட்டு நிகழ்வன வெல்லாம் இறைவனது இச்சா ஞானக் கிரியைகளே யென்றும், அது பற்றித் தான் இறைவனுக்கு என்று மடிமையே யென்றுங் கண்டு, அவ் விறைவனை வழிபடுதற்கண் அவன் உருவம் அருவம் என்னும் இரு வகை வடிவங்களு மின்றியவ னுகையான் பொறியுணர்விற் கேனும், மன வுணர்விற் கேனும் விடயமாகா னெனினும் உயிர்ப் பொருள் உயிரில் பொருள் கள் அனைத்தும் அவனது வடிவமே யெனக் கொண்டு, அவற்றுள் உயிரில் பொருள்கண் மேற் பொது வகையானும் ஏனை உயிர்ப் பொருள்கண் மேற் சிறப்பு வகையானும் பரி தன் மாத்திரை யான் அருள் செய்து நிற்றலே அடிமைத் திற மென்னும் இறைபணியாகு மாகலான், யாது இறை

பணி அது அருளாகும் என்பது பெறப்படும். இதனானே யாது அருளாகாது அது இறைபணியாகாது என்னும் அவிநா பாவமும் அறியப்படும். இதனைக் கருத்திற் கொண்டு, கொல்லாமை கோறல் அருளாகாது என்னும் ஏதுவானே, ஊன்றினல் இறைபணியாகாது என்னும் மேற்கோளைச் சாதித்தாராயிற்று ஈண்டு ஏது கொல்லாமை கோறற் கண்ணும் மேற்கோள் ஊன்றினற் கண்ணுமாய் வேறு நிற்க வைத்தாரெனின், அவை இரண்டும் ஒருங்கு நிற்றல் காட்டுதும். முன்னைப் பிறப்புக்களிற் செய்த புண்ணிய விசேடங்களான் உலக வின்பங்கள் எல்லாம் நிலையில வென்ப துணர்ந்து விட்டுலக வின்பத்தினையே நாடித் துறவு பூண்டு அருளுடைமைச் சாதனஞ் செய்வா னுவான் கொலைத் தொழிலில் ஈடுபடானாயினும் இரு வகைக் கோறலுக் கேது வாகினு மாவன். ஒன்று ஊனுண்டு அதனானே கொலைக் கேதுவாதல். மற்றையது தன்னை நலிய வரும் பிறரை இறப்பாராக வென்று நினைக்க, அன்னார் பூதங்களா லாயினும் மற்றைய உயிர்களா லாயினுந் தாக்குண்டிறக்கத் தான் அக் கொலைக் கேது வாதல். இவை யிரண்டும் அருளாட்சிக் கேடு பயக்கு மாகலான் இவ்விரு வகைக் கொலைக்கு மேதுவாகா வகை கொல்லாமை மேற்கொண் டொழுகுதல் அருளாட்சியை விழைவானது கடனாகும். அன்றி ஊன்றின் றேனுங் கொலைச் சிந்தையொடு நின்றேனுந் தன் கொல்லாமை யென்னுஞ் சாதனத்தைக் கோறல் செய்தானாயின், அஃது அருளுடைமை யன்றென்றும், அதனானே அவனுக்கு அருளாட்சி கைவரா தென்றும் அறிவுறுத்துவாராய்க் கொல்லாமை கோறல் அருளாகா தென்றா ரென்க. ஆயினும் ஈண்டு எடுத்துக் கொண்டது ஊன்றின்பாரது வினை வாதலின், ஊன் றினலாகிய கொல்லாமை கோறல் அருளாகா தென்று கூறினா ரென்க. இவ் வேதுவானே பொருளல்லது அவ் வூன்றினல் என்று சாதிக்கப் புகுந்தவர் ஊன்றினலாகிய கொல்லாமை கோறல் இறைபணி

யாகாது என்னும் மேற்கோளையே சாதித்தா ராயிற்று. ஆக, ஏதுவும் மேற்கோளுந் தம்முள் இயைய வைத்து 'ஊன்றினலாகிய கொல்லாமை கோறல் இறைபணி யாகாது; அஃது அருளாகா தாகலான்; யாது அருளாகாது அது இறைபணியாகாது, கொலை போல்' என்னும் உடம்பாட் டனுமானத்தானே, பெத்தர்க்கேனும் முத்தர்க் கேனும் ஊனைப் பிறர் தர உண்டல் இறைபணியாகா தென்பது துணிந்து, அருளுடைமைச் சாதனத்தையே செய்யுமவர்க்கு அஃது அருளாட்சிக் கேடும் பயக்குமென்று கூறியவாருயிற்று. ஈண்டு முத்தர் என்றது சீவன் முத்தரை.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'அருள் யாதெனின் கொல்லாமை, அருளல்ல தியாதெனிற் கோறல், ஆகலான் அக் கோறலான் வந்த ஊனைத் தின்கை பாவம்' என்னும் உரையையும் 'உபசார வழக்காற் கொல்லாமை கோற லாகிய காரணங்களை அருள் அல்லதெனக் காரணங்களாக்கி யும், ஊன்றின்கை யாகிய காரணத்தைப் பாவமெனக் காரியமாக்கியுங் கூறினர். அருளல்லது கொடுமை. சிறப்புப் பற்றி அறமும் பொருளெனப் படுதலின், பாவம் பொருளல்ல தெனப்பட்டது' என்னும் உரை விளக்கத்தை யுந் தந்தனர்.

பிற வுயிரைத் துன்ப நிலையுட் புகுத்துதலுடைமை யான், கொடுமையாகிய காரணம் பற்றி வருங் கோறலைப் பாவ மென்பது ஒக்குமாயினும், அக் கோறலான் வந்த ஊன்றின்கை பாவ மென்பது பெறப் படாமையானும், பொருளல்லது என்பதற்குப் பாவ மென உரை கண்டமை வலிந்துரை யாகலானும், இனி அருள் யாதெனின் கொல்லாமை என்பது எடுத்துக் கொண்ட மேற் கோளுக்கு ஒரு பயப்பாடு மின்றி நின்று வற்றுதலானும், அழகியா ருரையைப் போலியுரை யென்க.

வேறுரை.

அருளல்லது யாதெனின் கொல் ஆமை கோறல்-கொடுமையென்று துணிந்து சொல்லப்படுவது யாதெனின் தாம் வளர்த்த பசுவையும் ஆட்டையுங் கொல்லல்; அவ்வூன்றினல் பொருளல்லது-ஆகையான் அக் கொல்லுதற் கேதுவாகிய ஊன்றினல் இறைபணியாகாது, அது பற்றி அருளுடைமைச் சாதனஞ் செய்வாராவார் உண்ணுமை வேண்டும் புலால். எ-று.

ஈண்டு கொல் அசைநிலை. எண்ணும்மைகள் விகாரத் தாற் றெருக்கன. ஊன்றின்கை தாம் வளர்த்த பசுவையும் ஆட்டையுங் கோறல் செய்தற் கேதுவாகி அருளாட்சிக் கேடு பயக்கு மன்றி இறைபணியாகாது என்றவாறு.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின்: பிறர் தரு மூனை யுண்டல் அருளுடைமைச் சாதனஞ் செய்வார்க்கு இறைபணியாகாது அருளாட்சிக் கேடு பயக்கு மாகலான், அன்னுர் ஊனுண்டலை யொழிவாராக. எ-து.

7. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

(இ-ள்) செயிரின் தலைப்பிரிந்த காட்சியார்-ஐய வுணர்வும் திரிவுணர்வு மாகிய குற்றங்களின் நீங்கிய அறிவுடையார், உயிரின் தலைப்பிரிந்த ஊன் உண்ணுர்-ஒரு விலங்கினின்றும் நீக்கப்பட்ட ஊனை யுண்ணுர், ஆகலான் அருளாட்சி விழைவோர் உண்ணுமை வேண்டும் புலால். எ-று.

செயிர் என்றது ஐயத்தையும் திரிவையும்: ஐந்தனுருபு இரண்டிடத்தும் நீக்கப் பொருளது. தலைப்பிரிதல் ஒரு சொல். செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார் என்புழிச் செய்த வென்னும் பெயரெச்சங் காட்சியார் என்னும் வினை முதற்

பொருட் பெயர் கொண்டு முடிந்து, குற்றங்களின் நீங்கிய வறிவுடையார் என்னும் பொருள் தந்து நின்றது. அன்றிச், செயிரினின்றும் பிரிந்தமையா னுள்ள காட்சியினை யுடையார் என்று பொருள் கொள்ளின் 'செயிரிற் றலைப் பிரிந்த காட்சி' என்பதன்கண்ணுள்ள சொற்கள் நீக்க மின்மை முதலிய இலக்கணங்களைப் பெற்றுத் தொக்கு ஒரு சொல்லாய் நின்று 'ஆர்' என்றும் விகுதி யேற்றுங் 'செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார்' என ஒரு பெயராயே நின்றன வென்க. இப் பொருளில் செய்த வென்னும் பெயரெச்சம் 'ஆடை யொலித்த கூலி' என்புழிப் போல இது பயன் என்னும் பொருட்கண் வந்த தாகும். 'உயிரிற் றலைப்பிரிந்த வூன்' என்புழித் தலைப்பிரித்த என்னும் பிற வினை எதுகை நோக்கித் தலைப்பிரிந்த வெனத் தன்வினை போலக் கூறப்பட்டது. ஈண்டு செய்த வென்னும் பெய ரெச்சம் உண்ட சோறு என்புழிப் போலச் செயப்படு பொருட் பெயர் கொண்டதென்க. ஊன் என்பதன் பின் இரண்டனுருபை விரிக்க.

'அருளாட்சி வேண்டி அருளுடைமைச் சாதனஞ் செய்வாராவார் பிறர் கொடுக்கும் ஊனை மருதுண்டல் இறைபணியாகா தென்பது ஒக்கும். யானோ விடுபேறுதவும் ஞானத்தை அடையத் துறவை மேற்கொண்டு அருளுடை மைச் சாதனஞ் செய்கின்றேன். என் சாதனஞ் சித்தி யடைதற்குத் துணை புரியும் உடலை யழியாது காத்தற் பொருட்டு உண்டி வேண்டும். அவ் வுண்டியானது விலங்கு தாவர வர்க்கங்களுடைய அங்கங்களே யாகும். இவற்றுள் ஒன்றை நீக்கி ஒன்றை யுண்டல் எல்லாப் பொருட்களையும் ஒக்கப் பார்க்கும் என் துறவுக்குப் பொருந்தா தாகையான் பிறர் கொடுக்கும் ஊனை மருதுண்கின்றேன். இதனல் எனக்கு அருளாட்சி வாரா தெனின், உலகில் அருளாட்சி விழைவார் செய்தி முழுவதும் ஆமையயிர்க் கம்பலங் தேடுவார் கூற்றி லடங்கிக் கொன்னே கழியு மன்றே'

என்று ஒருவன் கூறினுராயின், அவனைத் தெளித்தற் பொருட்டு இக் குறளைத் தந்தா ரென்க.

உயிரானது தன்னெதிரே தோன்றுவ தோருருபை அறியுமிடத்து முதற்கண் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களோடு இயையாது வித்தை யையே கருவியாகக் கொண்டு, மெய், வாய், கண், மூக்குச் செவி யென்னும் வாயில்களை அதிட்டித்து நின்று பொது வகையான் இஃதோர் பொருளெனப் பெயர், சாதி முதலியன வின்றி யறியும் இவ் வறிவை நிர் விகற்பக் காட்சி யென்பர். இக் காட்சியை யெய்தி நின்ற உயிர் மனத்தை யதிட்டிப்ப, அம் மனஞ் சித்தமாய் விருத்திப்பட, அச் சித்தம் இஃது யாதாகுமென அவ் வுருபின் குணங்களைத் தூக்கிச் சிந்திக்கக், கண்ட குணங்கள் குற்றிக்கும் மகனுக்கு முரிய பொது வியல்புக ளென்ப துணர்ந்து இவ் வுருபு குற்றியாகிலு மாகும், அன்றி மகனுகிலு மாகும் எனச் சங்கற்பித்துத் தன் காரணமாகிய மனத்திற்குக் கொடுக்க, அம் மனம் தோன்றுகின்ற உருபு குற்றியாமோ, மகனுமோ வென ஐய வுணர்வை யெய்தி நிற்கும். இவ் வைய வுணர்வைத் தலைப்பட்ட வுயிர் அகங்காரத்தை யதிட்டிப்ப, அவ் வகங்காரம் அவ் வுருபைக் குற்றியென்ருதல் மக னென்ருதல் நிச்சயித்தற் கேதுவாகிய அகந்தையை விளைத்து நிச்சயித்தற் கண் ஊக்கத்தை உண்டாக்கி நிற்கும், அதன் பின்னர் அவ் வுயிர் புத்தியை அதிட்டிப்ப, அப் புத்தி அவ் வுருபின்கண் தான் முன் கண்ட பொதுவியல்புகளோடு மகனது சிறப்பியல்புகளை யேனும், அன்றிக் குற்றியது சிறப்பியல்புகளை யேனுங் கண்டு இவ் வுருபு குற்றியன்று மகனென்ருதல், மகனல்லன் குற்றியென்ருதல் அறியும். இவ் வறிவு பெயர், சாதி முதலியன பற்றி யறியப்படுதலான் இதனைச் சவிகற்ப வுணர் வென்பர். உயிரானது இஃது இன்னதாகும் என்று துணிதற் கேது காணுது ஐய வுணர் வைத் தலைப்பட்டு அதன்கண் நிற்கினும் நிற்கும். ஏது

காணின், வாயில்களிலுள்ள குற்றத்தாலாயினும், புத்தியைப் பற்றி நின்ற மலச்சார்பானுகிய செயற்கையாலாயினும் ஒரு பொருளை அதனேடொப்புமை யுடைய வேறு பொருளாக மயங்கித் திரியக் காணினுங் காணும். அல்லதூஉம் அப் பொருளைப் பெயர், சாதி முதலியன பற்றி உள்ளவாறு கண்டு சவிகற்ப வுணர்வை யெய்தினு மெய்தும். ஐய வுணர்வை நீங்கின் ஒரு தலையாகத் திரி வுணர்வை யாயினுஞ் சவிகற்ப வுணர்வை யாயினுந் தலைப்படுதல் நிகழு மாகலான் 'செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார்' என்பதால் ஐய வுணர்வுந் திரி வுணர்வு மாகிய குற்றங்களின் நீங்கிய சவிகற்ப வுணர்வுடை யாரையே கருதினுராயிற்று.

இனி, நோய் காரணமாக உயிர் தானுகப் பிரிந்த ஊனைச் சிறப்புடை மக்களுள் ஒருவருந் தின்னு ரென்பதும் அவரதனைத் துறந்தார்க்கு ஆக்கிக் கொடா ரென்பதும், அறியக் கிடக்கின்றமையான், அதனைச் செயிரிற் றலைப் பிரிந்தார் உண்ணு ரென்பது மிகையாகு மாகலான் அன்னுர் உயிர் தலைப் பிரிந்த ஊன் உண்ணுர் என்று கூறுதலொழிந்து அவர் உயிரிற் பிரிக்கப்பட்ட ஊனை யுண்ணுர் என்பது படக் கூறினு ரென்க.

இனி, அருளுடைமைச் சாதனஞ் செய்வாராவார் தின்னற்பாலது இது, நீக்கற்பாலது இது வென நூல் முகத்தானும் பிறவாற்ருனும் அறிந்து வைத்தும், புத்தியைப் பற்றி நின்ற மலச் செய்தியானே ஊன் என்னு மொற்றுமை பற்றி நீக்கற் பாலதாய ஊனைத் தின்னற் பாலதாய்த் திரியக் கண்டு ஊன்றின்னுராயினும், அன்றி ஐய வுணர்வை யெய்தித் துணிவு பெருது இஃது தின்னற் பாலது இஃது ஒழிதற்பால தென ஒரு முடிபுக்கும் வாராது ஒருகாலைக் கொருகாற் பசிகடுக ஊன்றின்ருராயினும், அன்னுர் செயிரிற் றலைப்பிரிந்த காட்சியாரல்ல ரென்ற வாறு.

ஈண்டு, கோறலான் வந்த ஊனைச் செயிரிற் றலைப் பிரிந்த காட்சியார் உண்ணார் என்று கூறுதற்கண், சொற் பல்காமைப் பொருட்டு ஏதுவை மேற் கோளிலிருந்து உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்தியாற் பெறவைத்து 'ஐயந் திரிபுகளின் நீங்கிய அறிவுடையார் ஒரு விலங்கி னின்றும் நீக்கப்பட்ட ஊனைத் தின்னார், அன்னார் திரிவு களின் நீங்கிய வறிவுடை யாராதலின்; யாவர் ஒரு விலங்கி னின்றும் பிரிக்கப்பட்ட ஊனைத் தின்பார், எவர் ஐயந் திரிவுக ளாகிய குற்றங்களி னீங்கிய அறிவுடையா ரல்லர், புலையர் போல' என எதிர்மறை யனுமானத்தாற் றம் பொருளைச் சாதித்தா ராயிற்று. இக் குறளுக்குப் பரிமே லழகர், 'மயக்க மாகிய குற்றத்தி னீங்கிய அறிவினை யுடை யார் ஒருயிரின் நீங்கி வந்த ஊனை யுண்ணார்' என்னு முரையையும், 'தலைப் பிரி வென்பது ஒரு சொல். பிண மென ஊனின் மெய்ம்மை தாமே யுணர்தலின், உண்ணா ரென்றார்.' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

உயிரின் நீங்கிய மக்க ளுடலே பிண மென்ப தன்றி, மக்க ளல்லாத பிற வுயிர்களுடைய ஊனைப் பிண மென்று கூறுதல் ஏற்றிச் சொல்லும் வழக் காதலை யறியாது, பிண மென அவ் வுயிர்களுடைய ஊனைக் காணின் அது மயக்கம் பற்றி வருந் திரிவுக் காட்சியே யாகு மென்பதை யும் நோக்காது, 'பிண மென ஊனின் மெய்ம்மை தாமே யுணர்தலின்' என்று ஊனுண்ணாமைக்கு ஏது கூறுவார் ஏதுப் போலியையே தந்து ஆசிரியர் கருத்தைத் திரியக் கண்டா ரென்க.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின் :- அருளுடை மைச் சாதனஞ் செய்வார்க்குப் பிறர் கொடுக்கும் ஊனை மரு துண்டல் செயிரொடு பொருந்திய பார்வையானே யன்றி ஊண் அனைத்தையும் ஒக்கப் பார்க்குங் கருத்தான் நிகழா தாகையான், அன்னார் ஊனுண்டலை யொழிவாராக. எ-து.

8. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

(இ-ள்.) அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின்—தீயின் கண் நெய் முதலிய அவிகளைப் பெய்து ஆயிரம் வேள்விகள் வேட்டலினும்; ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று—ஒரு விலங்கி னுயிரை நீக்கி அதன் தசையை உண்ணாமை நன்று. ஆகலான் அருளுடைமைச் சாதனஞ் செய்வானுவான் உண்ணாமை வேண்டும் புலால். எ-று.

அவி சொரிந்து வேட்டல் என்புழிச், சொரிதலும் வேட்டலும் உடன் நிகழ்தலின், சொரிந் தென்னுஞ் செய் தெனெச்சம் நிகழ்காலப் பொருளது. ஆயிரம் எண்ணலளவையாகு பெயர். அஃது அன்ன தாதல், 'அளவு நிறையு மவற்றொடு கொள்வழி, யுளவென மொழிப வுணர்ந்திசி னோரே' என்னுஞ் சூத்திரத்தா னென்க. ஐந்த னுருபு நன்மைப் பண்பின் வேறுபாடு பற்றி உறழ் பொருவுப் பொருளில் நின்றது. செகுத்து என்னும் வினையெச்சம் உண்ணாமை யென்னும் எதிர்மறைத் தொழிற் பெயரி லுள்ள வினையடியொடு முடிதலை,' வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்' என்றற் றொடக்கத்துச் சூத்திரத்து 'நினையத் தோன்றிய' என்பதனாற் கொள்க.

மே லெழு வெண்பாக்களான் புலா லுண்டல் அரு ளுடைமைச் சாதனஞ் செய்வார்க்கு எவ்வகையானும் அருளாட்சிக் கேடு பயக்கு மென்று கூறிப் போந்தவர், புலா லுண்ணாமையான் நன்மை யாதாயினும் வருமோ என்றாற்கு, நன்மை யுள தாகு மென்று வற்புறுத்துதலே நோக்கமாக இக் குறளைத் தந்தா ரென்க.

வேள்விகளை விதித்த அற நூல்களே அவற்றிற்குப் பயன் காமிய மென்று உடன் கூறுதலின், ஆயிரம் வேள்வி செய்வா ராவார் அப் பயன் கருதியே தம் வேள்விகளை

வேட்பா ரென்பது பெறப்படும். இனிக், காமிய மெல்லாம் அழி வெய்துவன வாதல் பற்றி அவ் வாயிர வேள்விப் பய ஞகிய பசு புண்ணியங்களா னுளவாய இன்பம் ஆயிர முறை புசித் துண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ் வுண்டி களான் வரும் இன்பம் போன்று நிலையில வாகலானும், அந் நிலை யில வாகியவற்றைப் பயக்கும் பசு புண்ணியங்க ளானவை துறவை மேற்கொண்டு நின்று அருளுடைமைச் சாதனஞ் செய்வார்க்கு நிலை பே றுடைத்தாகிய ஞானத்தை நல்காதும், வீடுபே ருகிய பயனைத் தாராதும் நிற்பன வாகலானும், அன்றி அன்னுர் சுட்டி யறியக் கிடப்பதோர் உயிரைக் கோறலும் அதன் ஊனை உண்டலு மாகிய வினைகளைச் செய்வதில்லை யென்று தம் மனத்தான் எண்ணி யெண்ணித் தங் கோட்பாட்டைச் சாதித்து நின்ருராயின், அவர்க்கு அவ் வுயிரே வியஞ்சகமாக அருட் செறிவு உண்டாகி, அருளுடைமைச் சாதனத்தொடு கொல்லாமை, புலா லுண்ணுமை என்னும் இரண்டு துணைச் சாதனங் களுங் கைவர, இவற்ருனய புண்ணியங்கள் அவருடைய கருத்து வேறுபாட்டானே சிவ புண்ணியங்க ளாகி நிலைபே றுடைய ஞானத்தை யுதவி, வீடுபே ருகிய பயனை அளித்து நிற்கு மாகலானும், ஒன்றன் உயிர் செகுத் துண்ணுமை யான் வரும்நிலை யுளவாகிய சிவ புண்ணியப் பயன் ஆயிரம் வேள்விக ளானுய நிலையிலவாகிய பசு புண்ணியப் பயனினுங்கு நன் றென்று கூறிஞ ராயிற்று.

இனிச், சிவனை நோக்கி அவிப்பாகங் கொடுத்தலும் வழிபடுதலும் உள்ள வேள்விகளும் சிவ புண்ணிய மாகாவோ வெனின், மும்மலப் பிணிப்பொடு பொருந்தி யுள்ள பசுக்களாகிய ஏனைக் கடவுளரோ டொப்பச் சிவனை வைத்துச் செய்யப்படுதல் பற்றி, அவையும் சிவ புண்ணிய மாகாவாய்ப் பசு புண்ணிய மாகிப், புலா லுண்ணுமையி னுங்குப் பயனளவிற் குன்றுத லறிக. இக் குறளுக்குப் பரிமேலழகர், ' அவ் வேள்விகளான் வரும் பயனினும் இவ்

விரதத்தான் வரும் பயனே பெரி தென்பதாம்.' என்னு முரை விளக்கத்தையே தந்தாராயினும், அவர்க்கும் இதுவே கருத்தாகு மென்க.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின்: அருளுடைமைச் சாதனஞ் செய்வாராவார் கொல்லாமைச் சாதனத் தொடு புலான் மறுத்தற் சாதனத்தையுஞ் செய்தாராயின், அவர் ஆயிரம் வேள்விகளா னுய பயனினும் பெரும் பய னடைவர், ஆகலான் அன்னுர் கொல்லாமைச் சாதனத்தை முன்விட்டுப் புலா லுண்டலை யொழிவாராக. எ-து.

9. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(இ-ள்.) கொல்லான் புலாலை மறுத்தானை—ஒருயிரையுங் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணுதவனை; எல்லா உயிரும் கை கூப்பித் தொழும்-அவன் நினைப்பின், உயிரில் பொருள்களே யன்றி உயிர்ப் பொருள்கள் அனைத்துந் தாஞ் செய்வதைச் சுருக்கிக்கொண்டு அவன் ஏவல் வழி நிற்கும். ஆகலான் அருளுடைமைச் சாதனஞ் செய்வாராவார் உண்ணுமை வேண்டும் புலால். எ-று.

கொல்லான் புலாலை மறுத்தானை என்றும், எல்லாவுயிரும் என்றும், சிறப்புடை ஆண்பால், உயிர்ப்பொருள் என்னும் இவை பற்றிக் கூறினு ரெனினும், முறையே பெண்பாலும் உயிரில் பொருள்களும் கொள்ளப்படும். கொல்லான் என்பதைக் கொன்றுன் என்பதன் எதிர்மறையாய் நின்ற வினையெச்ச முற்றென்க. கை என்பது செய்வதென்னும் பொருளது. அஃது அப் பொருட் டாதலை 'கை யறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து, மெய் யறியாமை கொளல்' என்பதனுனு மறிக. கூப்பி என்பது கூம்பி என்பதன் பிறவினை. தொழுதல் என்பது ஏவல் வழி நிற்றல் என்னும் பொருளது. 'புலாலை மறுத்தான்' என்னும் மிக்கதன்கண் நிற்கும் இறந்த காலத்தான் வந்த வினையாலணையும் பெயரை நோக்கி 'எல்லா வுயிருந் தொழும்' என்று அம் மிக்க தாகிய வினைப் பய னுறுதல் அவ் வினை முதற்கு இயல் பென்பது குறித்த வினை முதற்

சொல் நிகழ் காலத்தான் வந்ததை 'யாவன் புலாலை மறுத்தான் அவனை உயிரனைத்துந் தொழும்' என்பது படச் சுட்டி யொருவர் பெயர் கொள்ளாமையான் 'மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி' என்றற் றொடக்கத்துச் சூத்திரத்தா னமைக்க. உம்மை முற்றும்மையொடு சிறப் பும்மையு மாம்.

'ஆயிரம் வேள்விகளினுங்குக் கொல்லாமையொடு கூடிய புலான் மறுத்தற் சாதனம் பயனளவில் மிக்க தென்பது ஒக்கும். அவ் வேள்விகளா னுய பயன் மறுமைக் கண்: ணன்றி இம்மைக்கண் செல்லாது. அதுபோலக் கொல்லாமையொடு கூடிய புலான் மறுத்தற் சாதனமும் மறுமைக்கண்ணேயே பயனுறும்' என்று ஒருவன் கூறின் 'அற்றன்று. முன்னை வெண்பா பயனளவில் ஏற்றத் தாழ்வுகளைக் குறித்த தன்றிக், காலவரையில் ஒற்றுமை யைக் காட்டிய தன்று. இம்மைக்கண்ணேயே கொல்லாத வனுய்ப் புலாலை மறுத்து நின்றானுக்கு விளையும் பயனை ஈண்டுத் தருகின்றேம்' என்பாராய் இக் குறளைத் தந்தா ராயிற்று.

ஒருவன் கொல்லாமை, புலான் மறுத்தல் என்னும் இரு சாதனங்களுள் ஒன்றைச் செய்து, மற்றையதைச் செய்யாது விடின் அவனுக்கு அருளுடைமைச் சாதனங் கைவரா தென்பது கருதிக், கொல்லாமைச் சாதனந் துணை செய்யப் புலான் மறுத்தற் சாதனத்தை அவன் செய்து நிற்பின், அவனுக்கு உயிர்கண்மேல் அருட் செறிவு உண்டாகி, அதனானே அருளுடைமைச் சாதனந் தலைப்பட, அத் தலைப்பட்ட துணையானே அதன் முதிர்ச்சியில் உயிரில் பொருள்களும் உயிர்ப் பொருள்களும் அவன் மாட்டு வயப்பட்டு நிற்கு மென்று கூறினா ரென்க.

இனி, உயிரில் பொருள்கள் தாம் செய்வதைச் சுருக்கிக் கொண்டு, அவ னேவல்வழி நிற்றல் என்றது, அவன் பெய்யாது நின்ற மழையைப் பெய் யென்று நினைக்க, அது தன் பெய்யாமையைச் சுருக்கிப் பெய்தலும், வீசி நிற்குந் காற்றை வீசுத லொழிக வென்று நினைக்க, அது தன் வீசுதலைச் சுருக்கி வீசாது நிற்றலும், நலிந்து நிற்கும் பிணியை நலிதல் விடுக வென்று நினைக்க, அது தன் நலி

தலைச் சுருக்கி நலியாது நிற்றலு மாகிய இவையும் இவை போன்ற செய்திகளு மாகும்.

இனிச், சேணிடத்துப் பொருள் செய்து நின்றுனொருவனை வருக வென்று நினைக்க, அந் நினைந்த மாத்திரையானே அவன் தன் பொருள் செய்தலைச் சுருக்கி வருதலும், பைங்கூழிடை மேய்ந்து நின்ற பசுவை நீங்குக வென்று நினைக்க, அந் நினைந்த துணையானே அது தன் மேய்தலைச் சுருக்கி யப்பாற் சேறலு மாகிய இவையும், இவைபோன்ற செய்திகளுமே உயிர்ப்பொருள்கண் மாட்டு நிகழு மென்க. அருளுடைமைச் சாதனஞ் செய்வான் மேற் கூறியவாறு பல சித்திகளையு மடைவா னுயினும், அச் சித்திகளைச் செய்து நிற்றலின் அருமை தோன்ற 'அவன் நினைப்பின்' என்று கூறப்பட்டது.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'ஓருயிரையுங் கொல்லாதவனுமாய்ப் புலாலையு முண்ணுதவனை எல்லா வுயிருங் கைகுவித்துத் தொழும்' என்னும் உரையையும், 'இவ் விரண் டறமும் ஒருங் குடையார்க் கல்லது ஒன்றே யுடையார்க்கு அதனுற் பய னில்லை யாகலான் கொல்லாமை யும் உடன் கூறினுர். இப் பேரரு ளுடையான் மறு மைக்கட் டேவரின் மிக்கானுமென அப் பயனது பெருமை கூறியவாறு' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தனர்.

கொல்லாமை, புலா லுண்ணுமை யென்னுஞ் சாதனங் கள் இரண்டும் தத்தம் பயன்களைத் தருமாயினும், 'இவ் விரண் டறமும் ஒருங் குடையார்க் கல்லது ஒன்றே யுடை யார்க்கு அதனுற் பய னில்லை' என்று கூறுதற்கண், பெரும் பய னில்லை யென்றே கருதினுராயினும், 'இப் பேரரு ளுடையான் மறுமைக்கட் டேவரின் மிக்கானு மென அப் பயனது பெருமை கூறியவாறு' என்று கூறுதற்கண், இம்மைக் கண்ணேயே அவனை எல்லா வுயிருங் கை கூப்பித் தொழு மென்பது படத் தொழு மென்று நிகழ் காலத்தாற் கூறிப் போந்த ஆசிரியர் கருத்தொடு முரணுத லானே, அழகியார் உரை வழீஇனு ரென்க.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின்: அருளுடை மைச் சாதனஞ் செய்வாராவார் தம் சாதனத்தை முடிபு போக்கக் கொல்லாமையொடு புலான் மறுத்தற் சாதனத்தையுஞ் செய்து நின்றாராயின், உயிரில் பொருள்

கள், உயிர்ப் பொருள்கள் ஆகிய அனைத்தும் அவர் மாட்டு வயப்பட்டு நிற்கும்; ஆகலான் அன்னார் கொல்லாமையொடு கூடிய புலான் மறுத்தற் சாதனஞ் செய்வாராக. எ-து.

10. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

(இ-ள்.) உயிர்நிலை ஊன் உண்ணாமை உள்ளது-மக்கள் உயிர் உடம்பின்கண் நிற்றல் ஊனுண்ண வேண்டா வகை உள்ளது; (ஊன்) உண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது-இம் மெய்ம்மையை யறிந்து ஊனுண்ணாது நின்றானொருவன் முற்செய்த பாவத்தானே நிரயம் புகினும், அவன் ஊனுண்ணும் வகை வெளியேறுதற்கு அந் நிரயம் அங்காத்தல் செய்யாது. ஆகலான் அருளுடைமைச் சாதனஞ் செய்வானுவான் உண்ணாமை வேண்டும் புலால். எ-று.

உண்ணாமை என்பது எதிர் காலத்துக்கண் காரியப் பொருட்டாய் நின்ற மை யீற்று வினையெச்சம். உள்ளது என்பது பண்பை யுணர்த்தி நிற்கும் குறிப்பு வினைமுற்று. உயிர்நிலை என்றது மக்கள் உயிர் நிலையை ஊன் என்பதை ஊன் உண்ணாமை என்றும், ஊன் உண்ண என்றும் இரு வழியுங் கூட்டிப் பொருளுரைக்க உண்ண வென்னுஞ் செயவெனெச்சங் காரியப் பொருட்டு.

புலான் மறுத்தற் சாதனத்தின் நிற்பானொருவன் 'என் சாதனத்தாற் பயனென்னை? முற் பிறப்புக்களினும் இப் பிறப்பினும் யான் செய்துள்ள பாவங் காரணமாக மறுமைக்கண் நரகம் புகினும் புகுவேனே' என்பானேல், அவனை அச் சாதனத்தின் நிலை நிறுத்துதல் வேண்டி, புலான் மறுத்தற் சாதனஞ் செய்து நிற்பானுக்கு ஒருகால் முன் செய்த பாவங்கள் காரணமாக நிரயம் புகுதல் நிகழினும், அந் நிரயத்தின் நீங்கியவுடன் புலாலுண்ணாமைச் சாதனந் தலைப்பட்ட மக்கட் பிறப்பே கிடைக்குமென்று கூறுவாராயும், அச் சாதனமே பற்றுக்கோடாக ஞான சாதனமும், அதனா லாய வீடுபேறும் உளவாகுமென்று அறிவுறுத்துவார் இக் குறளைத் தந்தாரென்க.

இனி, ஊனுண்டே ஓம்புதற்குரிய வாகிய புலி முதலியவற்றின் உடல் போலாது மக்கள் உடலமைப்புக் காய், கிழங்கு, இலை யென்னும் இவற்றானாய உணவுகளாற்

பேணுதற்குப் பொருந்திய தொன் றென் றுணர்ந்து ஒருவன் ஊனுண்ணுமை யென்னுஞ் சாதனத்தைத் தன் வாழ்நாள் முழுவதுஞ் சாதித்து நின்ருனுயின், முன்னைப் பிறவிகளின் கண்ணும் இம்மைப் பிறவியின் கண்ணும் அவன் செய்த பாவத்தானே ஒருகால் நிரயம் புகுந்தா னுயினும், அப் பாவத் தீர்வின்கண் அந் நிரயம் நீங்கி, மக்க ளுடம்பை யெடுத்து, ஊனுண்ணுமை யென்னுஞ் சாத னத்தைத் தலைப்பட்டு நிற்பா னென்று கூறியவா ருயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'ஒருசா ருயிர் உடம்பின் கண்ணே நிற்றல் ஊனுண்ணுமை யென்கின்ற அறத்தின் கண்ணது, ஆகலான் அந் நிலை குலைய ஒருவன் அதனை உண்ணுமாயின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது' என்னு முரையையும், 'உண்ணின் என்பது உண்ண வெனத் திரிந்து நின்றது. ஊனுண்டவன் அப் பாவத்தான் நெடுங் காலம் நிரயத்து ளழுந்து மென்பதாம்' என்னு முரை விளக்கத்தையுந் தந்தனர்.

ஒருசா ருயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊ னுண்ணு மையென்கின்ற அறத்தின்கண்ணது என்றது காண்டல், கருதல், உரை யென்னும் அளவைகளுக்கு ஒவ்வாதாக லானும், உண்ண வென்னுது உண்ணின் எனினும் தளையும் ஓசையுஞ் சிதையாமல் வருதல் பற்றி அழகியார் கருத் தையே நுதலப் புகின், உண்ணின் என்றே ஆசிரியர் கூறியிருப்ப ரொழிய, உண்ண எனக் கூருராகையானும், இனி உரையில்' அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ் தற்கு அங்காவாது' என்று கூறியவர், உரை விளக்கத்தில் ஊனுண்டவன் அப் பாவத்தான் நெடுங்காலம் நிரயத்து ளழுந்தும் என்று கூறினுரெனின், அக் கூற்றுக்கு உரை யளவை யாயினும் இல்லையாகலானும்' அழகியா ருரை யைப் படைத்துரை யென்க.

இப் பாட்டு என்னுதலிற்ருே வெனின்: அருளாட்சி வேண்டிப் புலா லுண்ணுமைச் சாதனத்தின் நிற்பா னுவான் முற்செய்த வினைகள் காரணமாக மறுமைக்கண் நரகம் புகினும், அது நீங்கி மீண்டும் அச்சாதனத்தொடு பட்ட மக்கட் பிறப்பையே யெடுத்து, அச் சாதனத்தின் முதிர்ந்து ஞான சாதனப் பேறடைவான்; ஆகையான் அன்னுன் ஊனுண்டலை யொழிக. எ-து.

(தொடரும்)

பொருந்துமா?

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர், தமிழாசிரியர், நன்னிலம்.

(2)

தமிழ் மொழியிற் றலைமை யாகிய நூல் திருக்குறள். இத் திருக்குறளுக்கு உரை கண்டார் பதின்மர். இதனை,

1 2 3 4
'தருமர் மணக்குடியர் தாமத்தர் நச்சர்
5 6 7
பருதி பரிமே லழகர் — திருமலையர்
8 9 10
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவநூற்
கெல்லையுரை செய்தா ரிவர்.'

என்ற இப் பாடல் தெரிவிக்கின்றது. இவ் வுரைகளுள் பரிமேலழகர் உரையே எங்கும் அச்சாகிப் படிக்கப்பட்டு வருகின்றது. மணக்குடியர் உரை அச்சாகிச் சிற்சில இடங்களில் உள்ளது. தருமர் உரை ஒன்று ஏட்டி லிருப்பதாக நவில்வர். பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது என்பதனைச் சபாபதி நாவலர்,

'இதற்கு உரை பலவுளவேனும், பரிமேலழகியார் இயற்றிய வுரையே அவற்றினுள் எல்லாம் சிறந்து திருக்குறண் மெய்ப் பொருள் தெரிப்பதாம். பரிமேலழகியார் திருக்குற ளுரை அக் குறள் போலச் சொற் சுருங்கிப் பொருள் விளங்கி, உள்ளுந் தோறும் உள்ளொளி பெருக்குவதாம். பரிமேலழகியார் வட மொழிக் கடலும் தென் மொழிக் கடலும் நிலைகண் டுணர்ந்து மதி நுட்பம் வாய்ப்பப் பொருந்தி யுலகங் கைக்கொண்டு போற்றத் திருக்குறளுக்கு மெய் யுரை கண்டார். 'ஆயுந் தோறும் இன்பந் தருங் கலை' என்னும் உறுதிக் கட்டுரைக்குப் பரிமேலழகியார் இயற்றிய திருக்குற ளுரை நிதரிசனமாம். தமிழாசிரியர் உரைகளுட் பரிமேலழகியார் உரைக் கொப்பாவன முன்னோர் உரைகளுள் நக்கீரனு ருரையும், பின்னோர் உரை களுட் சிவஞான யோகிகள் உரைகளுமாம். ஆசிரியர் சிவஞான யோகிகள் யாண்டும் பரிமேலழகர் உரைக் கருத்துத் தம முரை களுட் போற்றி யாளு முகத்தான் அவ் வுரை மேன்மை அறி வுறுத்திட்டார்.' எனத் திராவிடப் பிரகாசிகையில் எழுதுவ தால் இனிது விளங்கும்.

இனி, இவ் வரிய வுரையின்கண்ணே சில இடங்களில் வேறு பொருள் கூறின் அமையும் எனத் தோற்றுகின்றது. இவ்வாறு பொருள் கொள்ளல் பரிமேலழகர் உரைக்கு மாறுபா டல்லவா வெனின், 'முக் குண வசத்தான் முறை மறந் துரைப்பர்' என இலக்கணக்கொத்து நூலாசிரியர் நுவல்வதற்கு எடுத்துக் காட்டு இன்மையாய் முடியு மன்றோ!

இனி, அழுக்காறுமை என்ற அதிகாரத்தில் 6-ஆவது மணியாகிய,

‘கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉ
உண்பதூஉ மின்றிக் கெடும்’

என்ற இக் குறளில், ‘அழுக்கறுப்பான்’ என்ற சொற்களை ஒரு சொல்லாகக் கொண்டு, அழுக்காறறைச் செய்வான் எனப் பொருள் வரைந்துள்ளார், பரிமேலழகர். வள்ளுவர் மற்றைய இடங்களில் சொற்களை எடுத் தாண்டிருப்பதாலும், பரிமேலழகரே மற்றைய இடங்களிற் பொருள் கொண்ட விதத்தாலும், ஏனை உரை யாசிரியர்கள் உரையாலும், ஒரு சொல்லாகக் கொள்ளாது இரு சொற்களே என்பதும், பொருள் வேறு என்பதும் எடுத்துக்காட்டுவாம்.

1. வள்ளுவர் எடுத்தாண்டுள்ள இடங்கள்.

(க) ‘அவாவினை யாற்ற அறுப்பின்’
(உ) ‘உள்ளற்க..............ஆற்ற அறுப்பார்’
(ங) ‘அமரகத்து ஆற்று அறுக்கும்’
(ச) ‘அறனாக்கம்... ... ...அழுக்கறுப்பான்’
(ரு) ‘யானென தென்னுஞ் செருக்கு அறுப்பான்’
(சு) ‘கொடுப்பதழுக்கு அறுப்பான்’

2. ஏனை உரையாசிரியரின் பொருள்.

பத்துப்பாட்டு உரையாசிரியர், மலைபடுகடாஅம், 118-ஆவது வரி: அறையுற்று—வெட்டுத லுற்று எனவும், அறுமார்—நீக்க வேண்டி, எனப் புறநானூறு, 172-ஆவது பக்கத்திலும், அறுப்பன—போக்குவன, எனக் கலித்தொகை 641-ஆவது பக்கத்திலும் உரையாக உரைத்துள்ளார்.

3. பரிமேலழகர் மற்றோரிடத்திற் கொண்டுள்ள பொருள்.

‘செருக்கு + அறுப்பான்—மயக்கத்தைக் கெடுப்பான்.’ எனக் கொண்டுள்ளார். இப் பொருளையே மற்றைய ஐந்து இடங்களிலுங் கொண்டு உரைக்கலாம் என்பதே எனது கருத்தாகும். அவை பின் வருமாறு:

(க) ஆற்று[1] அறுப்பின்[2]—முழுவதும் கெடுப்பின்
(உ) ஆற்று[1] அறுப்பார்[2]—நல்ல வழியினைக் கெடுப்பார்.
(ங) ஆற்று[1] அறுக்கும்[2]—நல்ல செல்லத் தக்க வழியினைக் கெடுக்கும்.
(ச) அழுக்கு[1] அறுப்பான்[2]-பொறுமையால்[1] கெடுப்பான்[2]
(ரு) கொடுப்பது அழுக்கு[1] அறுப்பான்[2]—பிறர் கொடுப்பதைப் பொறுமையாற்[1] கெடுப்பவன்[2]

பொருந்துமா? சிந்திக்க.

கலைக் களஞ்சியம்

(தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு—மாதிரிப்படி)

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, B. A., L. T., திருவாரூர்.

மதிப்புரை.

(முற்றொடர்ச்சி துணர் 24, மலர் 10, பக்கம் 330.)

சொற்கள் — இந் நூலில் வரும் புதுச் சொற்கள் ஆங்கிலம் வல்லோருக்கு விளங்கினாற் போதும் எனும் எண்ணத்துடன் வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதுவரை அவர்களே குறிக்கொள்ளத் தக்கவராய் விளங்கினரென்பது உண்மையே. ஆனால் அவர்கள் ஆங்கிலக் களஞ்சியங்களிலிருந்து இன்னும் மிகுதியாகத் தெரிந்து கொளக் கூடிய வாய்ப்புடையோரென்பதை மறக்கலாகாது. காந்தியம் முன்னணிக்கு வந்த பிறகு ஆங்கிலம் பயிலாத திரு. அபுல் கலாம் ஆசாது, திரு. ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலியோரே ஆங்கிலம் வல்லுநரைக் கீழ்ப்படுத்தி மேலோங்கி வருவது புறக்கணிக்கக் கூடாத அறிகுறியாகும். இப்பொழுது நூற்றில் 3 விழுக்காடுள்ள ஆங்கில மறிந்தோர் இனி இந்நூல் முழுவதும் வெளி வருவதற்குள் இன்னுங் குறைவது திண்ணமாகும். ஆதலின் புதுத் தமிழ்ச் சொற்களை அடுத்து அவற்றிற் கேற்ற ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் கவிப்புகளுள் பொறிப்பது பெரும் பகுதியினருக்குப் பயன்படுமா எனக் கூர்ந்து நோக்க வேண்டியவர்கள் ஆவோம். தமிழ் நாட்டினர்தாம் இந்தி, ஆங்கிலம் முதலிய வேற்று மொழிகளைத் தமிழ் வழிக் கற்பிக்க வேண்டுமென வலியுறுத்திக் கற்பிக்கவும் முயன்று வருவது பாராட்டத் தக்கதாகும். அதற்கேற்பக் கவிப்புகளுள் Pollination, Stamen, Anther, Style (1)* என ஆங்கிலத்தில் எழுதாது 'போலினே

* இக் கட்டுரையில் கவிப்புகளி லுள்ள எண்கள் கலைக்களஞ்சியப் பக்கங்களைக் குறிப்பன ஆகும்; அப் பக்கங்களில் அச் சொற்களைக் காணலாம்.

ஷன், ஸ்டேமென், ஆன்தர், ஸ்டைல் எனத் தமிழிலேயே எழுதுதல் யாவருக்கும் பெரும பயனளிக்கலா மெனத் தோன்றுகிறது. இதற்கேற்பவே, 'ரெக்சைன' (முகவுரை), கிராண்டு அணைக்கட்டு (4) பாக்கிங், பாரம், மணியாடர், செக்கு, போஸ்டு, ரயில்வே ஸ்டேஷன் முதலிய சொற்கள் இக் நூலின் விளம்பரத்தாளில் தமிழில் மட்டும் போடப் பட்டிருப்பதால் குறைவொன்று மில்லை.

2. ஆங்கிலச் சொற்களின் உச்சரிப்பைப் பொறுத்த வரையில் கூடிய மட்டும் தமிழ்ப் படுத்திப் போடல் தீதல்ல. Fossils (19) ஐ 'வாசில்கள்' எனவும், Cam (7) ஐக் 'கேம்' எனவும், Alkaloid (14) ஐ ஆல்கலாயிடு எனவும், Post ஐ போஸ்டு எனவும் போடும்பொழுது, Rontgen (12) ஐ இராஞ்சன் எனவும், Serturner (14) ஐ செட்டனர் எனவும் போடுவதால் அவர்களது சினத்திற்கு அஞ்ச வேண்டியதில்லை எனத் தோன்றுகிறது. தமிழிலுள்ளது போல் ஆங்கிலத்தில் ஒலி வழி எழுத்துக் கூட்டு (Phonetic Spelling) இல்லை என்பதையும், தமிழர்கள் அதனை மறந்து எல்லா எழுத்துக்களையும் விடாது ஒலித்து ஆங்கிலேயர்களாலும், யாழ்ப்பாணிகளாலும் நகைக்கப்படுகின்றனர் என்பதையும், ஆங்கிலத்தில் 'ntg' 'ஞ்ச' (ண்ட்ஜ அல்ல) என்பதையும் சொற்களின் இடையி லுள்ள r கள் மிகப் பெரும் பகுதி ஆங்கிலரால் விழுங்கப்படு கின்றன என்பதையும் நினைவுப்படுத்திக் கொளல் மிகவும் நன்றாகும்.

3. இவ்வாறே வடமொழிச் சொற்களை எழுதுவதிலும், வருக்கம் (3), சூரியன் (10), இச்சுவாகு (11), நட்சத்திரம் (20), என எழுதியிருப்பது தமிழ் இலக்கண முறையைப் பின் பற்றிய நல்வழி யாகும். ஆனல், ஜீவனே (1), ராமகிருஷ்ண* (1), ஜாதி (6), ஹலிக்கர் (6), ஜல்லிக் கட்டு (6), நாகார்

* இராமகிருஷ்ண, இராண வயித்தியர் என்பதே தமிழ் முறை யாகும்.

ஜூண (11), கல்யாண மஹால் (17), சப்த ரிஷி (20), பிரஜா பதி (20) என எழுதி யிருப்பது, 'என்ன செய்யினும் முடிவில் வேதாளம் கட்டை அவிழ்த்துக் கொண்டு முருக்கை மரத்தின் மீது ஏறிக் கொண்டே' வந்த கதையோடு ஒக்கும். ஸ, ஷ, ஜ, ஹ, க்ஷ எனும் எழுத்துக்கள் சமக்கிருதத்தைக் கிரந்த எழுத்துக்களில் (தமிழர் ஏற்படுத்திக் கொண்டவை) எழுதுவதற்கு ஏற்பட்டனவே அன்றித், தமிழர்கள் கலைக் களஞ்சியத்தில் கூசாது பயன்படுத்த வந்தன அல்ல. இதனைப் பெருந் தமிழ்ப் புலவர்களும் மறந்து வருவதால், இதன் இழுக்குடைமை நன்கு புலப்படுவதில்லை.

4. 'காற்று இறைக்கும் குழாய்' (12) உண்மையில் இறைத்த குழாயாகும்; 'காற்று இறை குழாய்' முக் காலத்திற்கும் பொதுவாவதுடன் சுருங்கிய மொழி பெயர்ப் பாகும். அவ்வாறே, ஒளி ஊடுருவிச் செல்லும் பொருள், (Transparent body 5) ஐ 'ஒளி ஊடுருவு பொருள்' எனல் சுருங்கிய தாகும். மொழிபெயர்ப்பில் ஓரெழுத்துக் குறையினும் பெரும் பயனுடைத்து என்பதை மறக்கலாகாது. 'புள்ளி எண்ணிக்கை அட்டவணை' (18) என்பது 'கேட்டு வாசற்படி' போன்ற பயனற்ற இரட்டைக்கிளவி யாகும். புள்ளியில் எண்ணிக்கை அடங்கி யிருப்பதாலும், அஃது அட்டவணையே அன்றாதலாலும், 'புள்ளிப் பட்டியல்' என்பது தான் கருத்திற் கேற்ற சொல்லாகும். இவ் வகைப் பிழைக ளின்றி சொல்லும் பொருளும் நுனித் தறிந்து நோக்க வல்லார்களைக் கொண்டு திருத்தல் இத்தகைய நூலுக்கு மிகவும் இன்றியமையாத தாகும்.

5. மேல் அணைக்கட்டு (4), கீழ் அணைக்கட்டுகளுக்கு இடையே 'கிராண்ட்' அணைக்கட்டு வருவதும், ஒரே பக்கத்தில் (12) மேலே 'எக்ஸ்ரே' எனவும் கீழே 'எக்ஸ்

---

* வட சொற்களைத் தமிழ் ஒலிப்படுத்து முறையை நன்னூல் முதலிய இலக்கணங்களுட் காண்க.

கதிர்கள்' எனவும் எழுதியிருப்பதும், ஒட்டுண்ணி (Parasite 3), சாறுண்ணி (Saprophyte), தொடரி (Follower 7), சாரி (Guide), நேர்மின்வாய் (Anode 12), எதிர்மின்வாய் (Cathode), புள்ளி நூல் (Statistics 18), ஊழியழிவுக்கொள்கை (Doctrine of Cataclysms 19) எனத் தூய தமிழில் அழகாக மொழி பெயர்த்து விட்டு, 'மானேஜிங் கமிட்டி' (முகவுரை), பாக்டீரியா (3), மைக்ராஸ்கோப் (3), ராமன் இபெக்டு (5), ஸ்பெக்ட்ரோ கிராப், கேம் (7), எக்ஸ்ரே (12), ஆல்கலாயிடு (14), டிக்ரி (20) முதலிய சொற்களை மொழிபெயர்க்காது போடுவது மாறுபாடான முறைகளாம். கூடிய வரை மாறுப் பாடே (Consistency) யாவராலும் விரும்பப்படுவது என்பதும், மாறுபாட்டரல் இகழ்வும் புறக்கணிப்புந் தான் பெறக்கூடும் என்பதும் உளங் கொளற்பாலதாகும். இச் சொற்களை, முறையே, நிறைவேற்றுக் கழகம், நுண்ணி, பெருக்கிக் காட்டி, இராமன் விளைவு ஒளி பகுத்து வரையி, அசையி, காக்கதிர், காரதை, பாகை எனவோ, இன்னுஞ் சிறப்பான சொற்களாலோ மொழிபெயர்த்தல் விரும்பின் இயலாததல்ல. இச் சொற்களையே தமிழர்கள் எளிதில் புரிந்து கொண்டு பயன்படுத்த முன் வருவார்க ளென்பதில் ஐயம் வேண்டியதில்லை. தன்னரசு (சுய ராச்சியம்) பெற்றதும், ஓரேயிரவில் ஒருவரு மறியா வண்ணம் 'ஜங்ஷன்' களை யெல்லாம் சந்திப்பாக மாற்றித் தன்மானங் காத்த அரசிய லாருக்கு இச் சிறு நூலின் சிகப்பு விளம்பரத் தாளில் மலிந்து கிடக்கிற பைண்டு, பாக்கிங், பாரம், மணியார்டர், செக்கு, போஸ்டு, வி. பி. பி., ரயில்வே ஸ்டேஷன் முதலியவற்றை, முறையே, கட்டடம், கட்டுக்கூலி, பட்டிகை, பண அஞ்சல், உண்டியல், அஞ்சல், வி. பெ. அ (விலை பெறு அஞ்சல்), புகை வண்டிப்பேட்டை எனவோ, இதனினும் ஏற்புடைச் சொற்களாலோ குறித்தல் சூறை வுண்டாக்கு மெனத் தோன்ற வில்லை.

அறிவியற் சொற்கள் (Scientific Terms) உலக மக்கள் யாவருக்கும் பொது வெனவும், அவை எல்லா மொழிகளிலும்

பொதுவா யிருக்கவேண்டு மெனவும், அதற்குத் தக்க வழி காட்டிகளாகத் தமிழர் யாவரும் அச் சொற்களை விழுங்கியே தீரவேண்டு மெனவும் பல ஆட்சித் தலைவர்கள் பறைசாற்றி வருகின்றனர். அதற் கேற்பப் பல சொற்களை இத் தகைய நூல்களிலும் பாட புத்தகங்களிலும் பயன்படுத்தும்படி கட்டாயப் படுத்தியும் வருகின்றனர். இவர்கள் வெளியிட்டுள்ள சொற்களில் பெரும் பகுதி மேலே காட்டப்பட்ட பல மாறுபாடு, குறைபாடுடையன என்பது சிறிது பார்ப்போருக்கும் படக் கூடிய தாகும். இவை இரண்டுங் கெட்ட முறையில், இரு வேறு வகைக் கொள்கையினரின் போராட்டங்களின் பயன்பாடாக இடைவெட்டு என இகழத் தகும் வகையில் அமைந்துள்ளன என்பதை இச் சிறு நூலில் வந்துள்ள சொற்களைப் பற்றிய இச் சிறு ஆராய்ச்சியே விளக்க வல்ல தாகும். இத்தகைய நிலையை இன்னும் 5 ஆண்டுகளுக்கு* நீட்டித்து இவ் வாறான நூல்கள் மாறுபாடான நிலையில் வெளி வருவதற்கு அடிகோலாமல், இன்றே ஓர் சொல்லாராய்ச்சிக் குழு அமைத்துத் திருத்த முற்படல் நன்மை தரும் எனத் தோன்றுகிறது. அது எவ்வாறாயினும் இந் நூலில் வரும் சொற்களைப் பண்படுத்துவதற்காகவாவது தக்கதொரு குழுவை அமைத்தல் இன்றியமையாததாகும். அக் குழுவோ, அஃது மின்றெனின் இந் நூலாசிரியர்களோ குறிக் கொளத் தக்கன சிலவுள. அவையாவன :—

(அ) எல்லாச் சொற்களையும் ‡ தமிழ்ப் படுத்திக் கவிப்புகளுள் ஆங்கிலச் சொற்களைத் தமிழெழுத்துக்களில் தமிழ் இலக்கண முறைப்படி எழுதுதல் பயனுடைய தாகும். உரோசாப் பூவை வேறு பெயரிட்டழைப்பின் மணங் குன்றி விடுமென அஞ்சுதல் அறிவுடைமை யாகாது.

---

* இன்னும் 5 ஆண்டு வரை இச் சொற்களைப் பயன் படுத்தியே தீரவேண்டு மென்பது அரசாங்கக் கட்டளை யாகும்.

‡ அறிவியற் சொற்கள் அறிவியலாளர் (Scientists) யாவருக்கும் பொதுவாயிருக்க வேண்டு மென்பது அறிவியலறிவு பொது மக்களிடையே பரவி வரும் இக் காலத்திற்கு ஏற்றதாகாது. முன் காட்டிய நேர்மின் வாய் (Anode) முதலிய சொற்கள் தூய தமிழ்ப் படுத்தப் பட்டிருப்பதால் அறிவியற் சொற்களல்ல எனக் கூற வியலாது. இவற்றைத் தமிழ்ப் படுத்தியதால் ஒரு கேடும் உண்டாகவில்லை யாதலின் ஏனைய சொற்களையும் தமிழ்ப் படுத்தி நன்மையே பெறக் கூடும். அறிவியற் சொற்கள் பொது மக்களிடையே பரவ வேண்டுமென ஆர்வ

(ஆ) இயன்ற வரை காரணப் பெயர்களாக விளங்கு கின்ற தமிழ் அடிகளையே பயன் படுத்திப் புனைதல் வேண்டும். அவ்வாறு வழக்கிற்கு வந்தவைகளையும் விட்டு விடக் கூடாது. பெரு வழக்கிற்கு வந்துள்ள 'பல்கலைக் கழகம்' கைவிடப்பட்டு 'சர்வ கலாசாலை' (முகவுரை) கலைக் களஞ்சியத்தில் பயன் படுத்தப்படுகிறது. ஒரு சர்வகலாசாலையும் அதன் பெயரி லுள்ளபடி எல்லாக் கலைகளையும் கற்பிப்பதில்லை; அது ஓர் சாலையுமாகாது. காடி, காரம் என வழக்கிலுள்ள சொற்களை விடுத்து 'அமிலம்' (14) ஆல்கலாயிடு எனும் பிற மொழிச் சொற்கள் ஒரு முறையு மின்றி கையாளப் படுகிறது. 'உப்பு மூலங்களை' (Bases 14) விட 'அடியங்கள்' சுருங்கிய நேர் மொழி பெயர்ப்பாவதுடன் ஆங்கிலத்திலுள்ளபடி கடற்படை அடியங்கள் (Naval base) முதலிய வேற்றிடங்களிலும் பயன் படக் கூடிய பொதுமை வாய்ந்ததாகும். தாது (mineral 14) எனுஞ் சொல் உடலியலில் Pulse க்கும் மொழி பெயர்ப்பாவ தால் 'பொன்னம்' எனும் தமிழ் வழக்கை அடிப்படையாகக் கொண்டு ஒரே பொருளைக் குறிக்க வல்ல தமிழ்ச் சொல்லிற்கு எவ் வகையிலும் ஈடாகாது. செரிக்க (15) என்பது சமிக்க என இருத்தல் வேண்டும். வைத்தியக் கலைஞர் (15), ரசாயனம (14), பொக்கிஷம் (விளம்பரம்) அச்சாபீசு (8), செடி வருக்கம் (3), முதலிய சொற்களை முறையே மருத்துவர், வேதிநூல், கருவூலம், அச்சகம், செடிவகை எனப் போடல் தமிழ் மணங் கமழச் செய்யு மென்பது திண்ணம். *

முடையோர் அப்பொது மக்கள் நெஞ்சுட் புகுந்து பார்த்து அவர்க்கு ஏற்ற சொல் புனைய வேண்டுமேயன்றித் தாமும் தம் இனத்தவராய ஆரியம் ஆங்கில மறிந்தோருக்கான சொற்களைப் புகுத்த முன் வருவோர் தந்நலத்தினின்றும் தப்பியவராகார். ஆராய்ச்சியாளர், வேற்று நாட்டுக்குச் செல்வோர், மேற் கல்வி பயில்வோருக்காகச் சொற்களை ஆக்கல் சிறுபான்மையோரை மட்டும் உட்கொண்டு பெரும்பான்மை யோரைப் புறக்கணித்ததே யாகும். இச் சிறுபான்மையோரும் அறிவு, ஆற்றல், வாய்ப்பு மிக்கோராதலாலும், அவர் பிறமொழி பயின்றே தீருவாராதலாலும் அவர்க்காகப் பெரும்பான்மையோரை வருந்தச் செயல் பயனற்ற புன் செயலேயாகும்.

* பட்டாபி சீத்தாராமையா எனும் ஆந்திரத் தலைவர் சென்னையில் ஆந்திரர் அளித்த வரவேற்பிற்கு நன்றி கூறும் பொழுது தெலுங்கில் ஆரியச் சொற்களை சேர்த்துக் கொண்டே போதல் நன்றன்றென அண்மையில் கூறினர். ஆரிய மயமாகி விட்ட ஓர் மொழியாளருக்கே இத்தகைய அறிவுறுத்தல் தேவை யெனின் ஊழி ஊழியாகத் தம் மொழி அடிப்படையைக் காத்து வந்துள்ள தமிழருக்கு எவ்வளவு சிறப்பாக

(III) பொருள்:— இம் மாதிரிப் படியானது முழு நூலின் சிறு பகுதியாதலின் இத் தலைப்பின் கீழ்மிகுதியாகக் கூறுவதற் கில்லை. எனினும் பயிர் நூல் (பாட்டனி), இலக்கியம், விலங்கு நூல் (சூவாலசி) முதலியன திரும்பத் திரும்ப வருகின்றன. ஒரு வரிசையுமின்றி செய்திப் பரப்பை விளக்க வந்த பார்வைப்படி (ஸ்பெசிமென் காப்பி) இதுவாகலின் உலக வரலாறு, கணிதம், ஆட்சி முறைப் பகுதிகள் (அஞ்சல், படை, சட்டம் முதலியன), உலக இலக்கியங்கள், பெருநகர்கள், பெரும் போரசர்கள் முதலியவற்றுள் ஒவ்வொன்று இதில் இடம் பெற்றிருக்கலாம்.

எடுத்துக் கொண்ட தலைப்பின் கீழும் சிலவே '× × × ×' என்ற குறிகளுடன் பொறுக்குப் பகுதிகள் கொடுக்கப் பெற்றுள்ளன. இப் பொறுக்குப் பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகள் எதைக் குறிப்பிடக் கூடும் எனக் கற்பித்துக் கொள்ள இயலாது. ஆனால், முழுமையுமுள்ள தலைப்புகளின் கீழ் விடுபட்டுள்ளவை சிலவாவது உள. சிலப்பதிகாரம் 'நெஞ்சை அள்ளுவது' எப்படி என விளக்கப்பட்டிருப்பது போதாது. அதன் மிகச் சிறந்த அடியார்க்கு நல்லார் உரையே சுவாமி விபுலானந்தருக்குப் பேருதவி புரிந்திருந்தும் அதன் பெயர் கூட விளம்பப் படவில்லை. சுவாமி விபுலானந்தர் காலம் (பிறந்த, இறுதி ஆண்டு) குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும். ஏனைய பெரியார் பெயர் வரும் பொழுதெல்லாம் அவ்வாறே குறித்தலும் சிறப்பாகும். இராமன் விளைவு நோபல் பரிசு பெறச் செய்த குறிப்பில்லை. மகாகவி தண்டியின் அவந்தி சுந்தரிக்காகக் கடற்கரைக் கோவிலின் படம் இன்றியமையாததாகத் தோன்றவில்லை. 'கால் நடைகளுக்கு வரும் க்ஷய

இதே அறிவுறுத்தல் இதன் தலைவர்களால் செய்யப்பட வேண்டுமென்பது தெளிவாகிறது. இந் நூல் வெளியீட்டாளர்களால் பெரிதும் போற்றப்பட்டுள்ள சுவாமி விபுலானந்தர் இது பற்றிப் பன்னாள் உழைத்து (வேதி நூல்—கெமிஸ்ட்ரி) க்கு வேண்டிய சொற்களை ஆங்கிலத்திலிருப்பதை விட ஒழுங்கான, வியத்தகு முறையில் அமைத்துத் தந்த தன்றி சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டுள்ள 'கலைச் சொற்கள்' கூடிய வரை தனித் தமிழாயிருப்பதற்கு ஆதரவளித்துளர். அதே வெளியீட்டிலுள்ள பூதநூல் (பிசிக்ஸ்) சொற்களை இப்பொழுது நம் மாபெரு நாட்டின் பேராட்சியாளராக (கவர்னர் செனரல்) விளங்குகிற சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் திருத்தியதுடன் 'தமிழில் முடியுமா' எனும் அழகிய சிறு நூலை அவரது பல வேறு வேலைகளுக் கிடையே எழுதியுளர். இவற்றை எல்லாம் நாம் குறிக் கொள்ள வேண்டியவர்களாவோம்.

ரோக'த்தின் காரணம், தீர்வுகளைப்பற்றிய குறிப்புகள் தேவை. மார்பீன (14) முதலியவற்றைக் கண்டு பிடித்தவர் பெயர், காலம் போட்டிருக்கும்பொழுது காம், நைலான் முதலியன கண்டு பிடித்தவர் பெயர், காலம் தெரிவிக்கவேண்டுமென்பது எதிர்பார்க்கக்கூடியதே. அணைக்கட்டுகளுள் அரித்துவாரம் தவளேச்சுரம், எனும் வேற்று நாட்டினுள்ளனவே முதலிற் கூறப்பட்டுப் பின் தமிழ் நாட்டிலுள்ளவற்றிற்கு வருவது நன் முறையாகாது. தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றிற் குச் செல்வதே கற்பிக்கும் முறையாகும். புள்ளி எண்ணிக் கைகளிற் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் பெட்டகோனிய நாட்டுக்கு ஏற்றதாகத் தோன்றுகிறது; நம் நாட்டில் 70'' முதல் 85'' வரை உயரமான மக்கள் 19 நூற்று விழுக்காடு காண முடியாது. ஒன்று இவ் அளவு எடுக்கப்பட்ட நாட்டின் பெயரைக் குறித்தல் வேண்டும்; அல்லது தமிழ் நாட்டில் சில நூறு பேர்களை அளந்து பார்த்து எழுதல் வேண்டும். பொது வாக நோக்குமிடத்து இத்தகைய அளவுள்ள ஆங்கில நூலில் எத்துணை ஆழம் காணப்படுமோ அத்துணை இல்லாதது போல் தோன்றுகிறது. இந்நூலின் நடையும் சில இடங்களில் நன்கு இருப்பினும் மிகப் பெரும் பகுதி எதிர் பார்க்கக்கூடிய சுவையுடையதாயில்லை. பல செய்திகளைத் தொகுத் துரைக்கும் பொழுது அழகான நடையைக் கையாளுவது அரிதெனினும் படிப்போருக்கு ஆறுதல் அளிக்கும் நிமித்தமாவது கவர்ச்சி மிகும்படி எழுதுதல் இன்றியமையாததாகும்.

இம் மதிப்புரையில் கலைக் களஞ்சியம் மாதிரிப் படியி லுள்ள குணமும் நாடிக் குற்றமும் நாடி உரைக்கப்பட்டுளது. அவற்றுள் குற்றமே மிகையாகத் தோன்றக்கூடும். ஏனெனில் அவை தாம் திருத்திக்கொள்வதற்கு ஏதுவாகும்படி விரித் துரைக்கப்பட்டிருக்கின்றன. ஏனினும் குணமே மிக்கு இருக் கிறதென்பதை ஆழ்ந்து நோக்குவோர் அறியக்கூடும். இன் னும் பல குற்ற மிருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது இந் நூலை ஆதரிக்கவேண்டியது யாவருடைய கடமையுமாகும். இதனை வெளிவரற்கேற்ற உதவி புரிவது செல்வர்களது பொறுப்பாகும்; குற்றங்களை நீக்கிக்கொள்ள முயல்வது வெளி யீட்டுக் கழகத்தாரின் வேலையாகும்; அதற்கான உதவி புரிவது தமிழறிஞர் புரிய வேண்டிய அரும்பணியாகும். எல்லாவகை யிலும் இந் நூல் சிறப்புற்று விளங்கச்செய்ய யாவரும் முன் வருவார்களாக.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

1948 இல் நெல் உதவி அருளிய பெருமக்கள்.

மேலமாகாணம்

திருவாளர்கள்	க.	ம.
ஸ்ரீ. கிருட்டினசாமி வன்னியர்	1	0

கருந்திட்டைகுடி

கு. இராமசாமி பிள்ளை	10	0

பள்ளியகரம்

இராமசாமி ரெட்டியார்	2	0
கோபாலசாமி நாயுடு	1	0
நா. அ. குழந்தைவேல் பிள்ளை	2	0
R. வேணுகோபால நாயுடு	1	0
தி. இராதாகிருட்டின நாயடு, பி. ஏ., பி. எல்.	4	0

குளமங்கலம்

சு. காமாட்சியா பிள்ளை முதலியவர்கள்	12	0

குருங்களூர்

M. சிங்காரம் பிள்ளை, (மாநோம்புச்சாவடி)	6	0
சிதம்பரத் தஞ்சைராயர்	2	0
சிவசாமித் தஞ்சைராயர்	0	6
கு. தங்கப்பாத் தஞ்சைராயர்	1	0

பசுபதிகோயில்

P. தியாகராசக் காடுவராயர்	4	0
சிதம்பர சுவாமிகள்	2	0

கூடலூர்

திருவாளர்கள்	க.	ம.
சி. செங்கமல ஆச்சாரியார்	0	3
சுபேதார் மேசர் சிவசாமித் தஞ்சைராயர்	2	0
க. சுப்பையா வன்னியர்	1	0
பொ. சொ. வீரபத்திர பிள்ளை	1	0
த. சுப்பையா பிள்ளை	0	2
ரா. முத்தையாத் தஞ்சைராயர்	0	3
அ. சதாசிவம் பிள்ளை	0	4
நாராயணசாமி பிள்ளை	0	3
சா. சுப்புக் குருக்கள்	0	3
ச. சச்சிதாநந்தச் சோழகர்	0	6
கோ. வீரையாத் தஞ்சைராயர்	0	3
B. கோவிந்தராசத் தஞ்சைராயர்	0	3
மருதையாக் கண்டியர்	0	3
நாராயணசாமிச் சேதிராயர்	0	3
சின்னத்தம்பிக் கோதண்டப்பிரியர்	0	3
அ. மீனாட்சிசுந்தரம் செட்டியார்	2	0
உ. கோவிந்தராசத் தேவர்	1	0
கு. நாராயணசாமி பிள்ளை	0	3

அம்மன் பேட்டை

சதாசிவம் பிள்ளை	1	0
வேங்கடாசலம் பிள்ளை	0	6
S. இரத்தன ஆச்சாரியார்	1	0
S. மருதையா பிள்ளை	1	0
R. குஞ்சிதபாதம்	0	6
இரகுநாத பிள்ளை	0	3
மஞ்சையாப் பிள்ளை	2	0
நடேச பிள்ளை	2	0
சிவசாமி மட்டையர்	0	6
செயராமையர்	0	4
பட்டாபிராமர்	0	3
வேங்கடாசல வேணுடையார்	2	0
பரமசிவம் பிள்ளை	1	0
சோமு தென்கொண்டார்	0	3

அன்னப்பன்பேட்டை

திருவாளர்கள்	க.	ம.
அ. து. சாமிநாத பிள்ளை	1	0
S. இரத்தினசாமி பிள்ளை	1	0
வை. சிவசாமி பிள்ளை	1	0
கோபாலசாமி பிள்ளை	0	6
A. M. சபாபதி பிள்ளை	1	6
சம்பந்தமூர்த்தி பிள்ளை	0	6
சொ. பிரம பிள்ளை	1	0
நடேச பிள்ளை	0	6
இராமசாமி பிள்ளை	1	6
பக்கிரி அம்பலகாரர்	0	6
மெய்யப்பன் அம்பலகாரர்	0	6
வீரன் அம்பலகாரர்	0	3
மா. உத்தராபதிப் பிள்ளை	0	3
ச. இரத்தினம் பிள்ளை	0	3
கு. வீரப்பிள்ளை	1	0
கோவிந்தசாமி பிள்ளை	1	0
மு. பேராயிரம் பிள்ளை	1	0
சச்சிதாநந்தம் பிள்ளை	1	0
கோ. சண்முகசுந்தரம் பிள்ளை	1	0
கோ. இராசகோபால பிள்ளை	0	6
பகவதியா பிள்ளை	0	3
சோமுப் பிள்ளை	0	3
கு. அண்ணாமலைப் பிள்ளை	0	6
அய்யாப் பிள்ளை	0	9
அப்பாராசப் பிள்ளை	0	3

வயலூர்

S. சாமிநாத மூப்பனார்	1	6
N. சங்கர மூப்பனார்	0	6
சுப்பராய மூப்பனார்	0	3
திரவியசாமி நாடார்	0	3
இராமசாமிக் கோனார்	0	3
A. G. இருதயசாமி நாடார்	0	2

தஞ்சை

திருவாளர்கள்	க.	ம.
P. சாமிநாத பிள்ளை	2	0
கோ. சிங்காரம் பிள்ளை, மூக்குக் கண்ணுடிக் கடை	1	0
இ. கோவிந்தசாமி ஜெட்டியார்	1	0

கள்ளர்பிரம்பூர்

க. நல்லமுத்து நாட்டார்	15	0
R. பாலகுரு நாட்டார்	2	0
P. மாதுசாமி நாட்டார்	0	6
A. சுப்பிரமணிய நாட்டார்	0	3
K. ஏகாம்பர நாட்டார்	1	0
A. பழனிமாணிக்க நாட்டார்	1	0
N. தண்டாயுதபாணி நாட்டார்	2	0
S. தில்லைமாணிக்க நாட்டார்	0	10
ந. இராமதாச நாட்டார்	0	3
M. சிவந்தலிங்க நாட்டார்	0	7
V. அண்ணுமலை நாட்டார்	0	6
V. அப்பாவு நாட்டார்	0	6
V. தண்டாயுதபாணிக் கண்டியர்	0	6
U. முத்துக்குமரசாமி நாட்டார்	0	6
S. சொக்கைய நாட்டார்	0	3
S. பழனியாண்டி நாட்டார்	0	3
மவுன அம்பலராச நாட்டார்	0	3
சுடலைமுத்து நாட்டார்	0	6
பொன்னையா பிள்ளை	0	6
A. மாரிமுத்து பிள்ளை	0	3
M. சுப்பண்ணு நாட்டார்	1	0

திருவாலம்பொழில்

M. C. T. M. சிதம்பரம் செட்டியார்	2	0

புனவாசல்

T. கோவிந்தசாமி பிள்ளை	5	0
R. வேங்கடாசலம் பிள்ளை	1	0
R. சுந்தரம் பிள்ளை, V. M.	2	0
N. நடேச பிள்ளை	4	0
N. அருணுசலம் பிள்ளை	1	0
P. C. பஞ்சாபகேசன்	2	0

வெள்ளாம்பிரம்பூர்

திருவாளர்கள்	க.	ம.
து. மாணிக்க நாட்டார்	1	0
A. சந்திரகாசக் காடவராயர்	1	0
A. சைவராசுக் காடவராயர்	0	6
அரங்கசாமி நாட்டார்	0	6
இரத்தனசாமி நாட்டார்	0	3
N. தேசிக மூவராயர்	0	6
கலியசுந்தர நாட்டார்	0	3
க. அருணாசலம் பிள்ளை	0	3
சா. கருப்புசாமி உடையார்	0	3

தேவன்குடி

B. சுந்தரராச பிள்ளை	1	0

மானங்கோரை

கன்னைய நாயுடு	2	0
மு. கோபாலசாமி பிள்ளை	1	0
த. பெருமாள் பிள்ளை	2	0
த. வீரப் பிள்ளை	2	0
R. சிவசாமி பிள்ளை	2	0
R. ரெத்தினம் பிள்ளை	2	0
R. சாமிநாத பிள்ளை	2	0
ந. துரைராச பிள்ளை	2	0
ந. சாமிநாத பிள்ளை	1	0
குருவாடி, அன்வர் சாகிபு	2	0

ஆற்றூர்

R. கோபாலசாமி பிள்ளை	0	6
R. இருட்டினசாமி பிள்ளை	2	0
அ. பக்கிரியா பிள்ளை	0	6
முத்துக்குமரசாமி பிள்ளை	0	6
P. கோவிந்தராச பிள்ளை	0	6

கீழக் களக்குடி

கோபாலசாமி வன்னியர்	0	6
S. பரமசிவம் பிள்ளை	0	6

நன்றி யுரை.

தமிழ்ப் பொழில் ஐந்தாவது மலர் பூத்த பின்னர் நம் சங்கத்திற்குப் பெரும் பொருள் உதவிய அன்பர்களை மிக மகிழ்ச்சியுடன் குறிக்கின் றோம். இவ் வன்பர்கள் எல்லாருக்கும் சங்கத்தின் நன்றி யுரித்தாகும்.

			ரூ.
திரு.	இராவு பகதூர் அ. வீரையா வாண்டையார் அவர்கள் பெருநிலக்கிழவர், பூண்டி.		1050
,,	R. கந்தசாமி மூப்பனார் பி. ஏ., பி. எல்., பெருநிலக்கிழவர், வழக்கறிஞர், கும்பகோணம்.	,,	150
,,	T. A. M. பாலசுந்தரஞ் செட்டியார் & Sons அறுவை வணிகர், கும்பகோணம்.	,,	111
,,	M. C. S. இரத்தனசபாபதிச் செட்டியார் நகராண்மைக் கழகத் தலைவர், பெருநிலக் கிழவர், கும்பகோணம்.	,,	101
,,	K. A. M. சண்முகவேல் பிள்ளை இரும்பு வணிகர், கும்பகோணம்.	,,	101
,,	T. V. கிருட்டினன், பி. எஸ்சி. (Hons.) தாவரநூல் விரிவுரையாளர், தூய. யோசேப்பு கல்லூரி, திருச்சிராப்பள்ளி.	,,	100
,,	R. விசயராகவலு நாயடு பெருநிலக்கிழவர், ஏனங்குடி.	,,	100
,,	K. இராமச்சந்திர நாயடு பெருநிலக்கிழவர், ஏனங்குடி.	,,	100
,,	L. K. காளியப்பத் தேவர் K. M. S. Rice Mill, அந்தணர் பேட்டை நாகபட்டினம்.	,,	100
,,	V. P. G. கோவிந்தராசப் பிள்ளை பெருநிலக்கிழவர், பாப்பாகோவில், அந்தணர் பேட்டை, நாகபட்டினம்.	,,	100
,,	A. அப்துல் வகாப் வாணிபம், கூத்தாநல்லூர்.	,,	100

திரு.	A. V. நாராயணசாமி பிள்ளை பெருநிலக்கிழவர், வாணுதுறை வடக்குத்தெரு, கும்பகோணம்.	அவர்கள்	100
,,	நெ. சா. இராமலிங்க முதலியார் பெருநிலக்கிழவர், நெடும்பலம்.	,,	100
,,	பெரியவேல் நெற்பொறி யுடையார்	,,	100
,,	V. S. & Sons, கும்பகோணம்	,,	100
,,	எம். சூரியமூர்த்திச் செட்டியார் பி.ஏ., பி.எல்., வழக்குரைஞர், நாகூர்.	,,	100
,,	S. Rm. சடகோபால பிள்ளை நெல் வணிகர், கும்பகோணம்.	,,	51
,,	S. உத்தண்டிச் செட்டியார் மளிகை, கும்பகோணம்.	,,	51
,,	N. L. சின்னகிருட்டின நாயடு வாணிபம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்.	,,	50
,,	L. R. கணபதித் தேவர் பெருநிலக்கிழவர், சிவன்கோவில் வடக்குவீதி, வெளிப்பாளையம்.	,,	50
,,	R. M. சோமசுந்தரத் தேவர் நிலக்கிழவர், கீழ்க்காடு, முத்துப்பேட்டை.	,,	50
,,	N. L. வேங்கடசாமி நாயடு நெல் வணிகர், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்.	,,	35
,,	N. L. வரதராசலு நாயடு வாணிபம், தஞ்சாவூர்.	,,	30
,,	R. முகம்மது இபுராகீம் இராவுத்தர் மன்னார்குடி.	,,	30
,,	D. சொக்கலிங்கம் செட்டியார் மாதுளம் பேட்டை, கும்பகோணம்.	,,	25
,,	R. தண்டாயுதபாணிச் செட்டியார் நாகபட்டினம்.	,,	25

திரு.	க. சிவலிங்க ராயர் திருநெல்லிக்காவல்.	அவர்கள்	25
,,	D. சுப்பையா மன்னார்குடி.	,,	25
,,	M. இராமையா ஐயங்கார் உக்கிரபாண்டியம்.	,,	25
,,	G. கோபாலகிருட்டிணையர் ஆதிச்சபுரம்.	,,	25
,,	N. L. B. ஆழ்வார்சாமி நாயடு வாணிபம், கருந்திட்டைக்குடி.	,,	20
,,	சா. மாசிலாமணி பிள்ளை மன்னார்குடி.	,,	20
,,	K. முருகையா பிள்ளை மன்னார்குடி.	,,	20
,,	இரத்தனஞ் செட்டியார் அறுவை வணிகர், கண்டர் கோட்டை.	,,	10
,,	K. R. இரகுநாத ராயர் கும்பகோணம்.	,,	10
,,	K. தண்டாயுதபாணிப் பிள்ளை சத்திரம் வரிதண்டற் கண்காணியாளர், கும்பகோணம்.	,,	10
,,	Dr. P. M. சொக்கலிங்கம் பிள்ளை நாகபட்டினம்.	,,	10
,,	M. முருகைய பிள்ளை மழுவராய நல்லூர்.	,,	10
,,	கோ. சஞ்சீவிராசு ஆலத்தம்பாடி.	,,	5
,,	சவுரிமாசிலாமணி பொன்னிரை.	,,	5